SEC | இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# உறுதிப்பாட்டுடனான வளர்ச்சி



ஆண்டறிக்கை 2013

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| குறிக்கோள் / செயற்பணிக்கூற்று | 01 |
| தலைவரின் மீளாய்வு | 04 |
| பொறுப்பதிகாரியின் மீளாய்வு | 08 |
| ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் | 14 |
| சிரேஷ்ட முகாமைத்துவம் | 20 |
| பாரிய பொருளாதார மீளாய்வு | 22 |
| மூலதனச் சந்தை மீளாய்வு | 25 |
| முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் | 29 |
| செயல்முறை மீளாய்வு | 35 |
| மேலதிகத் தகவல்கள் | 65 |
| செய்கைப் பத்திரம் | 70 |

**நிதியியல் அறிக்கைகள் - இ.பி.ப.ஆ.**

| | |
|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 74 |
| நிதி நிலைமைக் கூற்று | 77 |
| நிதிச் செயற்திறனின் கூற்று | 78 |
| ஒதுக்கங்களின் மாற்றங்களுக்கான கூற்று | 79 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 80 |
| காசுப் பாய்ச்சல் கூற்று - தீர்வை நிதியம் | 81 |
| காசுப் பாய்ச்சல் கூற்று - நட்ட ஈட்டு நிதியம் | 82 |
| கணக்கீட்டுக் கொள்கைகள் | 83 |
| நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 86 |

**நிதியியல் அறிக்கைகள் - தீ.உ.நி.**

| | |
|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 97 |
| நிதி நிலைமைக் கூற்று | 100 |
| நிதிச் செயற்திறன் கூற்று | 101 |
| தேறிய சொத்துக்களின் மாற்றங்களுக்கான கூற்று | 102 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 103 |
| நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 104 |
| கூட்டாண்மைத் தகவல்கள் | பின்புற உறையின் உட்பக்கம் |




# உறுதிப்பாட்டுடனான வளர்ச்சி

மாற்றங்கள் மற்றும் சவால்களைச் சகித்துக்கொள்வதற்கான அடித்தளம் உறுதிப்பாடாகும். எதிர்கால மூலதனச் சந்தை வளர்ச்சிக்கு உறுதிப்பாடானது எமது அடித்தளமாகும். இந்த உறுதிப்பாட்டின் அடித்தளமே 2013 க்கான எமது செய்தியாகும் - சந்தைத் தளம்பல்களைச் சாந்தப்படுத்துவதற்கு மற்றும் நிலைநிறுத்தக்கூடிய எதிர்கால வளர்ச்சிக்கான பாதையை அமைப்பதற்கான உறுதிப்பாடு மூலதனச் சந்தைக்குள் புகுத்தப்படுவதனை கண்ட ஓர் சவால்மிக்க ஆனால் ஆக்கபூர்வமான வருடம் ஆகும். இவ்வாண்டில் நாம் ஓர் நவீன முறைமைப்படுத்தல் வடிவமைப்பு, திடமான ஆளுகைப் பொறிமுறை மற்றும் தொலைநோக்கையுடைய திட்டமிடல்கள் ஊடாக ஓர் எதிர்கால செழுமைக்கான உறுதியான அடித்தளத்தைக் கட்டியெழுப்பியுள்ளோம். இவ்வடித்தளமானது நியாயமான, வெளிப்படையான மற்றும் செயற்திறனான முதலீட்டுச் சூழலுக்காக நிறுவப்பட்டுள்ளது. எதிர்கால செழுமைக்கான பிரயாணத்தில் எம்முடன் இணைந்துகொள்ளுங்கள்.

# குறிக்கோள்

தெற்காசியாவிலேயே செயற்திறன் மிக்கதும், திறமையானதும் மற்றும் விரைவும் விழிப்பும் கொண்ட பிணையங்கள் சந்தை முறைமைப்படுத்தலுக்கு முன்மாதிரியான முறைமைப்படுத்துபவராக வருவது

# செயற்பணிக்கூற்று

நியாயமானதும், திறமையானதும், ஒழுங்கானதும் மற்றும் வெளிப்படையானதுமான ஓர் மூலதனச் சந்தையை ஊக்குவித்தலும், அபிவிருத்தி செய்தலும் மற்றும் பேணிப்பாதுகாத்தலும்



# முகாமைத்துவத்

# தகவல்கள்

# தலைவரின் மீளாய்வு



நிறைவடைந்த 2013 ஆம் ஆண்டானது சுருக்கமாகச் சொல்வதாயின் எதிர்பார்ப்பு நிறைந்த ஆண்டாகவும் அத்துடன் பல விதத்தில் சவால்கள் நிறைந்ததாகவும் காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டானது கடந்த காலத்தில் முழுமையான பிற்போக்கையுடைய நிதியியல் சிக்கல்களின் தாக்கத்துடன் பலதரப்பட்ட நிகழ்வுகளையும் கொண்டிருந்தது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, ஐரோப்பா மற்றும் சீனா ஆகியவற்றின் நிதானமான ஆனால் ஓரளவு மேலான மீளெழுச்சியானது அநேகமான வெளித்தோன்றும் பொருளாதாரங்களுக்குச் சென்றதன் மத்தியிலும் ஆசியப் பொருளாதாரங்களானது சில கவர்ச்சிகரமான வளர்ச்சியினைக் கண்டன.

மறுபுறத்தில் இலங்கை அதன் உயர்வடையும் பாரியபொருளாதார உந்துதலைத் தொடர்ந்தது. இலங்கை மத்திய வங்கியின் எதிர்காலத் திட்டத்தில் அழுத்திக் கூறப்பட்ட உயர்வான பாதைக்கு அமைவாக 2013 இல் மொத்த உள்@ர் உற்பத்தி (மொ.உ.உ.) 7.3% ஆனால் விரிவடைந்தது. 2013 இல் உள்ளவாறான மேலிருந்து கீழ்நோக்கிய ஆய்வானது அனைத்து பொருளாதாரக் குறிகாட்டிகளும் ஓர் சாத்தியமான சூழலை வெளிப்படுத்துவதனை குறியிட்டுக்காட்டியது. சர்வதேச நாணய நிதியத்தின் (ச.நா.நி.) பிரகாரம் இலங்கையின் பொருளாதாரமானது 2014 முதல் 2019 வரையான காலப்பகுதியில் 6.5% முதல் 7% வரை வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதே காலப்பகுதியில் பிராந்தியத்தில் 6.5% முதல் 6.7% வளர்ச்சியினை எதிர்பார்க்கும் ஆசியாவிலுள்ள ஏனைய அபிவிருத்தியடையும் பொருளாதரங்களுடன் ஒப்பிடும்போது இது சாதகமானதாகக் காணப்படுகின்றது.

ஒட்டுமொத்த சாத்தியமான எதிர்நோக்கின் மத்தியிலும், முக்கியமான சவால்கள் மற்றும் சிரத்தைகள் இன்னும் காணப்படுகின்றன. இலங்கை அதன் முழுவளர்ச்சியடைந்த மத்தியதர வருமான அந்தஸ்தினை நிலைநிறுத்தவேண்டுமாயின் தற்போது 31% ஆகக் காணப்படுகின்ற மொத்த உள்@ர் உற்பத்தியின் முதலீட்டு வீதமானது 2016 இல் மொ.உ.உ. இன் 33% ஆக அதிகரித்தல் வேண்டும். மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களில் அழுத்தத்தினை ஏற்படுத்தும் சராசரி வர்த்தகப் பற்றாக்குறை அமெரிக்க டொலர்கள் 9.4 பில்லியனாக உள்ளமை மற்றும் ரூபா 129 ஐச் சுற்றி வட்டமிடும் நாணயமாற்று விகிதம் என்பன தொடர்ச்சியாக தாமதப்படுத்தும் ஏனைய சிரத்தைகளாகும். 2004 இல் காணப்பட்ட அமெரிக்க டொலர்கள் 230 பில்லியன் வெளிநாட்டு நேரடி முதலீட்டு (வெ.நே.மு.) உறுப்பானது 2013 இல் அமெரிக்க டொலர்கள் 1 பில்லியன் அதிகரிப்பினைக் காட்டியபோதிலும் இப்பெறுமதியானது இன்னும் கணிசமான அளவு முன்னேற்றமடைய வேண்டியுள்ளது.

இந்தச் சவால்களுக்கு மத்தியிலும் இ.ம.வ. வளர்ச்சியினை முன்னெடுத்துச் செல்லும்பொருட்டு ஓர் ஊக்கமூட்டும் நாணயக் கொள்கையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்தது. மிகவும் குறிப்பிடத்தக்க முக்கியமான பாரிய பொருளாதார அளவீடுகளுக்கு அதற்குரிய மதிப்பு வழங்கப்பட்டது. பணவீக்கமானது தனி எண்ணாகப் பராமரிக்கப்பட்டதுடன் முக்கியமான கொள்கை வீதங்களான நிலைத்த வைப்பு வசதி வீதமானது (நி.வை.வ.வீ.) 6.50% ஆகவும் நிலைத்த கடனளித்தல் வசதி வீதமானது (நி.க.வ.வீ.) 8.50% ஆகவும் தாராளமான வலயத்தில் வைக்கப்பட்டிருந்தன.

மொத்தமாக 28 தொகுதிக்கடன் வழங்கல்கள் காணப்பட்டதுடன் இவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 68.2 பில்லியன் ஆகும். இது ஓர் வருடத்தில் பதிவுசெய்யப்பட்ட ஆக உயர்ந்த தொகையாகும். இ.பி.ப.ஆ. 2013 வரவுசெலவுத் திட்டத்தில் பிடித்துவைத்தல் வரியினை நீக்குமாறு அரசாங்கத்திற்கு வெற்றிகரமாக மேற்கொண்ட பிரதிநிதித்துவத்தின் பலனாக இக்குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை அடையக்கூடியதாயிருந்தது.



**நாலக கொடஹேவா**
தலைவர்

# தலைவரின் மீளாய்வு

இத்துடன் இணைந்து இலங்கையின் வெளிவாரி நோக்கமும் உயர்வான சாத்தியமாகக் காணப்படுகின்றது. பொருளாதார சுதந்திரச் சுட்டியில் இலங்கையின் அந்தஸ்தான 81 ஆவது இடம் அதனை தெற்காசியாவில் உயர்ந்த நிலையில் வைத்துள்ளது. உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டியில் இலங்கையின் பெறுமதியான 65 அதனை தெற்காசியாவில் இரண்டாம் இடத்தில் வைத்துள்ளது.

மூலதனச் சந்தைகளின் செயற்திறனானது பலதரப்பட்டதாகக் காணப்படுகின்றது. ஆ.பொ.வ. ஊடான உரித்துடமைப் பட்டியலிடல் ஒருமையாகக் காணப்பட்டாலும் பட்டியிலிடப்பட்ட கடன் சந்தையானது கணிசமான அளவு உயர்வினைக் காட்டியது. மொத்தமாக 28 தொகுதிக்கடன் வழங்கல்கள் காணப்பட்டதுடன் இவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 68.2 பில்லியன் ஆகும். இது ஓர் வருடத்தில் பதிவுசெய்யப்பட்ட ஆக உயர்ந்த தொகையாகும். இ.பி.ப.ஆ. 2013 வரவுசெலவுத் திட்டத்தில் பிடித்துவைத்தல் வரியினை நீக்குமாறு அரசாங்கத்திற்கு வெற்றிகரமாக மேற்கொண்ட பிரதிநிதித்துவத்தின் பலனாக இக்குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை அடையக்கூடியதாயிருந்தது.

செயற்திறனைப் பொறுத்தளவில் 2012 இல் காணப்பட்ட எதிர்மறையான வளர்ச்சியான 7.1% த்துடன் ஒப்பிடும்போது அனைத்து பங்கு விலைச்சுட்டியானது (அ.ப.வி.சு.) 2013 இல் 4.8% நேர்மறையான வளர்ச்சியினை அடைந்தது. சந்தையின் விளைவுகள் மனதில் பதியத்தக்கதாக இல்லாதபோதிலும் அது முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட பயனற்ற எதிர்மறையான விளைவிலிருந்து நேர்மறையான வட்டத்திற்கு திரும்பியுள்ளது. வெளிநாட்டவர்களது பங்களிப்பானது வெளிநாட்டுக் கொள்வனவுகளது ஸ்திரமான அதிகரிப்புடன் உயர்வடையும் போக்கினைக் காட்டியது. மிகவும் முக்கியமாக, வெளிநாட்டவர்களது நிலையானது 2011 இல் காணப்பட்ட தேறிய விற்பனையான ரூபா 19.0 பில்லியனிலிருந்து 2012 இல் தேறிய கொள்வனவாக ரூபா 38.6 பில்லியன் மற்றும் 2013 இல் தேறிய கொள்வனவாக ரூபா 22.7 பில்லியனுக்கு உருமாற்றம் அடைந்தது. ஏனைய வெளித்தோன்றும் சந்தைகளுடன் ஒத்தாற்போல் விலை/உழைப்பு விகிதமானது 15 மடங்காகக் காணப்பட்டது. மொத்தமாக 2008 இலிருந்து 2013 வரையான காலப்பகுதிக்கு

இச்செயற்பாடானது ஒரு பகுதியளவிலேயே இடம்பெற்றுள்ளது என நாம் எண்ணுகின்றோம். இ.பி.ப.ஆ. அதன் இரட்டிப்பு தோரணைக்கான பொறுப்பாண்மையினை முழுவதுமாக கவனத்திலெடுத்து மிகவும் தெளிவான நோக்கத்துடன் செயலிலிறங்கியுள்ளது.

கொ.ப.ப. இன் விளைவானது சராசரியாக 32% ஆகக் காணப்பட்டது. இதே காலப்பகுதியில் வெளித்தோன்றும் சந்தைகளது 12%த்துடனும் எல்லைப்புறச் சந்தைகளது 4%த்துடனும் ஒப்பிடும்போது இது மிகவும் சாதகமாகக் காணப்படுகின்றது.

நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதியானது 2012 இல் காணப்பட்ட ரூபா 31 பில்லியனுடன் ஒப்பிடும்போது 31.12.2013 இல் கணிசமான அளவு அதிகரிப்பான 75% உடன் ரூபா 54 பில்லியனாகக் காணப்பட்டது. தேசிய வரவுச் செலவுத் திட்டத்தினால் வழங்கப்பட்ட சலுகைகள் மற்றும் அனைத்து பங்காளிகளினாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் 2013 இல் இத்துறையின் வளர்ச்சியில் கணிசமான ஏற்றத்தை ஏற்படுத்தியது.

மிகவும் முக்கியமாக, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது (இ.பி.ப.ஆ.) அதன் இரட்டிப்பு அந்தஸ்தான மூலதனச் சந்தையின் “முறைமைப்படுத்துபவர் மற்றும் அபிவிருத்தியாளர்” ஆக துறைசார் பங்காளிகளுடன் கலந்தாலோசித்து மூலோபாயங்க@டாக மூலதனச் சந்தையினை மேம்படுத்துவதற்காக முக்கியமான நடைமுறைகளை மேற்கொண்டது. இவை சந்தையின் எதிர்கால போக்கிற்கான அடித்தளத்தினை நிறுவுதல், உட்கட்டமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சட்டவாக்க நடவடிக்கைக@டாக முதலீட்டு செயல்முறையினை மிகவும் பயனுள்ளதாக்குதல், முதலீட்டாளர் நம்பகத்தன்மையினைக் கட்டியெழுப்புதல் மற்றும் இதன் பயனாக சந்தை நேசமுடைய ஆனால் நீண்டகால சட்டவாக்கத்தினைக் கருத்திற்கொண்டு பங்குபற்றுதல் என்பனவாகும். இதற்கும் மேலாக மும்பாய், துபாய் மற்றும் ஹொங்கொங் ஆகிய நாடுகளில் முதலீட்டாளர் மன்றச் செய்முறையினூடாக சந்தையின் உலகளாவிய புலப்படுத்தல்களை மேம்படுத்துவதிலும் உரிய கவனம் செலுத்தப்பட்டது.

முக்கியமான மதிப்பீட்டின்படி, 2013 ஆம் ஆண்டானது சந்தையை மாற்றியமைப்பதற்கான திட்ட விவரணமென அழைக்கப்பட்ட மூலோபாயச் செயல்முறைத் திட்டம் மேலும் நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்ததாகக் காணப்பட்டது. பரஸ்பரமற்ற உரித்துவம் பகிரப்பட்ட பரிமாற்றகமாக மாற்றும் செயல்முறையானது அதன் வழக்கமான அனுகூலங்களான சந்தையின் போட்டித்தன்மை மற்றும் சந்தையின் பயனுறுதியினை அதிகரித்தல் தவிர கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தினை இலாப நோக்கற்ற நிறுவனத்திலிருந்து இலாப நோக்கையுடைய நிறுவனமாக மாற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனுடன் இணைந்து, மத்திய எதிர் தரப்பினர் மற்றும் விநியோகம் எதிர் கொடுப்பனவு என்பவற்றை உள்ளடக்கிய இடர்நேர்கை முகாமைத்துவ முறையும் செயற்படுத்தப்படும். இம்முறையானது கொடுப்பனவுக்கு உத்தரவாதம் அளிப்பது மாத்திரமன்றி சுருக்க விற்பனைக்கு அவசியமான முன்நிபந்தனையாகவும் இதற்கும் மேலாக கட்டமைக்கப்பட்ட முதலீட்டுக் கருவிகள் மற்றும் மூலாதாரப் பிணையங்கள் ஆகியவற்றின் அறிமுகத்திற்கும் வசதியளிக்கும்.

இருப்பினும் இச்செயற்பாடானது ஒரு பகுதியளவிலேயே இடம்பெற்றுள்ளது என நாம் எண்ணுகின்றோம். இ.பி.ப.ஆ. அதன் இரட்டிப்பு தோரணைக்கான பொறுப்பாண்மையினை முழுவதுமாக கவனத்திலெடுத்து மிகவும் தெளிவான நோக்கத்துடன் செயலிலிறங்கியுள்ளது. அவையாவன, மோர்கன் ஸ்டான்லி வெளித்தோன்றுச் சந்தை சுட்டியில் இடம்பிடிப்பதன் மூலம் உலகளாவிய அங்கீகாரத்தினைப் பெறுவதுடன் இதன் காரணமாக தற்போதைய எல்லைப்புறச் சந்தைச் சுட்டியிலிருந்து தரமுயர்த்தப்படுதல், சந்தையின் பரிமாணம் மற்றும் விசாலத்தினை புதிய பட்டியல்க@டாக அதிகரித்தல் மற்றும் ஏனைய நோக்கங்களுக்கிடையே சந்தை மூலதனவாக்கத்தினை மொ.உ.உ இன் 50% ஆக இலக்குவைத்தல் என்பனவாகும்.

சாராம்சமாக, மிகவும் முக்கியமாக நிதி திட்டமிடல் அமைச்சரான மாண்புமிக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும், திறைசேரியின் பிரதிச் செயலாளர் கலாநிதி பி.பி. ஜயசுந்தர மற்றும் அவரது உத்தியோகத்தர்களுக்கும் இவ்வாண்டில் அவர்கள் எமக்களித்த வழிகாட்டல்களுக்கும் உறுதுணைக்கும் நாம் நன்றி செலுத்துகின்றோம். ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் எந்நேரமும் எனக்களித்த அவர்களது பூரண ஒத்துழைப்பிற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் இச்சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநருக்கு அவரது தொடர்ச்சியான உறுதுணைக்கும், கொ.ப.ப. இன் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை, பங்குத்தரகுக் கம்பனிகள், நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகள் மற்றும் இக்காலப்பகுதியில் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்பாற்றிய அனைத்து சந்தைப் பங்குபற்றுனர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இறுதியாக பொறுப்பதிகாரி / பிரதிப் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள் மற்றும் இ.பி.ப.ஆ. இன் ஊழியர்களுக்கு அவர்கள் தொடர்ச்சியாக இ.பி.ப.ஆ. இன் நியமங்களைப் பேணுவதில் மேற்கொண்ட தலைசிறந்த செயலாற்றல் மற்றும் மூலதனச் சந்தையை முன்னெடுப்பதற்கான நோக்கங்களை உருவாக்கியதற்கும் நிறைவேற்றியதற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நிறைவாக 2013 நிதியாண்டானது சந்தையினால் காட்சிப்படுத்தப்பட்ட மெச்சத்தக்க ஸ்திரத்தன்மையுடைய ஆண்டாகும். மூலதனச் சந்தையை அபிவிருத்திசெய்து அதன்மூலம் பொருளாதாரத்திற்கு வளர்ச்சி மற்றும் செழுமையுடைய யுகத்தினைக் கொண்டுவருவதற்காக நாம் ஆரம்பித்த முன்னெடுப்புகளை தொடரமுடியும் என இ.பி.ப.ஆ. எதிர்நோக்குகின்றது.



**கலாநிதி நாலக கொடஹேவா**
தலைவர் - இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

20 மே 2014

# பொறுப்பதிகாரியின் மீளாய்வு



2013 ஆம் ஆண்டானது 2012 இல் பரந்திருந்த சவால்கள் மற்றும் நிச்சயமற்றதன்மைகளிலிருந்து உலகளாவிய மீட்பின் நம்பிக்கையினால் உந்தப்பட்டது. அபிவிருத்தியடைந்த மற்றும் வெளித்தோன்றும் நாடுகளின் பொருளாதார அக்கறைகளின் மத்தியிலும் பொருளாதார மீட்புக்கான உலகளாவிய வழிமுறையானது சரியான பாதையில் செல்வதாக அநேகமான பொருளியல் ஆய்வாளர்களது கருத்து காணப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தளவில் யுத்தத்தின் பின்னரான சாத்தியமான பொருளாதாரக் காரணிகளின் நிமித்தம் மொ.உ.உ. ஆனது அதன் புதிய வளர்ச்சிப் போக்கினைத் தொடர்ந்தது. இந்த உந்துகைக்கேற்ப அரசாங்கமானது விரிவாக்கத்தினை முடுக்கி விடுவதற்காக அதன் பூரணமான பாரியபொருளாதார கொள்கைகளைத் தொடர்ந்தது. வளர்ச்சிக்குத் துணைபுரிவதற்காக வட்டிவீதங்கள் குறைக்கப்பட்டு பணவீக்கம் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டதுடன் வங்கிகளின் சட்டரீதியான ஒதுக்க வீதமும் குறைக்கப்பட்டது. இந்தச் சூழலில் மொ.உ.உ. ஆனது பாராட்டத்தக்கவாறு 7.3% ஆல் விரிவடைந்தது. இது ஓரளவு சாதகமற்ற காலநிலைகளின் பின்னணியிலும் இதற்கும் மேலாக உயர் அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் மீட்பில் காணப்பட்ட அசைவற்ற நிலைமையிலும் பெறப்பட்ட வளர்ச்சியாகும்.

பங்குச் சந்தையானது 2013 இல் ஓர் திடமான வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. அளவீட்டுச் சுட்டியான அனைத்து பங்கு விலைச் சுட்டியானது (அபவிசு) 4.8% வளர்ச்சியினையும் பாரிய மூலதனவாக்கத்தையுடைய எஸ் அன்ட் பி எஸ்.எல். 20 சுட்டியானது 5.8% அதிகரிப்பினைப் பதிவு செய்தது. அபவிசு ஆனது வருடத்தின் இறுதியில் 5,912.8 புள்ளிகளாகவும் எஸ் அன்ட் பி 20 சுட்டியானது 3,263.9 புள்ளிகளாகவும் நிறைவடைந்தன. 2012 இல் அ.ப.வி.சு. எதிர்மறையான வளர்ச்சியாக 7.1% ஐப் பதிவுசெய்தது குறிப்பிடத்தக்கது. எஸ் அன்ட் பி 20 சுட்டியானது 2012 இல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் (கொ.ப.ப.) மொத்தச் சந்தை மூலதனவாக்கம் 2013 ஆம் ஆண்டின் நிறைவில் ரூபா 2,459.9 பில்லியானாகக் (அமெரிக்க டொலர்கள் 18.8 பில்லியன்) காணப்பட்டது. இது முன்னைய வருடத்தின் இறுதியில் காணப்பட்ட ரூபா 2,167.6 பில்லியனுடன் ஒப்பிடும்போது 13.4% அதிகரிப்பாகும்.

2013 ஆம் ஆண்டின் மொத்தப் புரள்வாக ரூபா 200.4 பில்லியன் பதிவுசெய்யப்பட்டதுடன் தினசரிச் சராசரிப் புரள்வாக ரூபா 828.4 மில்லியன் காணப்பட்டது. மொத்தச் சந்தைப் புரள்வின் 36.1% பங்களிப்பினை வெளிநாட்டு முதலீட்டாளர்களும் எஞ்சிய 63.9% இனை உள்@ர் முதலீட்டாளர்களும் பங்களித்தனர். 2012 ஆம் ஆண்டின் மொத்தப் புரள்வில் வெளிநாட்டு மற்றும் உள்@ர் முதலீட்டாளர்கள் முறையே 24.9% மற்றும் 75.1% பங்களிப்பினை வகித்தார்கள். இ.பி.ப.ஆ. ஏனைய சந்தை பங்குபற்றுனர்களுடன் இணைந்து வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதற்காக மேற்கொண்ட முன்னெடுப்புகள் 2013 இல் அதிகரித்த வெளிநாட்டு முதலீட்டாளர் பங்களிப்பிற்கு துணைசெய்துள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

2013 இல் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தேறிய கொள்வனவாளர்களாக ரூபா 33.9 பில்லியனை தேறிய கொள்வனவாகப் பதிவு செய்துள்ளார்கள். (ரூபா 22.7 பில்லியன்

சட்டமியற்றும் பக்கத்தைப் பொறுத்தளவில் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திற்கான முன்மொழியப்பட்ட திருத்தங்களை வரைவதனை இ.பி.ப.ஆ. முடிவுறுத்தியது. இது நிதி திட்டமிடல் அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஓர் விசேட குழுவினால் தற்போது மீளாய்வு செய்யப்படுகின்றது.

**தம்மிக்க பெரேரா**
பொறுப்பதிகாரி / பிரதி பணிப்பாளர் நாயகம்

# பொறுப்பதிகாரியின் மீளாய்வு

இரண்டாந்தரச் சந்தையிலும் ரூபா 11.1 பில்லியன் முதன்மைச் சந்தையிலும் பதிவு செய்யப்பட்டது). இது கம்பனிகள் கடன் பிணையங்களுக்கு வந்த தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் தவிர்ந்ததாகும்.

2013 இல் ரூபா 119.4 பில்லியன் முதன்மைச் சந்தையில் திரட்டப்பட்டதுடன் இது ஓர் குறிப்பிட்ட வருடத்தில் பதிவு செய்யப்பட்ட சாதனையாகும். 28 கடன் ஆரம்பப் பொது வழங்கல்கள் காணப்பட்டதுடன் ஓர் சாதனைத் தொகையாக ரூபா 68.2 பில்லியன் திரட்டப்பட்டது. 2013 ஆம் ஆண்டுக்கான வரவுச் செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட சலுகையான பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்களில் முதலீடு செய்வதிலிருந்து உழைக்கும் வட்டி வருமானத்தில் 10% பிடித்து வைத்தல் வரி விலக்களிக்கப்பட்டது கடன் சந்தைச் செயற்திறனில் ஓர் கணிசமான சாத்தியமான தாக்கத்தை ஏற்படுத்தியது. 2012 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 75.1 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2013 இல் கடன் வர்த்தகத்தில் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள் மொத்தப் புரள்வாக ரூபா 2.2 பில்லியனைப் பதிவு செய்தது கணிசமான அதிகரிப்பாகும்.

பாரிய ஆசியப் பிராந்தியத்தில் செயற்திறனைப் பொறுத்தளவில் கொ.ப.ப. 5ஆவது இடத்தைப் பிடித்தது. 2013இல் கராச்சி 56% வளர்ச்சி, வியட்நாம் 22% வளர்ச்சி, பர்சா மலேஷியா 12.4% வளர்ச்சி மற்றும் தாய்வான் 11.8% வளர்ச்சியுடன் கொ.ப.ப. இலும் பார்க்க முதனிலை வகித்தன. மறுபுறத்தில் கொ.ப.ப. இன் செயற்திறனானது இந்தியாவின் நெஷனல் பங்குப் பரிமாற்றகத்தின் 3.6% வளர்ச்சி, மும்பாய் பங்குப் பரிமாற்றகத்தின் 3.3% வளர்ச்சி மற்றும் ஹொங்கொங் பங்குப் பரிமாற்றகத்தின் 2.9% வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது முன்னணியில் திகழ்ந்தது.

சந்தைப் பொறிமுறைகளில் சந்தையினது அடிப்படை மதிப்பீடு வெளித்தோன்றும் - எல்லைப்புறச் சந்தை இடைவெளியில் காணப்பட்டது. விலை உழைப்பு விகிதமானது உழைப்பின் 15.9 மடங்காகக் காணப்பட்டதுடன் இது 2012 விலை உழைப்பு மதிப்பீட்டிலிருந்து எவ்வித மாற்றமுமின்றிக் காணப்பட்டது. விலைப் புத்தகப் பெறுமதியானது 2012 இல் காணப்பட்ட 2.1 உடன் ஒப்பிடும்போது 2013 இல் சற்று குறைந்து 2.0 ஆகக் காணப்பட்டது. பங்கிலாப விளைவு வீதமானது 2012 இல் காணப்பட்ட 2.4% இலிருந்து 2013 இல் 2.9% ஆக அதிகரித்துக் காணப்பட்டது. எவ்வாறாயினும் எதிர்கால விலை உழைப்பு விகிதமானது, ரொய்ட்டரினால் அறிவிக்கப்பட்டவாறு 12.5 மடங்காகக் காணப்படுகின்றது.

தேசிய வரவு செலவுத் திட்டமானது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளில் முதலீடு செய்யும் செயல்முறையினை எளிமையாக்கியதுடன் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளது இலாபம் மற்றும் வருமானத்திற்குப் பிரயோகிக்கப்படும் வரியானது 10% ஆகக் குறைக்கப்பட்டது. இச்சலுகைகளும் அனைத்து பங்காளிகளினாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் 2013 இல் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறையின் வளர்ச்சியில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தின. 31 டிசம்பர் 2013 இல் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதியானது ரூபா 54 பில்லியனாக (அண்ணளவாக) காணப்பட்டது. இது 2012இல் பதிவுசெய்யப்பட்ட ரூபா 31 பில்லியனுடன் ஒப்பிடும்போது 75% வளர்ச்சியாகும். இதற்கும் மேலாக நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களிலுள்ள நிலையான வருமானப் பிணையங்கள் மதிப்பிடப்படுவதில் ஒரே மாதிரியான மதிப்பிடல் முறைகள் கடைப்பிடிக்கப்படுவதற்காக இ.பி.ப.ஆ. நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளுக்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கும் தினசரி மதிப்பீட்டு முறையினைக் குறிப்பிட்டு ஓர் பணிப்புரையை வழங்கியது.

2013 ஆம் ஆண்டானது பல மைற்கற்களைக் கண்டுள்ளது. இ.பி.ப.ஆ. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையுடன் இணைந்து சந்தை நடவடிக்கைகளுக்கு துணைபுரிவதற்காக சந்தை உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கு முனைந்தது. நிலையான பிணையங்களது வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்காக தன்னியக்க வர்த்தக முறையானது (த.வ.மு.) தரமுயர்த்தப்பட்டது. இதற்கும் மேலாக அரசாங்கப் பிணையங்களின் முதன்மை வர்த்தகர்கள் கம்பனிக் கடன் பிணையங்களில் வர்த்தகம் மேற்கொள்வதனை ஊக்குவிப்பதன் மூலம் கம்பனிகள் கடன் பிணையங்கள் சந்தையின் வளர்ச்சிக்கு உந்துவிசையாக கருமமாற்றுவதற்காக பட்டியலிடல் விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

விரைவாக வெளித்தோன்றும் இலங்கையின் பொருளாதார அந்தஸ்தின் பார்வையில் ஒட்டுமொத்த பாரிய பொருளாதாரத்தின் ஓர் அவசியமான இயக்கியாக மூலதனச் சந்தை வகித்த பங்களிப்பானது தொடர்ந்தும் வெளிப்படுகின்றது. இதன் விளைவாக மூலதனச் சந்தைப் பொறிமுறையானது நியாயமானதாகவும் வெளிப்படையானதாகவும் காணப்படுவதனை உறுதிசெய்வதற்கு முறைமைப்படுத்தல் அடிப்படையானது என இ.பி.ப.ஆ. கருதும் அதேவேளை அது சந்தை அபிவிருத்திக்கும் வசதியளிக்கவேண்டும் என்று நம்புகின்றது. இதன் பின்னணியிலேயே இ.பி.ப.ஆ. 2012 ஒக்டோபரில் மூன்று வருட மூலோபாய செயற்திட்டத்தினை அறிமுகம் செய்தது. கணிசமான மூலோபாய முன்னெடுப்புகளில் அனேகமானவை மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டது. செயற்படுத்தப்பட்ட பரவலான நோக்கங்கள் பல பகுதிகளை உள்ளடக்கிய கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டுத் தன்மையைக் கொண்டன. அவையாவன, முறைமைப்படுத்தல், முதலீட்டாளர் பாதுகாப்பு, சந்தை அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதியியல் அறிவினை மேம்படுத்தல் என்பனவாகும். இத்திட்டத்தின் அமுலாக்கலானது 2013 ஆம் ஆண்டில் உறுதியாக முன்னேறியது. இச்செயல்முறையின் மிகவும் முக்கியமான அம்சம் என்னவெனில் இது பலதரப்பட்ட துறைசார் பங்காளிகளது பங்குபற்றல் மற்றும் கலந்துரையாடல்களுடன் இயக்கப்பட்டதாகும்.

**உருவம்: 3 வருட மூலோபாயத் திட்டத்திற்காக 10முக்கிய திட்டங்கள்**

- கொ.ப.ப. இனை உரித்துவம் பகிரப்பட்ட பரஸ்பரமற்ற பரிமாற்றகமாக மாற்றுதல்
- இ.பி.ப.ஆ. சட்டத்தினை திருத்தியமைத்தல்
- இடர்நேர்கை முகாமைத்துவம் (இ.மு.), விநியோகம் எதிர் கொடுப்பனவு (வி.எ.கொ.) மற்றும் மத்திய எதிர் தரப்பினர் (ம.எ.த.) என்பவற்றை அமுல்படுத்துதல்
- கம்பனிகள் முறிகள் சந்தையினை அபிவிருத்தி செய்தல்
- புதிய முதலீட்டுக் கருவிகளை விருத்தி செய்தல்
- நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறையினை விருத்தி செய்தல்
- கல்வி மற்றும் விழிப்புணர்வினை மேம்படுத்துதல்
- புதிய பட்டியலிடல்களை ஊக்குவித்தல் ( பொது மற்றும் தனியார் துறை)
- புதிய நிதியங்களை கவருதல் (உள்@ர் மற்றும் வெளியூர்)
- உட்கட்டமைப்பினை விருத்தி செய்தல் - பங்குத்தரகர் உதவி அலுவலக முறைகள் (ப.உ.அ.மு.)

சட்டமியற்றும் பக்கத்தைப் பொறுத்தளவில் இ.பி.ப.ஆ. சட்டத்திற்கான முன்மொழியப்பட்ட திருத்தங்களை வரைவதனை இ.பி.ப.ஆ. முடிவுறுத்தியது. இது மந்திரி சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் நிதி திட்டமிடல் அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஓர் விசேட குழுவினால் தற்போது மீளாய்வு செய்யப்படுகின்றது. மூலதனச் சந்தைக்கான ஓர் பயனுறுதியுள்ள சட்ட வடிவமைப்பினை கடைப்பிடிப்பதனூடாக ஏனையவற்றுக்கிடையில் மூலதனச் சந்தையின் செயற்திறன் மற்றும் கவர்ச்சிகரத்தன்மை என்பன மேம்படுத்தப்படுவதுடன் முதலீட்டுக் கருவிகளும் விரிவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கும் மேலாக கொ.ப.ப. இனை பரஸ்பரமற்ற உரித்துவம் பகிரப்பட்ட ஓர் பரிமாற்றகமாக மாற்றுவதற்கான மந்திரி சபையின் அங்கீகாரத்தினை இ.பி.ப.ஆ. பெற்றது. இந்த நகல் சட்டமூலமானது அங்கத்தவர் உரித்துடைய, இலாபமீட்டும் நோக்கமற்ற, உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்டதாகத் தற்போது செயற்படும் கொ.ப.ப. இனை இலாப நோக்கமுடைய பங்குகளால் வரையறுக்கப்பட்ட ஓர் நிறுவனமாக மாற்றுவதற்கு வசதியளிக்கும். இச்செயற்பாடானது பங்குப் பரிமாற்றகத்தின் உரித்துவம், முகாமைத்துவம் மற்றும் வர்த்தக உரிமைகள் என்பவற்றை வேறுபடுத்தும்.

முறைமையின் வர்த்தகத்தின் பின்னரான இடர்நேர்கை முகாமைத்துவ வடிவமைப்பினை மேம்படுத்துவதில் மெய்நேர உரித்துடமை எல்லைக்கடனளித்தல் மற்றும் விநியோகம் எதிர் கொடுப்பனவு ஆகியவற்றிற்கான மாதிரிக் விவரக்குறிப்பீடுகளை விதிமுறைப்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. அனைத்து பொருத்தமான பங்காளிகளுடனும் சிறப்பாக ஒன்றிணைந்து செயற்பட்டது. மேலும் இடர்நேர்கையினை பயனுள்ள விதத்தில் முகாமைப்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. ஓர் ஒருங்கிணைந்த மத்திய எதிர்தரப்பினர் முறைமையினை (ம.எ.மு.) உருவாக்குவதற்காக இலங்கை மத்திய வங்கி மற்றும் கொழும்புப் பங்குப் பரிமாற்றகம் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து முயற்சித்தது. ம.எ.மு. மற்றும் வி.எ.கொ. என்பவற்றின் அறிமுகமானது கொள்வனவாளருக்கும் விற்பனையாளருக்கும் இடையேயான எதிர்தரப்பினர் வெளிப்பாட்டினை கணிசமான அளவு குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இ.பி.ப.ஆ. அதன் சந்தை அபிவிருத்தி இயக்கப்பாட்டினைக் கருத்திற்கொண்டு இலங்கையில் முற்றான முதலீட்டிற்கான சந்தர்ப்பங்களைக் காட்சிப்படுத்துவதிலும் சந்தைக்கு புதிய நிதியங்களைப் பெற்றுக்கொள்வதிலும் முனைப்புடன் இயங்கியது. இத்தறுவாயில் கொ.ப.ப. உடன் ஒன்றிணைந்து மும்பாய், ஹொங்கொங் மற்றும் துபாய் ஆகிய இடங்களில் நம்பிக்கையூட்டும் விளைவுடன் முதலீட்டாளர் மன்றங்கள் நடாத்தப்பட்டன.

உள்@ரைப் பொறுத்தளவில் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளிலுள்ள வணிக முயற்சிகள் இலங்கையின் மூலதனச் சந்தையினூடாக தமது வணிகத்தினை விரிவாக்குவதற்கு அவசியமான மூலதனத்தை திரட்டிக்கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக பட்டியலிடல் ஊக்குவிப்பு மன்றங்கள் இடம்பெற்றன. இதற்கும் மேலாக 2014 இன் வரவு செலவுத் திட்டமானது கொ.ப.ப. இல் பட்டியலிடும் கம்பனிகளுக்கு அவற்றின் வருமான வரியானது 3 வருடங்களுக்கு 50% ஆல் குறைக்கப்படும் எனும் சலுகையினை வழங்கியது.

இரண்டாந்தரச் சந்தையில் திரவத்தன்மையினை மேம்படுத்துதல் இ.பி.ப.ஆ. இன் முன்னுரிமையாகும். இந்நோக்கத்தினை அடையும்பொருட்டு இ.பி.ப.ஆ. அறிமுகத்தின் மூலம் பட்டியலிடும் பொறிமுறையினை, முதலீட்டாளர்களையும் சந்தையின் நன்னம்பிக்கையினையும் பாதுகாப்பதில் உள்ள குறைபாடுகளை அவசியமான பாதுகாப்புகளுடன் நிவர்த்திசெய்து, மீள நடைமுறைப்படுத்தியது. அதிக எண்ணிக்கையிலான சர்வதேச மற்றும் பிராந்திய ஆட்சி எல்லைகளில் ஏற்கனவே கடைப்பிடிக்கப்படும் நடைமுறையினைத் தொடர்ந்து பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு ஓர் கட்டாய ஆகக்குறைந்த பொதுப் புழக்கத் தேவைப்பாட்டினை இ.பி.ப.ஆ. அறிமுகப்படுத்தியது. இதற்கும் மேலாக இந்த முன்னெடுப்பானது சந்தையில் திரவத்தன்மையினை அதிகரிப்பது மாத்திரமன்றி சிறந்த விலைக் கண்டுபிடிப்பு பொறிமுறைக்கு வசதியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறுபான்மையினரது நலன்களை மேலும் பாதுகாப்பதற்காகவும் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களிடையே கம்பனி ஆளுகையினை பலப்படுத்துவதற்காகவும் இ.பி.ப.ஆ. பொதுப் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு தொடர்புடைய நபர்களது கொடுக்கல் வாங்கல்களில் சிறந்த நடைமுறை நியதியினை இவ்வருடத்தில் அறிமுகப்படுத்தியது. சந்தையில் வெளிப்படைத் தன்மையினை அதிகரிப்பதற்காக

# பொறுப்பதிகாரியின் மீளாய்வு

பணிப்பாளர்கள் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரிகளினால் பங்குகளது நலன்களில் அவர்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை நேரகாலத்துடன் கட்டாயமாக வெளிப்படுத்துமாறு ஓர் பணிப்புரை விடுக்கப்பட்டது.

இ.பி.ப.ஆ. பலதரப்பட்ட பங்காளிகளிடையே நிதியியல் அறிவினை, கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் மேம்படுத்துவதனைத் தொடர்ந்தது. இந்நிகழ்ச்சித் திட்டங்கள் பாடசாலைப் பிள்ளைகள், பல்கலைக்கழக மாணவர்கள், பல்வேறு தொழில்சார் நிறுவனங்களின் அங்கத்தவர்கள், ஊடகம் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு ஏற்றவாறு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன. இம்முயற்சிகள் இத்தகைய பங்காளிகள் தகவலறிந்த முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமான அறிவினைப் பெற்றிருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது.

தொழில்சார் நியமங்களைப் பேணுவதற்காக தகமையுடைய சந்தைத் தொழில்வல்லுனர்களை உருவாக்கும் நோக்கத்துடன் 2013 இல் இ.பி.ப.ஆ. தகமை வடிவமைப்பினை அமுல்படுத்துவதனைத் தொடர்ந்தது. 2013 இல் மூலதனச் சந்தையில் காணப்பட்ட சாதகமான வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு அதிகரித்த எண்ணிக்கையிலான நபர்கள் மூலதனச் சந்தைச் சான்றிதழ் மற்றும் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் பதிவுசெய்தார்கள். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது அதிகமாகவும் அனேகமானோர் மூலதனச் சந்தையில் தொழிலைத் தொடர்வதற்கும் எதிர்பார்க்கின்றார்கள்.

முறைமைப்படுத்துபவர்களிடையே அறிவுப் பரிமாற்றத்தினை வளர்ப்பதனையும் ஒன்றிணைந்து செயற்படுவதினை பலப்படுத்துவதற்காகவும் அத்துடன் வெளித்தோன்றும் முறைமைப்படுத்தல் விடயங்களை கலந்துரையாடுவதற்காகவும் பின்வரும் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து கொழும்பில் இரண்டு கருத்தரங்குகளுக்கு இ.பி.ப.ஆ. உபசரணை செய்தது. இக்கருத்தரங்குகள் பிணையங்கள் ஆணைக்குழுவுக்கான சர்வதேச ஒழுங்கமைப்பு (பி.ஆ.ச.ஒ.) ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (ஆ.ப.பொ.ஒ.) நிதியியல் முறைமைப்படுத்துபவர்கள் பயிற்சி முன்னெடுப்பு (நி.மு.ப.மு.) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டதுடன் பல ஆட்சி எல்லைகளிலிருந்து பல பங்குபற்றுனர்கள் பங்கேற்றார்கள். சிறந்த பிராந்திய ஒத்துழைப்பினை ஊக்குவிப்பதற்காக இம்முன்னெடுப்புகள் இ.பி.ப.ஆ. க்கு முக்கியமானதாகும்.

இ.பி.ப.ஆ. அதன் ஊழியர்கள் அவர்களது கடமையினை பயனுறுதியுடனும் செயற்திறனுடனும் மேற்கொள்வதற்கும் நடைமுறை அபிவிருத்திகளில் அவர்கள் காலத்துக்கேற்ப நிகராகக் காணப்படுதவதற்கு வசதியளிப்பதற்காக தொடர்ச்சியான விதத்தில் அதன் ஊழியர்களைப் பயிற்றுவிக்கவும் விருத்திசெய்யவும் கடப்பாடுடையதாயுள்ளது. உள்@ர் மற்றும் வெளிநாடுகளில் வழங்கப்படும் இந்தச் சந்தர்ப்பங்கள் எமது ஊழியர்கள் அவர்களது திறமை மற்றும் தகுதியினை மேம்படுத்துவதற்கு வசதியளித்துள்ளது.

மூலோபாயச் செயற்திட்டத்தின் அமுலாக்கல் மற்றும் இ.பி.ப.ஆ. இனால் மேற்கொள்ளப்பட்ட பல முக்கியமான நடவடிக்கைகள் சந்தையில் ஸ்திரத்தன்மையினைக் கொண்டு வந்தது. இதற்கும் மேலாக இம்முன்னெடுப்புகள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு துணைபுரிவதற்கு ஓர் துடிதுடிப்பான மற்றும் செயற்திறனுள்ள சந்தையினை வளர்க்கக்கூடியதாயிருந்தது.

இறுதியாக, ஆணைக்குழுவின் தலைவருக்கும் அங்கத்தவர்களுக்கும் அவர்களது உறுதுணை மற்றும் வழிகாட்டலுக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மேலும். இ.பி.ப.ஆ. ஆல் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகளை அமுல்படுத்தும்போது துறையினராலும் மற்றும் ஏனைய பங்காளிகளினாலும் வழங்கப்பட்ட உறுதுணையானது மிகவும் மெச்சத்தக்கதாகும். இ.பி.ப.ஆ. இன் ஊழியர்களது அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பிற்கும் அவர்களது கடப்பாடு மற்றும் தொழில்வல்லமைக்கு நான் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அனைவரினதும் கூட்டு முயற்சி மற்றும் பங்களிப்பானது இ.பி.ப.ஆ. ஓர் துடிதுடிப்பான மற்றும் செயற்திறனுள்ள மூலதனச் சந்தையினைப் பேணுவதற்கும் நாட்டின் வளர்ச்சித் தோற்றத்திற்கு பங்களிப்பதற்கும் வசதியளித்தது.



**தம்மிக்க பெரேரா**
பொறுப்பதிகாரி/பிரதிப் பணிப்பாளர் நாயகம்

20 மே 2014



# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

இடமிருந்து வலம்: கலாநிதி நாலக கொடஹேவ (தலைவர்), திரு. லொலித்த அபேசிங்க, திரு. எம். இக்ஷட். எச். ஹசீம், திரு. பி. டி. டபிள்யு, ஆனந்த சில்வா



இடமிருந்து வலம்: கலாநிதி. ஸ்ரீ வர்ண பிரதீபா மஹானமஹேவா, திரு. பி. டி. ஜே. பர்னாந்து, கலாநிதி. பி. எம். எஸ். பட்டகொட, திரு. டி. என். ஆர். சிறிவர்தன, திரு. அர்ஜுன ஹேரத்



# ஆணைக்குழு அங்கத்தவர்கள்

## கலாநிதி நாலக கொடஹேவ

கலாநிதி கொடஹேவ அவர்கள் தற்போது இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராவார். இவர் முன்னர் இலங்கை உல்லாசத் துறையின் தலைவராகவும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முகாமைப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

மூன்று வெவ்வேறு துறைகளில் கல்வித் தகமைகளைக் கொண்டுள்ளார். கலாநிதி கொடஹேவ அவர்கள் இலத்திரணியல் மற்றும் தொலைதொடர்பு பொறியியல் கலையில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இளமானி விஞ்ஞான. கௌரவப் பட்டத்தையும், வியாபார நிருவாகத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முதுமானிப் பட்டத்தையும் தெற்கு அவுஸ்திரேலியக் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். கலாநிதி கொடஹேவ அவர்கள் CIM (UK), CIMA (UK) ஆகியவற்றின் சமூக அங்கத்தவராவார்.

## திரு லொலித்த அபேசிங்ஹ

திரு. லொலித்த அபேசிங்ஹ அவர்கள் ஓர் தொழில்துறை வியாபார ஆலோசகராவார். அவர் பலவிதமான முன்மாதிரிகளின் கீழ் (அதாவது பொது, தனியார், தனியார்-பொது பங்குடமை போன்றவை) செயல்முறை ஏற்பாட்டு அபிவிருத்தியில் முற்றாக ஈடுபடும் செலீனா கெப்பிட்டல் கோப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் இயங்கும் ஓர் ஆலோசனை இல்லத்தை நடத்திச்செல்கின்றார். இலங்கை முதலீட்டுச் சபையில் பதிவீடு செய்யப்பட்ட கம்பனிகளான வின்கிரோஸ் பிஸினஸ் சொலுாசன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், சைனா சயன்ஸ் அன்ட் டெக்னோலோஜி இன்டர்நஷனல் சப்ளை கோப்பரேஷன் லங்கா லிமிட்டட், செலீனா-நெஷனல் இன்ஜினியரிங் பியூரோ ஒவ் டுபாய் லங்கா லிமிட்டட் என்பவற்றின் முகாமைப் பணிப்பாளராக உள்ளார்.

இவர் தற்போது தொடர்ச்சியான சக்தி அதிகாரசபையின் தலைவருக்கு ஆலோசகராப் பணிபுரிவதுடன் தேசிய போக்குவரத்து அமைச்சருக்கு முகாமைத்துவ ஆலோசகராகவும் தேசிய கைவினைப்பொருட்கள் சபையின் தலைவருக்கு ஆலோசகராகவும் மற்றும் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகாரசபையின் தலைவருக்கு ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு. லொலித்த அபேசிங்ஹ அவர்கள் டொரன்டோ மத்தியநிலையத்தின் சமூக அங்கத்தவரும், ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் வியாபார முகாமைத்துவத்தில் முதுமாமனிப் பட்டத்தையும் இலங்கைச் சந்தைப்படுத்தல் நிருவகத்திடமிருந்து சந்தைப்படுத்தலில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். இலங்கையின் வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்கங்களின் சம்மேளனத்தினால் வழங்கப்பட்ட சர்வதேச வர்த்தகத்தில் சான்றிதழையும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிடமிருந்து சர்வதேச வர்த்தகத்தில் உயர் செய்பணித் தோற்றங்களில் சான்றிதழையும் சர்வதேச வர்த்தகத்தில் தெரிவுத் தோற்றங்களில் சான்றிதழையும் பெற்றுள்ளார். தற்போது இவர் இலங்கைச் சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பை மேற்கொண்டுள்ளார்.

இவர் தேசிய தொழில் பயிலல் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகாரசபையின் (NAITA) பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு.அபேசிங்ஹ அவர்கள் ஓர் பணிப்பாளராக அல்லது ஓர் ஆலோசகராக பின்வரும் நிறுவனங்களில் கடமையாற்றுகின்றார் அல்லது கடமையாற்றியுள்ளார்:-

வோர் சீசன்ஸ் ஹொஸ்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட், கென்டொன் எனர்ஜி (பிரைவேட்) லிமிட்டட், ஏஜிஎஸ்எஸ் இன்டர்நஷனல் கொன்சல்டன்ட் (பிரைவேட்) லிமிட்டட், நோபல் வ்ரெய்ட் (பிரைவேட்) லிமிட்டட், எஸ்எல்என் பெக்கேஜிங் இன்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிமிட்டட், முகாமைத்துவ கல்வி அபிவிருத்தி முகவர், மெடிஸ்மார்ட், யு ஏ கே சப்லைஸ். இம்பக்ட் இன்டர்நெஷனல் கன்சல்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், நோபள் இன்டர்நஷனல் (பிரைவேட்) லிமிட்டட், வோக்கஸ் இன்டர்நஷனல் (பிரைவேட்), சரேரோ இன்டர்நஷனல் (பிரைவேட்), இவோக் பிரொஜக்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், வொக்ஷால் கோர்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டட், லங்கா லைட் இன்டஸ்ட்ரீஸ் பிரடக்ட்ஸ் இம்போட் எக்ஸ்போட் (பிரைவேட்) லிமிட்டட், ஐபிரிட் ஸ்டரக்சர்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டட், லங்கா கிரீன் எனர்ஜி (பிரைவேட்) லிமிட்டட், அகமாய் கொமியூனிகேஷன் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட், எஸ்.ஏ.ஆர். எம்பௌிஸ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட், ஹரேட்ஸ் இன்டர்நஷனல் (பிரைவேட்) லிமிட்டெட், மெகாபுத்ர (பிரைவேட்) லிமிட்டெட். ஆகியவற்றின் ஆலோசகராவும் உள்ளார்.

இவர் பல உள்நாட்டு மற்றும் சர்வதேச பயிற்சி தொடர்கள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார். இவர் பல சர்வதேச கருத்தரங்குகளில் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

## திரு. எம்.இசட்.எச் ஹசீம்

திரு. ஹசீம் அவர்கள் சட்டத்துறை பட்டதாரி (LLB) (கௌரவ) இங்கிலாந்து மற்றும் சட்டத்துறை வழக்குரைஞர் (மிடல் டெம்பள்). இவர் மோல்சிப் குரூப் ஒப் கம்பனிகள், டெவலப்மன்ட் இன்டர்பிலான சிலோன் லிமிட்டட் மற்றும் கெரி மோல்சிப் லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் பணிப்பாளருமாவார். இவர் இலங்கை பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியாளர்கள், பதனிடுபவர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் பொதுக் காரியதரிசியுமாவார். திரு. ஹசீம் அவர்கள் பல உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வியாபார மன்றங்களில் இலங்கையைப் பிரதிநிதிப்படுத்தியுள்ளார்.

## திரு. பி. டீ. டபிள்யூ ஆனந்த சில்வா

திரு. பி. டீ. டபிள்யூ. ஆனந்த சில்வா அவர்கள் இலங்கை மத்திய வங்கியில் 31 வருடங்கள் அபிவிருத்தி நிதிப் பிரிவு, பொருளியல் ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் வங்கி மேற்பார்வைப் பிரிவு ஆகிய பிரிவுகளில் சேவையாற்றியுள்ளார். இலங்கை மத்திய வங்கியில் அவரது 30 வருட சேவைக்காலத்தில் திரு. சில்வா அவர்கள் நாணயக் கொள்கை, வங்கி மேற்பார்வை, நிதியியல் துறை ஸ்திரத்தன்மை, நாணய மாற்றுக் கொள்கை, வெளிவாரி வர்த்தகம் மற்றும் சென்மதி நிலுவைகள் என்பவற்றில் பரவலான அனுபவத்தைப் பெற்றுள்ளார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்.சி முதலாம் வகுப்பு பட்டத்தையும், ஐ.அமெரிக்காவின் அயோவா பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டத்தையும் ஐ.அமெரிக்காவின் இலினொய்ஸ் பல்கலைக்கழகத்தில் எம்.எஸ்.சி. பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றியுள்ளதுடன் மத்திய வங்கியினால் நடாத்தப்படும் பல உயர் மட்ட கற்கைநெறிகளுக்கு வள ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு. சில்வா தற்போது இலங்கைக் கடன் தகவல் மையத்தின் தலைவராகவும், இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் தலைவராகவும், இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளராகவும், இலங்கைக் காப்புறுதிச் சபையின் பணிப்பாளராகவும், அபி வெனுவென் அபி நிதியத்தின் பணிப்பாளராகவும், இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தரம் உறுதிப்படுத்தல் சபையின் அங்கத்தவராகவும் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிட்டட் இன் பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மந்திரிசபையால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுவின் அங்கத்தவராகவும் காணப்படுகின்றார்.

## கலாநிதி ஸ்ரீ வர்ண பிரதீப மஹானமஹேவ

இவர் 1993 இல் இலங்கையின் கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து இரண்டாம் வகுப்பில் (கௌரவ) சட்டத்துறைப் பட்டத்தைப் பெற்றதுடன் 1994 இல் இலங்கைச் சட்டக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட இறுதிபரீட்சையில் முதலாம் வகுப்பு கௌரவ வழக்கறிஞர் தகமையினைப் பெற்று அவரது தொழில் பயிலுநல் காலத்தை சட்டமா அதிபர் திணைக்களத்தில் நிறைவுசெய்தார். 1993 இல் சட்ட பீடத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட யூரர் சபைக்கான பேச்சுப் போட்டியில் பீடத்தின் விவாதக் குழுவிற்கு தலைமை தாங்கியுதுடன் இவருக்குத் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை (கௌரவ) முதுமானிப்பட்டத்தினைப் பெற்றதுடன் 2005 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவிலுள்ள குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் டி.சி. போர்னி சட்டக்கல்லூரியிடமிருந்து சட்டத்துறையில் தத்துவசாத்திர பண்டிதர் பட்டத்தையும் பெற்றார். இவர் 2002/2005 காலப்பகுதியில் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் டி.சி.பெயின் சட்டக்கல்லூரியினது ஒப்பீட்டளவு சட்டத்திற்கான மையத்தில் பகுப்பாய்வு சமூக அங்கத்தவராவார். ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச சட்டநிபுணர்களின் சங்கத்தினால் 2003 ஆம் ஆண்டில் இவருக்கு வர்த்தகச் சட்டத்தில் ஓர் சிறந்த இளம் சட்டவறிஞர் பரிசு வழங்கப்பட்டது.

கலாநிதி பிரதீப அவர்கள் இலங்கைச் சட்டக்கல்லூரியில் அவரது கற்பித்தல் தொழிலை ஓர் வந்துபோகும் விரிவுரையாளராக ஆரம்பித்தார். அதன்பின்னர் சட்ட பீடத்தின் நிரந்தர ஊழியராகத் தெரிவுசெய்யப்பட்டு சிரேஷ்ட விரிவுரையாளராக பதவியேற்றும் பெற்றார். தற்போது இவர் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் சட்ட வேந்தராகக் கடமையாற்றுகின்றார். மேலும் இவர் ஒர் மனித உரிமைகள் சட்டத்தில் வந்துபோகும் விரிவுரையாளராக கட்டானவிலுள்ள இலங்கை பொலீஸ் கல்விச்சாலை, திருகோணமலையிலுள்ள இலங்கைக் கடற்படைக் கல்லூரி, களுத்தறையிலுள்ள இலங்கைப் பொலீஸ் பயிற்றுவித்தல் கல்லூரி, கட்டுகுருந்தவிலுள்ள விசேட அதிரடிப்படையினர் பயிற்சி மையம் மற்றும் நேபாளிலுள்ள டிரிபுவன் பல்கலைக்கழகத்திலும் (முதுமானி நிகழ்ச்சித்திட்டம்) கடமையாற்றுகிறார். மேலும் இவர் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் கணனி விஞ்ஞான மற்றும் பொறியியல் திணைக்களத்தில் முதுமானி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திலும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கல்லூரி மற்றும் இலங்கை அபிவிருத்தி மற்றும் நிருவாக நிருவகத்திலும் சட்டம் கற்பிக்கின்றார்.

கலாநிதி பிரதீப அவர்கள் கனணித்துறைப் பீடம், சுவீடனின் ஸ்டொக்கோம் பல்கலைகழகம், மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு கற்கைப் பீடம் ஆகியவற்றின் வியாச மேற்பார்வையாளராக உள்ளார். இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனித வள முன்னேற்ற நிருவகத்தின் திட்ட அறிக்கை மேற்பார்வையாளராகவும் வரணாஸ் இந்துப் பல்கலைக்கழகத்தின் வியாசப் பரீட்சகராகவும் கடமையாற்றுகின்றார். இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் மாணவர் சபையின் சிரேஷ்ட பொருளாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் இலங்கை பொலிஸ் கல்விச்சாலையின் பிரதிநிதிகள் சபையின் அங்கத்தவராகவும், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனித வள முன்னேற்ற நிருவகத்தில் சர்வதேச வர்த்தகத்தில் டிப்ளோமாவிற்கான ஆலோசனைச் சபையில் அங்கத்தவராகவும், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் பீடாதிபதிகள் சபையின் அங்கத்தவராகவும், இலங்கை வழக்கறிஞர்கள் சங்கத்தின் அங்கத்தவராகவும், இலங்கை வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் ஆலொசனைச் சபையின் தகவல் தொழில்நுட்ப சட்டக் குழு, மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கனணி விஞ்ஞான மற்றும் பொறியியல் திணைக்களத்தின் ஆலோசனைக் சபை ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் அவுஸ்திரேலிய சட்ட ஆசிரியர்கள் சங்கம் ஆகியவற்றின் முன்னைய தலைவரும் ஆவார்.

இவர் சமீபத்தில் இலங்கைத் தொலைத்தொடர்பு முறைமைப்படுத்தல் ஆணைக்குழுவுக்கு பகுத்தாய்வு நடவடிக்கையை மேற்பார்வைசெய்யும்

# ஆணைக்குழு அங்கத்தவர்கள்

அழைப்பு மத்திய ஊழியர்களுக்கு இரண்டு பகுத்தாய்வு திட்டங்களையும் ICTA வுக்கான இலத்திரணியல் சட்ட விளைவுத் திட்டத்தையும் நிறைவேற்றினார்.

இவர் பல பகுத்தாய்வு கொடைகளைப் பெற்றுள்ளார். அவையாவன, தென் ஆபிரிக்காவின் ஜொஹனஸ்பேர்க் பல்கலைக்கழகத்திடமிருந்து 2008 க்கான தேசிய விஞ்ஞான அடித்தளக் கொடை, இலங்கையின் தொலைத்தொடர்பு முறைமைப்படுத்தல் ஆணைக்குழுவின் 2007/2008 க்கான பகுத்தாய்வுக் கொடை, 2002-2005 க்கான கலாநிதி நிகழ்ச்சித்திட்டத்திற்கான உலக வங்கிக் கொடை, 2004 இல் போலந்து நாட்டில் இடம்பெற்ற உலக தரவுப் பாதுகாப்பு ஆணைக்குழுவினர்கள் கருத்தரங்குக்காக குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் பிரயாணக்கொடை, பட்டப்படிப்புக்குப் பின்னரான 2002 கருத்தரங்கிற்கான மெல்பேர்ன் பல்கலைக்கழகத்தின் பகுத்தாய்வுக் கொடை, 2004 இன் எதிர்கால பகுத்தாய்வாளர்களுக்கான அவுஸ்திரேலிய பகுத்தாய்வுச் சபையின் கொடை என்பனவாகும். கலாநிதி பிரதீப அவர்கள் அவரது துறையில் அவர் ஆற்றிய முக்கியமான பங்களிப்பிற்காகவும் 2000 இல் பிரான்ஸ் சர்வதேச மனித உரிமைகள் நிருவகம் போன்ற சமூகநலனுக்காகவும் பல விருதுகளைப் பெற்றுள்ளார். சர்வதேச வழக்கறிஞர்கள் சங்க இளம் வழக்கறிஞர்களுக்கான விருது 2003, சன்விரான்சிஸ்கோ, ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் கலிபோர்னியா இலத்திரணியல் இரகசியத் தகவல் மையத்தின் புதிய யுகத்தில் இரகசியம் (2004) பிரயாணக் கொடை.

## திரு. பி. டீ. ஜே. பர்னாந்து

திரு. பர்னாந்து அவர்கள் வங்கித்துறையில் 35 வருடங்களுக்கும் அதிகமான அனுபவமுடையவர். இவர் இதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியில் பல்வேறு அந்தஸ்தில் சிரேஷ்ட பதவிகளில் சேவையாற்றியுள்ளார். 2010-2011 காலப்பகுதியில் இவர் இலங்கை மத்திய வங்கியில் நிதியியல் முறை ஸ்திரத்தன்மை மற்றும் கம்பனிகள் துறைத் தொகுப்பு ஆகியவற்றிற்கு பொறுப்பான பிரதி ஆளுனராவார். வங்கியியல் மற்றும் நிதியியல் துறை முறைமைப்படுத்தல், மூலோபாய திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், தேசிய கணக்கீட்டு மற்றும் புள்ளிவிபரங்கள், தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகள் ஆகிய துறைகளில் திரு. பர்னாந்து அவர்கள் பரவலான அனுபவமும் திறனும் உடையவர் ஆவார். மத்திய வங்கியில் அவர் நிதியியல் ஸ்திரத்தன்மைக் குழுவின் தலைவராகவும், நாணயக் கொள்கைக் குழுவின் அங்கத்தவராகவும், இடர்நேர்கை முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவராகவும் தேசியக் கொடுப்பனவுச் சங்கத்தின் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். 2011 ஆம் ஆண்டில் அவர் இலங்கை மத்திய வங்கியில் நிதியியில் ரீதியாக சிரமத்துக்குள்ளாகிய ஏழு பதிவுசெய்யப்பட்ட "துயரடைந்த" நிதியியல் கம்பனிகளை மீளக்கட்டியெழுப்புவதற்காக ஓர் உத்தியோகத்தர்கள் குழுவிற்குத் தலைமை தாங்கினார்.

இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனராகப் பதவி வகித்தபோது அவர் இ.பி.ப.ஆ. மற்றும் இலங்கையின் காப்புறுதிச் சபை ஆகியவற்றில் பதவிவழி அங்கத்தவராகவும். கடன் தகவல் மையம் மற்றும் இலங்கையின் வங்கியாளர்கள் நிருவகம் ஆகியவற்றின் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். அத்துடன் இவர் ஊழியர் நம்பிக்கை நிதியம், லங்கா கிளியர் பிரைவேட் லிமிட்டட் மற்றும் லங்கா வைனான்சியல் சேர்விஸஸ் பியூரோ ஆகியவற்றின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகவும் இருந்துள்ளார்.

இ.பி.ப.ஆணைக்குழுவுக்கும் மேலாக திரு. பர்னாந்து அவர்கள் யூனியன் வங்கி, கொமர்ஷல் வைனான்ஸ் மற்றும் லீசிங் லிமிட்டட், கொமர்ஷல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் கம்பனி லிமிட்டட், டெப்ரோபேன் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் மற்றும் ஹம்பானா பெட்ரோ கெமிக்கல் கம்பனி லிமிட்டட் ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளில் அங்கத்தவராகத் தற்போது சேவையாற்றுகிறார்.

அவரது தொழில் வாழ்வில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல முக்கியமான திட்டங்களை முன்னணியிலிருந்து முன்னெடுத்துள்ளார். விசேடமாக தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைப் பகுதியிலாகும்.

இதற்கும் மேலாக திரு. பர்னாந்து அவர்கள் பல தலைப்புகளை உள்ளடக்கிய தேசிய மட்டத்திலான பல குழுக்களில் சேவையாற்றியுள்ளதுடன் சர்வதேச மன்றங்களில் இலங்கையையும் மத்திய வங்கியையும் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

## கலாநிதி பி.எம்.எஸ். பட்டகொட

கலாநிதி பட்டகொட அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து இளமானிக் கலை கௌரவ (பூகோளவியலில்) பட்டதாரியும், ஐக்கிய இராச்சியத்தின் கிழக்கு அங்கிலியா பல்கலைக்கழகத்திலிருந்த சூழல் விஞ்ஞானத்தில் கலாநிதி பட்டத்தையும், ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் மிச்சிகன் ஸ்டேட் பல்கலைக்கழகத்திலிருந்த இயற்கை வளங்கள் முகாமைத்துவத்தில் முதுமானி விஞ்ஞான பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியுமாவார். இவர் ஓர் வுல்பிரைட் கல்விமானும் பொதுநலவாய கல்விமானும் ஆவார்.

கலாநிதி பட்டகொட அவர்கள் இலங்கையின் நிதி திட்டமிடல் அமைச்சில் திறைசேரியின் பிரதி செயலாளராகக் கடமையாற்றுகின்றார். இதற்கும் மேலாக சார்க் அபிவிருத்தி நிதியம், இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, லங்கா லித்ரோ கேஸ், லங்கா சீனிக் கம்பனி, பிராந்திய அபிவிருத்தி வங்கி, இலங்கை காபர்ன் நிதியம், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு

வுல்பிரைட் ஆணைக்குழு, இலங்கை மின்சாரச் சபை, இலங்கைத் துறைமுக அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய சூழல் அதிகாரசபை, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் கொள்கைக் கற்கைகள் நிருவகம் என்பவற்றில் சபையின் அங்கத்தவராக பதவி வகிக்கின்றார்.

கலாநிதி பட்டகொட அவர்கள் பின்வருவன உள்ளடங்களாக பல முக்கிய பதவிகளை வகித்துள்ளார். பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், தேசியத் திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், காலநிலை மாற்றத்தின் பணிப்பாளர், உலகளாவிய விடயங்களில் பணிப்பாளர் மற்றும் இலங்கையின் மாண்புமிகு ஜனாதிபதிக்கு உதவிச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

கலாநிதி பட்டகொட அவர்கள் இலங்கையில் சூழலின் நிலை, இலங்கையிலுள்ள கரையோரப் சதுப்புநிலப் படர்தாவர வகைகளது காடுகளின் மாற்றுப் பயன்பாட்டின் பொருளியல் மதிப்பிடுதல் ஆகியவை உள்ளடங்களாக பல புத்தகங்களை எழுதியுள்ளதுடன் இலங்கையில் நகர வளியியல் தர முகாமைத்துவம், இலங்கையில் சூழல் மதிப்பிடுவதற்கான தத்துவப் புத்தகம் மற்றும் இலங்கையில் எரிபொருள் மற்றும் வாகனங்களில் இறைவரிக் கொள்கைகள் ஆகிய நூல்களை இணைந்து எழுதியுள்ளார்.

## திரு. டி. என். எஸ். சிரிவர்தன

இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து பூகோளவியலில் இளமானி (கௌரவ) பட்டத்தையும் இலங்கையின் திறந்த பல்கலைக்கழகத்திலிருந்து சட்ட இளமானிப் பட்டதாரியும் (எல்.எல்.பி.) ஆவார். அத்துடன் இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் சட்ட முதுமானி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட ஓர் மாணவனுமாவார். இவர் தொழில் ரீதியாக ஓர் சட்டத்தரணியாவார். இவர் 1988 இல் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் கம்பனிகள் கண்காணிப்பாளராக இணைந்து 2001 இல் கம்பனிகள் உதவிப் பதிவாளராகப் பதவியுயர்த்தப்பட்டார். தற்போது இவர் கம்பனிகள் பதிவாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார் (பதில் கடமை). இவர் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிருவகத்தின் பதவிவழி அங்கத்தவராகவும் இலங்கைக் காப்புறுதிச் சபையின் பதவிவழி அங்கத்தவராகவும் கடமையாற்றுகின்றார்.

## திரு. அர்ஜுன ஹேரத்

திரு. அர்ஜுன ஹேரத் அவர்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவராகக் கடமையாற்றுவதுடன் ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தின் ஆலோசனைச் சேவைகளுக்குத் தலைமை தாங்கும் பங்காளராகவும் கடைமையாற்றுகின்றார். இவர் தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் பிரதித் தலைவருமாவார். இவர் இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் பணிப்பாளருமாவார். இவர் கணக்கீட்டு நியமங்கள் குழுவினதும் கணக்காய்வு நியமங்கள் குழுவினதும் அங்கத்தவராவார். சர்வதேச கணக்காளர்கள் சம்மேளனத்தின் தொழில்சார் கணக்கீட்டு ஒழுங்கமைப்பு அபிவிருத்திச் சபையின் அங்கத்தவராகவும் கடமையாற்றுகின்றார். அர்ஜுன அவர்கள் ஓர் பட்டயக் கணக்காளராவதுடன் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இளமானி விஞ்ஞான பட்டதாரியாகவும் நிதியியில் பொருளாதாரத்தில் முதுமானிப் பட்டத்தையும் கொண்டுள்ளார். ஐக்கிய இராச்சியத்தின் ஸ்ரட்ச்கிலைட் பல்கலைக்கழகத்தில் வியாபார நிர்வாகத்தில் முதுமானிப் பட்டதாரியுமாவார்.

# சிரேஷ்ட முகாமைத்துவம்



**திரு. தம்மிக பெரேரா**

பொறுப்பதிகாரி / பிரதிப் பணிப்பாளர் நாயகம்



**செல்வி அயந்தி ஜயரத்ன**

பணிப்பாளர் - நிதி மற்றும் நிர்வாகம்



**செல்வி சுரணா பர்னாந்து**

பணிப்பாளர் - மேற்பார்வை



**திரு. வஜிர விஜேகுணவர்தன**

பணிப்பாளர் - மூலதனச் சந்தை அபிவிருத்தி



**திரு. நாமல் கமால்கொட**

பணிப்பாளர் - கண்காணிப்பு



**திருமதி அயந்தி அபேவிக்ரம**

பணிப்பாளர் - சட்டம் மற்றும் வலியுறுத்தல்



**திரு. சிந்தக்க மென்டிஸ்**

பணிப்பாளர் - புலனாய்வுகள்




பணிப்பாளர் - கூட்டிணைப்பு அலுவல்கள்




பணிப்பாளர் - மூலதனச் சந்தைக் கல்வி, பயிற்சி மற்றும் ஆய்வு




உதவிப் பணிப்பாளர் - மேற்பார்வை




உதவிப் பணிப்பாளர் - வெளிவாரி உறவுகள் மற்றும் சந்தை அபிவிருத்தி




உதவிப் பணிப்பாளர் - கூட்டிணைப்பு அலுவல்கள




ஆலோசகர் - விசேட திட்டங்கள் மூலதனச் சந்தை அபிவிருத்தி




ஆலோசகர் - விசேட திட்டங்கள் மூலதனச் சந்தை அபிவிருத்தி

# பாரிய பொருளாதார மீளாய்வு

## உலகளாவிய நோக்கு

வருடத்தினை இடை இடையிடையே இடைநிறுத்திய, சில சமயங்களில் துடிதுடிப்பான மற்றும் சில சமயங்களில் மந்தமான, நிகழ்வுகளின் மத்தியிலும் உலகளாவிய பொருளாதாரமானது 2013 இல் உறுதியான பாரிய பொருளாதார அடிப்படைகளினால் நிர்ணயிக்கப்பட்டது. அபிவிருத்தியடைந்த மற்றும் வெளித்தோன்றும் பொருளாதாரங்களில் எழுச்சியடையும் நுகர்வோர் நம்பகத்தன்மையுடன் இணைந்து மொத்தப் பொருளாதார நடவடிக்கை மற்றும் வர்த்தக நிலுவைகள் என்பன ஓர் சாத்தியமான நிலைமைக்கு குறிகாட்டின. சுருக்கமாகச் சொன்னால் 2013 ஆம் ஆண்டானது தத்ரூபமான மாற்றங்களற்றுக் காணப்பட்டது மாத்திரமன்றி உலகளாவிய நிதியியல் நிறுவனங்களை ஆளுமைப்படுத்தும் முறைமைப்படுத்தல் வடிவமைப்பினை மீள்செதுக்குதல் மற்றும் மீள்ஒழுங்குபடுத்தல் ஆகியவற்றினால் இயக்கப்பட்டது. கருத்தரங்குச் சபையின் பிரகாரம், பணவீக்கத்திற்குச் செம்மையாக்கப்பட்ட உலகளாவிய பொருளாதாரமானது 2013 இல் 2.9% இனால் வளர்ச்சியடைந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உருவம் 02: பணவீக்கம்




மறுபுறத்தில் 2013 ஆம் ஆண்டானது பொருளாதாரச் சவால்கள் மற்றும் பூகோள அரசியல் மோதல்கள் நிறைந்ததாகக் காணப்பட்டது. வளைகுடா ஒத்துழைப்புச் சபையின் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளை முடிவிடுவதற்கு அச்சுறுத்தும் சிரியாவின் பிணக்குகள், சக்தி மிக்க ஐரோப்பிய பொருளாதாரங்கள் அவற்றின் பொருளாதாரத்தினை நிலைநிறுத்துவதற்கு முயற்சிக்கின்றமை, காங்கிரசுடனான வரவுசெலவுத்திட்ட பகமையுணர்வின் மேல் அமெரிக்க அரசாங்கத்தின் ஸ்தம்பிதம், அமெரிக்க அரசாங்கத்தின் மத்திய வங்கியின் முறிகள் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நேர்த்தியான வெளியேற்றம் என்பன தலைப்பிடப்பட்ட செய்திகளில் சிலவாகும். மறுபுறத்தில் இவ்வாண்டானது, ஐக்கிய அமெரிக்க குடியரசானது அதன் செங்குத்தான இறைவரி நிலைமையினை வெற்றிகரமாகக் கையாண்டமை மற்றும் 2012 இல் அதன் முறைசார் ஏற்றத்தாள்வில் சங்கடத்துக்குள்ளாகிய கிரீக்கின் பாதிப்பானது மற்றைய நாடுகளுக்கு பரவுவதனை அனுமதிக்காது நிலைமையினை ஓரளவுக்கு மீளக்கட்டுவதற்கு இயலுமாயிருந்தமை என்பவற்றினால் ஓர் மீளெழுச்சியாகவும் காணப்பட்டது. மறுபுறத்தில் வெளித்தோன்றும் சந்தைகள் நிதி வெளிப்பாய்ச்சல்கள் வடிவில் சில தடங்கள்களை அனுபவித்திருந்தாலும் சீக்கிரமான பண எண்ணக்கருவானது அவர்களது சொந்த முயற்சிகளை தக்கவைப்பதற்கு துணைபுரிந்தது.

## இலங்கையின் வசீகரிக்கும் நிலவரம்

உலகளாவிய பொருளாதாரத்தில் இன்னமும் காணப்படுகின்ற ஓரளவு மட்டத்திலான நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் இலங்கையின் பொருளாதாரமானது, பகுதியளவில் இலங்கை அரசாங்கத்தினால் கொண்டு செல்லப்பட்ட திடமான பாரிய பொருளாதார முகாமைத்துவத்தின் உதவியுடன், தொடர்ந்தும் அடிப்படையான சாத்தியமான ஓட்டத்தினை அனுபவிக்கின்றது. இதன் விளைவாக இலங்கையின் பாரிய பொருளாதாரத்தின் விரிவாக்கல் நிலவரம் வசீகரமாயுள்ளது.

உருவம் 03: மொ.உ.உ. வளர்ச்சி




இ.ம.வ. இன் பிரகாரம் வரலாற்று ரீதியாக போராட்ட நாட்களில் சராசரியாக 5%க்குக் குறைவாகக் காணப்பட்ட மொ.உ.உ. வளர்ச்சியானது 2010 இலிருந்து பலதூரம் தாண்டி ஓர் உயர்ந்த வளர்ச்சிப் பாதையான சராசரி 7.5% வளர்ச்சியினை எட்டியுள்ளது. இதன் தொடர்ச்சியாக 2013 இல் மொ.உ.உ. 7.3% ஆல் விரிவடைந்தது.

மொ.உ.உ. இன் வளர்ச்சியானது பெருமளவில் கைத்தொழில் துறையின் (மொ.உ.உ இன் 30%) விரிவாக்கலினால் துணைசெய்யப்பட்டு மெச்சத்தக்க 9.9% வளர்ச்சியினை அடைந்தது. மிகுந்த ஆதிக்கம் செலுத்தும் சேவைத் துறையும் (மொ.உ.உ. இன் 59%) மெச்சத்தக்க 6.4% வளர்ச்சியினைக் காட்டியது. ஒரு காலத்தில் ஆதிக்கம் செலுத்திய விவசாயத் துறையானது தற்போது மொ.உ.உ. க்கு 11% பங்களிப்பினைச் செலுத்தியதுடன் 2013 ஆம் வருடத்தில் 4.7% ஆக வளர்ச்சியடைந்தது.

## இ.ம.வ. இனால் ஊக்கமளிக்கக்கூடிய பாரிய பொருளாதார அளவீடுகள்

உலகளாவிய பொருளாதாரத்தில் தோன்றிய சிக்கலைகளின் மத்தியிலும் இ.ம.வ. தாராளமான கொள்கை வடிவமைப்பினை அமுல்படுத்துவதனைத் தொடர்ந்தது. இது தொடர்பான முக்கியமான ஓர் மாறுந்தன்மைக் குறியீடான வருடாந்தச் சராசரிப் பணவீக்கமானது 2013 இல் 6.9%ஆக மட்டுப்படுத்தப்பட்டது. இதனை மேற்கொண்டு முன்னேற்றும் நோக்கில் “இ.ம.வ. இன் எதிர்காலத் திட்டத்திற்கு” அமைய 2014 இல் பணவீக்கமானது, உலகளாவிய பண்டங்களின் விலைகள் உயர்வடையும் போக்கினை காணாதவிடத்து, 6% இற்குள் மட்டுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாணய மாற்று முகாமைத்துவமானது சவால்கள் நிறைந்ததாகக் காணப்பட்டாலும் பாராட்டுவதற்கு பல காரணிகள் உள்ளன. 2012 இல் 10.43% ஆகக் காணப்பட்ட இலங்கை ரூபாயின் பெறுமதியிறக்கமானது இது, இ.ம.வ. விலையில் குறுக்கிடாது தொகையில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட திறந்த சந்தை குறுக்கீட்டுக்கான ஓர் கொள்கை மாற்றத்தினை மேற்கொள்வதற்கு தீர்மானித்ததனால், 2013 இல் 2.75% ஆல் மாத்திரமே பெறுமதியிழந்தது.

ஏனைய வழிமுறைகளில் அரசாங்கமானது தொடர்ந்தும் சாமர்த்தியமான வழிமுறைகளில் கவனஞ் செலுத்தியது. இது தொடர்பில் இறைவரி ஒழுக்கம் மற்றும் கூட்டிணைப்பு ஆகிய இரண்டு பிரதான பிரமாணங்களுக்கும் உரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டது. 2013 இல் 5.8% ஆகக் காணப்பட்ட வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையானது 1978 இல் இலங்கை திறந்த பொருளாதாரக் கொள்கைகளை பின்பற்றியதிலிருந்து காணப்பட்ட ஆகக் குறைந்த பற்றாக்குறையாகும். 2013 இல் 78% ஆகக் காணப்பட்ட மொ.உ.உ. இன் அரசாங்கக் கடன் விகிதாசாரமானது 2014 இல் மொ.உ.உ. இன் 74%ஆகக் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கும் மேலாக இ.ம.வ. முக்கியமான கொள்கை வட்டி வீதங்களை தொடர்ச்சியாக மீள்பரீசீலனை செய்தது. நிலைத்த வைப்பு வசதி வீதமானது (நி.வை.வ.வீ) வருடத்தின் ஆரம்பத்தில் 7.5% இலிருந்து 6.5% ஆகக் குறைக்கப்பட்டது. இதற்கும் மேலாக நிலைத்த கடனளித்தல் வசதி வீதமானதும் (நி.க.வ.வீ.) குறைவடையும் போக்குடன் 2013 இல் 9.5% இலிருந்து 8.00% ஆகக் குறைக்கப்பட்டது. இக்கொள்கை வழிமுறைகளின் பயனாக இ.ம.வ. சந்தை வட்டி வீதங்களில் குறைவடையும் திருத்தம் ஏற்படும் என எதிர்பார்க்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் 2012 இல் 14.40% ஆகக் காணப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வட்டிவீதமானது 2013 இல் 10.13% ஆகக் குறைவடைந்ததுடன் இதனைத் தொடர்ந்து 2012 இல் 10.10% ஆகக் காணப்பட்ட வைப்புகளின் வட்டி வீதமானது 2013 இல் 9.37% ஆக வீழ்ச்சியடைந்தது. (உருவம் 04, 05)

இத்தகைய மேலிருந்து கீழான மனோபாவத்தின் மத்தியிலும் தனியார் துறைக்கான கடனளிப்பானது பின்தங்கிய சதவீதத்திலேயே காணப்பட்டது. 2012 இல் மேற்கொள்ளப்பட்ட பாரியபொருளாதார ஸ்திரத்தன்மைக்கான கொள்கை வழிமுறைகளினால் பெருமளவு உந்தப்பட்டு சந்தையானது 2013 இல் கடனுக்கான குறைந்த ஆவலையே வெளிப்படுத்தியது. 2011 இல் ஓர் ஆச்சரியமான வளர்ச்சிக் குணத்தை வெளிப்படுத்தியதன் பின்னர், இங்கு தனியார் துறைக்கான கடனளிப்பானது 36.5% ஆல் வளர்ச்சியடைந்தது, 2012 இல் இக்கடனளிப்பு வீதமானது குறிப்பிடத்தக்க 21.5% வளர்ச்சியை அடைந்தது. 2013 ஆம் ஆண்டிற்கான கடன் விரிவாக்கல் வீதமானது பிரகாசமற்ற 8.6% ஆகக் காணப்பட்டது.

உருவம 04: இ.ம.வ. கொள்கை வட்டி வீதங்கள்



# பாரிய பொருளாதார மீளாய்வு

இதற்கும் மேலாக நாடானது இன்னமும் உள்ளக சவால்கள் மற்றும் உலகளாவிய சிக்கலைகளிலிருந்து பாதுகாப்பினை அடையவில்லை. உள்வாரியாக வற்றாத வர்த்தக நிலுவை மற்றும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை என்பன தொடர்ந்தும் முறைசார் பலவீனத்திற்குப் பங்களிக்கின்றன. கடந்த இரண்டு வருடங்களாக அமெரிக்க டொலர்கள் 9.5 பில்லியன் குறியினை வட்டமிட்டுக்கொண்டிருந்த வர்த்தக நிலுவையானது அமெரிக்க டொலர்கள் 7.6 பில்லியனாகக் கீழ் கொண்டுவரப்பட்டது. இது மொத்த இறக்குமதி பட்டியலின் 24% ஆகக் காணப்பட்டது. எண்ணெய் விலையானது அமெரிக்க டொலர் 97 குறியில் வட்டமிட்ட போதிலும் மொத்த எண்ணெய் பட்டியலானது மேன்மையாக அமெரிக்க டொலர்கள் 4.30 பில்லியனாகக் காணப்பட்டது.

உருவம் 05: இடர்நேர்கையற்ற மற்றும் வங்கி வைப்பு வட்டி வீதம்




2013 ஆம் ஆண்டானது ஆறுதலளிக்கக் கூடியதாகவும் இருந்தது. வர்த்தக நிலுவை உறுப்பினை அடைக்கக்கூடிய பிரதான சாதனமாக 6.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பணஉள்வருகை உறுப்பானது செயற்பட்டது. சுற்றுலாத்துறை வருமானங்கள் 2012 இலிருந்து ஓர் ஆரோக்கியமான 68% வளர்ச்சியுடன் அமெரிக்க டொலர்கள் 1.7 பில்லியனாகக் காணப்பட்டது. பாரிய பொருளாதார வளர்ச்சிப் போக்கிற்கு முக்கியமான பாரமானியாகக் காணப்படும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2013 இல் 0.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது.

## இறுதியான சிந்தனை

இலங்கையின் பொருளாதார நிலவரத்தின் தொடர்ச்சியான முன்னேற்றமானது தெற்காசியாவில் மாத்திரமன்றி முழு ஆசியப் பிராந்தியத்திலும் மிகவும் விரைவான மற்றும் துடிதுடிப்பான தெற்காசியப் பிராந்தியத்தின் வெளித்தோன்றும் பொருளாதாரமாகக் காணப்படுகின்றது. இதற்கும் மேலாக ஓர் உறுதியான குடியரசு அடித்தளத்தின் வரலாற்று ரீதியான உள்ளக சக்தியினை ஓர் பரவலான நிறுவக வடிவமைப்புடன் இணைத்தவுடன் இலங்கையின் முதலீட்டு விடயமானது மறுக்கமுடியாதது மாத்திரமன்றி மிகவும் வலிமையானதாகவும் காணப்படுகின்றது. இக்காரணிகள் அனைத்தும் ஓர் திடமான எதிர்கால மூலதன உட்பாய்ச்சல் போக்கிற்கு ஆதரவளிக்கின்றது. இம்மூலதன உட்பாய்ச்சலானது வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் வெளிநாட்டு நிறுவக முதலீட்டாளர் உட்பாய்ச்சல்களின் கூட்டாவதுடன் இவையனைத்தும் ஒன்றுகூட்டி வருகின்ற வருடங்களில் மூலதனச் சந்தையானது மிக முக்கியமான இலாபத்தினைக் காட்சிப்படுத்தும்.

மூலங்கள்

இ.ம.வ. - வருடாந்த அறிக்கைகள்

ச.நா.நி. - உலக நோக்கு

கருத்தரங்குச் சபை

# மூலதனச் சந்தை மீளாய்வு

யுத்தத்தின் பின்னரான உடனடிச் சூழலில் காணப்பட்ட கொழும்புப் பங்குச் சந்தையின் அபூர்வமான செயற்திறனானது தற்போது தணிந்துள்ளதுடன் பங்குச் சந்தையானது தற்போது ஓர் திடமான கூட்டிணைப்புக் கட்டத்தில் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் இவ்வருடமானது, முறைசார் இடர்நேர்கையினைக் குறைப்பதற்காக கடந்த காலத்தில் அமுல்படுத்தப்பட்ட கடன் வழங்கும் எல்லையானது, இ.பி.ப.ஆ. ஆல் சந்தையின் நம்பகத்தன்மையினை மேம்படுத்துவதற்காக அகற்றப்பட்டு, ஓர் நம்பிக்கை மிக்கதாக ஆரம்பிக்கப்பட்டது.

உருவம் 06: அ.ப.வி.சு. எதிர் சந்தைப் புரள்வு 2013




மீளாய்வாண்டில் தளம்பலுடைய உள்@ர் மற்றும் சர்வதேச மாறுதல்களின் மத்தியிலும் கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் அளவீட்டுச் சுட்டியான அனைத்து பங்கு விலைச் சுட்டியானது இதற்கு முன்னைய இரண்டு வருடங்களில் காணப்பட்ட ஒன்றுசேர்த்த 15% வீழ்ச்சியுடன் ஒப்பிடும்போது 4.78% ஆல் வளர்ச்சியடைந்தது. மும்பாய் மற்றும் ஹொங்கொங் ஆகிய பிராந்திய சந்தைகளினால் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சியான முறையே 3.3% மற்றும் 2.9% ஆகியவற்றை கொ.ப.ச. விஞ்சியது. 2009 மற்றும் 2010 ஆகிய காலப்பகுதிகளில் பதிவுசெய்யப்பட்ட ஆச்சரியப்படத்தக்க விளைவுகளின் பின்னர் பதிவுசெய்யப்பட்ட முதலாவது இலாபமாக 2013 இன் செயற்திறனானது காணப்படுகின்றது. எஸ் அன்ட் பி ஸ்ரீலங்கா 20 சுட்டியானது இவ்வருடத்தில் 5.79% விளைவைப் பெறுவதற்கு சமாளித்ததுடன் இது 3.263.87 புள்ளிகளாக நிறைவடைந்தது. (உருவம் 06, 07)

பட்டியலிடப்பட்ட கம்பனிகள் கடன் மற்றும் உரித்துவ ஆ.பொ.வ. ஊடாக மொத்தமாக ரூபா 68.7 பில்லியனைத் திரட்டியதுடன் தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எமது சந்தையில் கொள்வனவினை மேற்கொண்டார்கள். உயர்ந்த விளைவினை எதிர்பார்க்கும் அபிவிருத்தியடைந்த சந்தைகளிலிருந்து இலங்கை உள்ளடங்களான வெளித்தோன்றும் சந்தைகளுக்கு உள்வந்த மேம்படுத்தப்பட்ட சர்வதேச மூலதனப் பாய்ச்சல்கள் சந்தைக்கு மிகவும் அவசியமான திரவத்தன்மையினை வழங்கியது.

உருவம் 07: அபவிசு இன் வருடாந்த - வளர்ச்சி




2013 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் கொ.ப.ப. இல் பங்குகளின் வர்த்தகமானது அளவீட்டுச் சுட்டிகளில் எத்தகைய கணிசமான அளவு அசைவுகளுமின்றி ஓர் குறுகிய எல்லைக்குள் காணப்பட்டது. இரண்டாவது காலாண்டானது நிலைநிறுத்தக்கூடிய வெளிநாட்டு முதலீட்டாளர் அக்கறையினால் உந்தப்பட்ட ஓர் மிதமான எழுச்சியினைக் கண்டதுடன் ரூபாவின் பெறுமதியிறக்கம் போன்ற பொருளாதாரக் குறிகாட்டிகளிலும் நிதானமான போக்கு காணப்பட்டது. ஏப்ரல் முதல் மே வரையான காலப்பகுதியில் சந்தையானது கடந்த மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட நட்டங்களையும் பதிவழித்துக்கொண்டு இரண்டு மாதங்களில் குறிப்பிடத்தக்க 12.6% வளர்ச்சியினை அடைந்தது. மூன்றாம் காலாண்டில் சந்தையானது மேலும் பலவீனமடைந்து வருடத்தின் இறுதிக் காலாண்டில் வர்த்தக நடவடிக்கைகள் குறைவாகக் காணப்பட்டு அ.ப.வி.சு. ஆனது வருட இறுதியில் 5,912 புள்ளிகளாக நிறைவடைந்தது. இக்காலாண்டில் இடம்பெற்ற அவதானிக்கத்தக்க நிகழ்வாக ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. இனால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 23 பில்லியன் பெறுமதியான உரிமை வழங்கல் காணப்பட்டது. இது கொ.ப.ப. இன் வரலாற்றில் இடம்பெற்ற மிகப்பெரிய உரிமை வழங்கலாகும். இவ்வுரிமை வழங்கலானது அதன் உத்தேசித்த ஒன்றுசேர்க்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்திற்கான நிதியினைத் திரட்டும் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்டதுடன் இது இரண்டாந்தரச் சந்தை வர்த்தகத்திற்கான திரவத்தன்மைக்கு ஓரளவு தடங்களாகக் காணப்பட்டது.

## முதன்மைச் சந்தை மற்றும் வளம் திரட்டுதல்

முன்னைய ஆண்டின் 17 புதிய பட்டியலிடல்களுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் இரண்டு புதிய பட்டியலிடல்களுடன் (உரித்துவம்) மாத்திரம் முதன்மைச் சந்தையானது தாழ்நிலையில் காணப்பட்டது. இப்பலவீனமான மனோபாவமானது முதலீட்டாளர் கேள்வியில்

# மூலதனச் சந்தை மீளாய்வு

மற்றும் ஒட்டுமொத்த முதலீட்டாளர் நம்பகத்தன்மை ஆகியவற்றில் காணப்பட்ட தளர்ச்சி உள்ளடங்களான கூட்டான காரணிகளின் பிரதிபலிப்பாகும். முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பல ஆரம்பப் பொது வழங்கல்களினால் பதிவுசெய்யப்பட்ட எதிர்மறையான விளைவுகளின் பிரதிபலிப்பினால் முதலீட்டாளர்களது ஆவல் குறைவாகக் காணப்பட்டது. (உருவம் 08)

உருவம் 08: முதன்மைச் சந்தை மற்றும் வளம் திரட்டுதல்

| புதிய பட்டியலிடல்கள் உரித்துவம் | வகை | வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை | கொடைமுனை விலை | பட்டியலிடப்பட்ட திகதி | திரட்டிய நிதி ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|
| அணிலானா ஹோட்டல்ஸ் அன்ட் பிரொபட்டீஸ் | ஒப்பளிப்புக் கொடைமுனை | முதற் பகுதி - 40,000,000<br>பகுதி இரண்டு - 40,000,000 | 12.00 | 17 ஜுலை 13 | 494.4 |
| ஏய்ட்கன் ஸ்பென்ஸ் பிளான்டே'ன மெனேஜ்மன்ட் லிமிட்டட் | அறிமுகம் | - | - | 3 மே 13 | - |

2013 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மொத்தமாக ரூபா 119.4 பில்லியனை மூலதனச் சந்தையிலிருந்து திரட்டியுள்ளதுடன் இது கடந்த வருடத்தின் ரூபா 29.5 பில்லியனுக்கும் பார்க்க மிகவும் அதிகமாகும். இது ஆ.பொ.வ. (உரித்துவம் மற்றும் கடன்), உரிமை வழங்கல்கள், பங்காணைப் பத்திரங்களது மாற்றல்கள் மற்றும் தனிப்பட்ட ஏற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கும். இரண்டு கம்பனிகள் மாத்திரமே முதன்மைச் சந்தையினை (உரித்துவம்) நாடி ரூபா 494.4 மில்லியனைத் திரட்டிக்கொண்டன. 2013 இல் எட்டு கம்பனிகள் உரிமை வழங்கல்க@டாக ரூபா 25.5 பில்லியனைத் திரட்டிக்கொண்டன. 2012 இல் 19 கம்பனிகள் உரிமை வழங்கல்க@டாக ரூபா 10.9 பில்லியனைத் திரட்டிக்கொண்டன. முன்னைய ஆண்டின் ரூபா 12.5 பில்லியனுடன் ஒப்பிடும்போது பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் 28 முறிகள் வழங்க@டாக ரூபா 68.3 பில்லியனைத் திரட்டிக்கொண்டன. ஓர் குறிப்பிட்ட வருடத்தில் கடன் வழங்க@டாக திரட்டப்பட்ட உயர்ந்த தொகை இதுவாகும்.

**கொ.ப.ப. ஊடான மூலதன உருவாக்கம் (ரூ. மில்லியன்)**




## இரண்டாந்தரச் சந்தை

பங்குச் சுட்டிகளின் செயற்திறன்

2013 ஆம் ஆண்டிற்கான மொத்தப் புரள்வானது ரூபா 200.4 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 6.2% வீழ்ச்சியினைக் குறிப்பிட்டது. வருடத்தின் தினசரிச் சராசரிப் புரள்வானது ரூபா 828.4 மில்லியனாகும். பங்குகளின் விலைகளில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் வர்த்தகம் செய்யப்படும் பரிமாணத்தில் வீழ்ச்சி காணப்பட்டது. இவ்வருடத்தில் வர்த்தகம் செய்யப்பட்ட எண்ணிக்கையானது 9,054 மில்லியன் பங்குகளாவதுடன் இது 2012 இலிருந்து பார்க்கும்போது 6.5% வீழ்ச்சியாகும். மீளாய்வாண்டில் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையானது 1,421,303 வர்த்தகங்களாவதுடன் இது 2012 இன் 1,857,384 வர்த்தகங்களுடன் ஒப்பிடும்போது 23.4% வீழ்ச்சியினைப் பிரதிபலிக்கின்றது.

விலை உழைப்பு விகிதமானது மாற்றமடையாது 15.9 மடங்காகக் காணப்பட்டது. வெளித்தோன்றும் மற்றும் அபிவிருத்தியடைந்த சந்தைகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் சந்தையானது நியாயமாக விலையிடப்பட்டுள்ளது. விலை புத்தகப் பெறுமதியானது ஓர் கம்பனியின் பொறுப்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பின்னர் பங்குதாரர்களுக்கு எஞ்சியுள்ள விளைவினை அளவிடும் இன்னுமோர் முக்கிய குறிகாட்டியாகக் காணப்படுகின்றது. விலை புத்தகப் பெறுமதியானது மீளாய்வாண்டில் 2.1 இலிருந்து 2.0 ஆகக் குறைவடைந்தது.

உருவம் 10: வெளிநாட்டுப் பங்களிப்பு




## சந்தை மூலதனவாக்கம்

சந்தை மூலதனவாக்கம் என்பது பங்குச் சந்தையின் பரிமாணத்தை விளக்கிக்காட்டும் ஓர் பிரதானமான அளவீடாகும். ஓர் உயர்ந்த சந்தை மூலதனவாக்கம் என்பது வளர்ச்சியடையும் பங்குச் சந்தை நடவடிக்கையினையும் பங்குச் சந்தையில் ஓர் உயர்வடையும் போக்கினையும் பிரதிபலிக்கும். மீளாய்வாண்டில் கொ.ப.ப. இன் சந்தை மூலதனவாக்கமானது 2012 இல் காணப்பட்ட ரூபா 2,167 பில்லியனுடன் ஒப்பிடும்போது 13.4% அதிகரிப்புடன் ரூபா 2,459.9 பில்லியனாக உயர்வடைந்தது.

## வெளிநாட்டுக் கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள்

முன்னர் பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு கொள்வனவுகளோடு பார்க்கும்போது இவ்வருடத்திற்கான கொள்வனவானது குறிப்பிடத்தக்க 15.1% அதிகரிப்புடன் ரூபா 83.6 பில்லியனை எட்டியது. எவ்வாறாயினும் வெளிநாட்டு விற்பனை 79.2% அதிகரிப்புடன் ரூபா 60 பில்லியனை எட்டியதனால் வருடத்திற்கான மொத்தத் தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சலானது ரூபா 27.2 பில்லியனைப் பதிவுசெய்தது. இது கடந்த வருடத்தில் கொ.ப.ப. இல் பதிவுசெய்யப்பட்ட ஆகக்கூடிய தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சலான ரூபா 38.6 பில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 15.9 பில்லியனால் குறைவடைந்துள்ளது அல்லது 41.1% இனால் வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்தச் சந்தைப் புரள்வில் வெளிநாட்டு பங்குபற்றுனர்கள் 36.1% பங்களிப்பை வழங்கினார்கள். இது முன்னைய வருடத்தில் 24.8% ஆகக் காணப்பட்டது. (உருவம் 10)

உருவம் 11: கடன் சந்தை (ஆபொவ ரூ.மில்.)




## கடன் சந்தை

இலங்கை போன்ற நாட்டிற்கு நன்கு அபிவிருத்திசெய்யப்பட்ட கம்பனிகள் கடன் சந்தையானது மிகவும் முக்கியமானதாகும். இது கம்பனிகளது நீண்ட கால நிதித்தேவைகளை அதிகரிப்பதுடன் மிகவும் அவசியமான உட்கட்டமைப்பு நிதியளித்தலுக்கு வசதியளிக்கின்றது. தற்போது கம்பனிகள் நிதி திரட்டுவதற்குரிய மூலங்களுடன் இணைநிறைவாக்கப்படக்கூடிய ஓர் மாற்றீட்டு நிதி மூலமாக கம்பனிகள் கடன் சந்தை காணப்படலாம். இதுவரைக்கும் இலங்கையின் கடன் சந்தையானது அரசாங்கப் பிணையங்கள் சந்தையினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது. சமீபத்தைய வருடங்களில் கணிசமான அளவு கொள்கை மாற்றங்களினால், பட்டியலிடப்பட்ட முறிகளது உடமையாளர்களுக்கு கவர்ச்சிகரமான வரி விலக்குகள் அளிக்கப்பட்டதனால், பட்டியலிடப்பட்ட கம்பனிகள் கடன்பத்திரங்களது வழங்கலில் ஓர் எழுச்சியினை தூண்டியுள்ளது. வரி அறவிடப்படாத முறிகளின் கொள்வனவாளர்களில் பெரும்பகுதியினர் வங்கிகளாகும். கம்பனிகள் கடன் சந்தையானது விரிவடையும் அறிகுறிகளைக் காட்டினாலும் ஒப்பீட்டளவில் அரசாங்கப் பிணையங்கள் சந்தையுடன் பார்க்கும் போது கம்பனிகள் கடன் சந்தையானது மிகவும் சிறிதாகக் காணப்படுகின்றது. மீளாய்வாண்டில் 28 தொகுதிக்கடன்கள் வழங்கலின் மூலம் ரூபா 68.3 பில்லியன் கம்பனிகள் கடன்கள் திரட்டப்பட்டதுடன் இதேநேரம் முன்னைய ஆண்டில் 3 தொகுதிக்கடன்கள் வழங்கல்கள் மூலம் ரூபா 12.5 பில்லியன் திரட்டப்பட்டது. (உருவம் 11)

# மூலதனச் சந்தை மீளாய்வு

உருவம் 13: நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் சந்தைப் பங்களிப்பு




## துறைசார் செயற்திறன்

பங்குப் பரிமாற்றக தரவுகளின் பிரகாரம் 2013 இல் 57 கம்பனிகள் 15 சதவீதத்திற்கும் அதிகமான மொத்த விளைவினைக் காண்பித்ததுடன், 26 கம்பனிகள் 30 சதவீதத்திற்கும் அதிகமான விளைவினைக் காண்பித்தன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது பானங்கள், உணவு மற்றும் புகையிலைத் துறையானது 28.0% வளர்ச்சியினை எட்டியதுடன் வலு மற்றும் சக்தித் துறையானது 19.5% வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. தகவல் தொழில்நுட்பத் துறையானது மோசமான செயற்திறனுடன் 27.3% வீழ்ச்சியை அடைந்தது. வர்த்தகத் துறையானது 21.3% ஆல் வீழ்ச்சியடைந்தது.

மீளாய்வாண்டில் 7 துறைகளின் விலைச் சுட்டிகள் சாத்தியமான செயற்திறனைப் பதிவுசெய்ததுடன் 13 துறைசார் சுட்டிகள் வீழ்ச்சியடைந்தன. (உருவம் 12)

உருவம் 12: துறைசார் செயற்திறன்

| துறை | வருடாந்த - மாற்றம் |
|---|---|
| பானம்,உணவு மற்றும் புகையிலை | 28.01 |
| வலு மற்றும் சக்தி | 19.51 |
| சுகாதாரத்துறை | 16.95 |
| களஞ்சியப்படுத்தல் மற்றும் தேவைப்பொருட்கள் | (16.83) |
| வர்த்தகம் | (21.39) |
| தகவல் தொழில்நுட்பம் | (27.33) |

## நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்கள்

நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதியானது 2012 டிசம்பர் 31இல் ரூபா 54 (அண்ணளவாக) பில்லியனாகக் காணப்பட்டது. பின்வரும் உருவத்தில் ஒவ்வொரு நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவ கம்பனியினதும் தேறிய சொத்தின் பெறுமதியின் அடிப்படையில் சந்தைப் பங்களிப்பானது வழங்கப்பட்டுள்ளது. (உருவம் 13)

## நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் ஒட்டுமொத்த நிலைமை

நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் செயற்திறனில் ஒப்பீட்டளவு புள்ளிவிவரங்கள் 2013 மற்றும் 2012 காலப்பகுதிக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

உருவம் 14: நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் ஒட்டுமொத்த நிலைமை

| | 31.12.2013 இல் | 31.12.2012 இல் | % மாற்றம் |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட நிதியங்களின் எண்ணிக்கை | 62 | 48 | 29% |
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதி (ரூபா மில்லியன் அண்ணளவாக) | 54,304 | 31,062 | 75% |
| அலகுடைமையாளர்களின் எண்ணிக்கை | 29,648 | 27,952 | 6% |
| வழங்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை (மில்லியன்) | 4,134 | 2,251 | 84% |
| உரித்துவத்தில் முதலீடு (ரூபா மில்லியன் அண்ணள.) | 9,453 | 8,944 | 6% |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு (ரூபா மில்லியன்) | 17,825 | 5,449 | 227% |
| ஏனைய கருவிகளில் முழு முதலீடு (ரூபா மில்லியன்) | 27,000 | 16,596 | 63% |

** வணிகத்தாள்கள், நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள், வங்கி வைப்பு முதலியன.

மூலம்: நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படும் முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்

# முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள்

முகாமையாளர்கள் மேல் இடமிருந்து வலம் : செல்வி மதுகயனி பலப்பிட்டிய, திரு. சுனெத் பெரேரா, திருமதி. ரன்மினி ஜயதிலக்க, செல்வி. சர்மிளா பண்டிதரத்ன

கீழ் இடமிருந்து வலம் நிற்பவர்கள்: திருமதி. ஒலிவி சொலங்க ஆரச்சி, செல்வி. குமாரி சிறிவர்தன, செல்வி. புத்தினி என் ஹேரத், திருமதி. எரந்ததி வைத்தியசேகர, திரு. மகேஷ் அபேசேகர | இடமிருந்து வலம் அமர்ந்திருப்போர்: திரு. நிமல் குமாசிங்க, திருமதி. எச். கே. ஏ. சாமரி புத்திக





# ஊழியர்கள்

மேல் இடமிருந்து வலம் நிற்பவர்கள் : செல்வி. ரோஷினி பீரிஸ், செல்வி. சுஹாதினி விக்கிரமசிங்க, செல்வி. லுசாந்தினி சிவனேசராஜா, திருமதி. நிசன்சலா ஹேரத், செல்வி. லக்ஷ்மி அதபத்து | மேல் இடமிருந்து வலம் அமர்ந்திருப்போர்: செல்வி. பி. எம். நிரோாிகா உதயங்கனி, திரு. லலிந்த ஜயரத்ன

கீழ் இடமிருந்து வலம் நிற்பவர்கள்: திரு. சுகத் அல்விஸ், திருமதி. ஜொஹலின் கருணாரத்ன, திருமதி. ஜே. கே. பிரியதர்ஷினி, செல்வி. நுஹாலா தேவதாசன், திருமதி. நிஷோகா ஜயதுங்க. | இடமிருந்து வலம் அமர்ந்திருப்போர் : திருமதி. மஞ்சுளா சந்திரரத்ன, செல்வி. கிரிஸ்டோபல் சில்வா





மேல் இடமிருந்து வலம் நிற்பவர்கள்: திரு. அநுர பெரேரா, திருமதி. அனுலா விஜேசிங்க, திருமதி. சமந்தி குணவர்தன, திரு. ஆர். கே. வசந்த சுனிமல், செல்வி. ஹேன் கிரிஷாந்தி பர்னாந்து, திருமதி. பிம்பா கம்மதிகே | இடமிருந்து வலம் அமர்ந்திருப்போர் : பிரியந்த ஹேரத், திருமதி. ஜூலி அலகக்கோன்

கீழ் இடமிருந்து வலம் நிற்பவர்கள்: செல்வி. ரஜ்மி மானதுங்க, செல்வி. மேகலா ஜயபால, திருமதி. சவுமி கொடிப்பிலி, திருமதி. பிரதிபானி ஹேரத், செல்வி. ஷீனா குணரத்ன | இடமிருந்து வலம் அமர்ந்திருப்போர்: திரு. ரக்கித்த பண்டார, செல்வி. எரங்க மந்திரிரத்ன





# ஊழியர்கள்

மேல் இடமிருந்து வலம் நிற்பவர்கள்: செல்வி. சலினி பெரேரா, திரு. தனிஷ்க திலகரத்ன, திருமதி. பிரபாஷினி சமரக்கோன், திருமதி. கிருஷாந்தி முத்துதந்திரிகே, திருமதி. ஜனேசா ராஜபுர | மேல் இடமிருந்து வலம் அமர்ந்திருப்போர்: திருமதி. அசோகா கே. ஜயரத்ன, திரு. எம். ஜயசேகர

கீழ் இடமிருந்து வலம் நிற்பவர்கள்: திருமதி. சிதாரா திசேரா, திரு. எஸ். டீ. தர்மசிறி, செல்வி. வை. டீ. சந்தமலி, திருமதி. ஏஷினி பண்டார, திருமதி. சித்தி மலீஹா, திரு. டி. எம். ஜி. பிரியந்த | இடமிருந்து வலம் அமர்ந்திருப்போர்: திருமதி. லக்ஷ்மி விக்கிரமநாயக்க, திரு. சந்தருவன் விஜேரத்ன





மேல் இடமிருந்து வலம் நிற்பவர்கள்: திரு. சந்திரன் நாகேந்திரன், திருமதி. தக்ஷிலா பிரான்சிஸ், திருமதி. ஜன்சனிதேவி குஹநேசன், திரு. டபிள்யு. ஆரியரத்ன, திரு. எம். ஏ. இம்ரான் | இடமிருந்து வலம் அமர்ந்திருப்போர் : திரு. ஜி. டி. கபில குமார, திரு. டி. பெத்தும் நிரோஷன

சமூகமளிக்காதோர்: திருமதி. சஜீவனி பக்மீதெனிய, திரு. பி. டபிள்யு. எல். பியதிஸ்ஸ, செல்வி. பி. டி. பத்மராணி,
திருமதி. பிரீணிகா நிலக்ஷி பெரேரா





# செயல்முறை

## மீளாய்வு

# செயல்முறை மீளாய்வு

## முறைமைப்படுத்தல்கள்

செயற்திறனுள்ள விலைக் கண்டுபிடிப்பு, முதலீட்டாளர்களது நலன்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கும் இடர்நேர்கைகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் மட்டத்தில் வைத்திருக்கப்படுவதினை உறுதிசெய்தல் மற்றும் சந்தையில் நம்பகத்தன்மையினைப் பேணுவதற்கும் இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தையினை முறைமைப்படுத்துகின்றது. இ.பி.ப.ஆ. சட்டமானது மூலதனச் சந்தைக்கான முறைமைப்படுத்தல் வடிவமைப்பினை எடுத்துக்காட்டுவதுடன் இது இலங்கையின் மூலதனச் சந்தையின் முக்கிய மூலைக்கல்லாகும்.

## உரிமமளித்தல் மற்றும் பதிவீடுகள்

மூலதனச் சந்தை செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக சந்தைப் பங்குபற்றுநர்களுக்கு ஓர் முறையான உரிமம் மற்றும் பதிவீடு தேவைப்படுவதுடன் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது சந்தைப் பங்குபற்றுனர்கள் சேவை வழங்குவதில் திறமையுள்ளவர்களாகவும் தொழில்தரமுள்ளவர்களாகவும் காணப்படுவதனை உறுதி செய்வதற்காக உரிமங்கள் மற்றும் பதிவீடுகளை வழங்குகின்றது. (உருவம் 15)

உருவம் 15: சந்தைப்பங்குபற்றுனர்களுக்கான உரிமமளித்தல் மற்றும் பதிவீடுகள்

| சந்தைப் பங்குபற்றுனர்கள் | உரிமமளிக்கப்பட்ட / பதிவீடு செய்யப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை | 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உரிமங்கள் / பதிவீடுகள் |
|---|---|---|
| பங்குப் பரிமாற்றகங்கள் | 01 | - |
| பங்குத் தரகுக் கம்பனிகள் (உரித்துடமை/கடன்) | 28 | - |
| பங்குத்தரகுச் கம்பனிகள் (கடன்) | 02 | 01 |
| பங்கு வர்த்தகர்கள் | 08 | 02 |
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளின் முகாமைத்துவக் கம்பனிகள் | 13 | - |
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்கள் | 62 | 14 |
| முதலீட்டு முகாமையாளர்கள் | 37 | 02 |
| எல்லைக் கடன் வழங்குநர்கள் | 33 | - |
| ஒப்புரவாளர்கள் | 10 | - |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | 03 | - |
| தீர்வக இல்லங்கள் | 01 | - |

## கொள்கை முன்னெடுப்புகள்

### இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திற்கான திருத்தங்கள்

இ.பி.ப.ஆ. சட்டத்திற்கான முன்மொழியப்பட்ட திருத்தங்களது ஒன்றிணைக்கப்பட்ட நகலானது முடிவுறுத்தப்பட்டு 2013 ஜுலை 26ஆம் திகதி மந்திரி சபையின் அங்கீகாரத்திற்காக கொள்கை பத்திரிகைகள் மற்றும் ஒப்பிடல் அட்டவணை ஆகியவற்றுடன் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சிற்கு (நிதிஅ) அனுப்பிவைக்கப்பட்டது. இத்திருத்தங்களாவன வொ்ஸ்ட் இனிசீயேடிவ் (உலக வங்கியின் நிதியியல் துறை மறுசீரமைப்பு மற்றும் பலப்படுத்தல் அங்கம்) இன் தொழில்நுட்ப உதவியுடன் முன்மொழியப்பட்டன. நி.தி.அ. ஆனது முன்மொழியப்பட்ட இத்திருத்தங்களை மந்திரி சபைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் இவற்றை மீளாய்வு செய்வதற்காக இலங்கை மத்திய வங்கி, கம்பனிகள் துறை, சட்டபீடம், மற்றும் அமைச்சு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் 14 அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஓர் உயர் மட்ட விஷேடக் குழுவினை கூட்டியுள்ளது. இ.பி.ப.ஆ. சட்டத்திற்கு முன்மொழியப்படும் திருத்தங்கள் தற்போது நடைமுறையிலுள்ள சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழுக்களின் ஒழுங்கமைப்பின் (ச.பி.ஆ.ஒ.) நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் என்பவற்றுக்கமைவாக உருவாக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட திருத்தங்கள் ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றுக்கு வசதியளிக்கின்றது

- பரஸ்பரமற்ற உரித்துடமை பகிரப்பட்ட பங்குப் பரிமாற்றகங்கள், மூலாதாரப் பிணையங்களது பரிமாற்றகங்கள், தீர்வக இல்லங்கள் மற்றும் மத்திய வைப்பகங்கள் என்பனவற்றை சில பாதுகாப்புகளுடன் சந்தை நிறுவனங்களாக ஒரே தடவையில் உரிமமளிப்பது

- கம்பனித்துறை நிதி ஆலோசகர்கள், நிதி திட்டமிடுபவர்கள், பகுத்தாராய்வாளர்கள், மூலாதாரப் பிணையங்கள் தரகர்கள், வர்த்தகர்கள் மற்றும் நிதி முகாமையாளர்களை முறைமைப்படுத்தல்

- இலங்கையில் கம்பனிகளது முறிகள் சந்தையை விருத்தி செய்வதற்கான ஓர் உந்துசக்தியை அளிக்கும்பொருட்டு பொதுமக்களுக்கு தொகுதிக்கடன்கள் வழங்குவதில் ஆலோசனை வழங்கும் அல்லது அதனை மேற்கொள்ளும் கம்பனிகள் மற்றும் சந்தை இடையீட்டாளர்கள் தொடர்பாக இ.பி.ப.ஆ. இன் நியாயாதிக்கங்கள் பரப்பப்படுதல்

- மத்திய எதிர்தரப்பினராகச் செயற்படும் ஓர் தீர்வக இல்லத்தினை ஸ்தாபித்தல் மற்றும் முறைமைப்படுத்தல்

- குடியியல் வலுவளிப்புகள் மற்றும் நிருவாக ஒப்பளிப்புகளது ஏற்பாடுகள்
- சந்தை துஷ்பிரயோககங்களினால் பாதிப்புக்குள்ளான முதலீட்டாளர்களுக்கு நட்டஈடு வழங்குதல்
- முதலீட்டாளர்களது பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட ஏனைய தற்செயலான மற்றும் உறுதுணை ஏற்பாடுகள் மற்றும் உள்@ர் மற்றும் வெளிநாட்டு முறைமைப்படுத்துபவர்களுடன் தகவல் பரிமாற்றம்.

## கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தினை பரஸ்பரமற்ற உரித்துவம் பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றுவதவற்கான நகல் சட்டமூலம்.

கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் உத்தேசித்த பரஸ்பரமற்ற உரித்துவம் பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றும் செயற்பாடானது பரிமாற்றகத்தின் அங்கத்தவர்களது வர்த்தக உரிமைகளிலிருந்து உரித்துவத்தினையும் முகாமைத்துவத்தினையும் வேறுபடுத்தும். உத்தேசித்த பரஸ்பரமற்ற உரித்துவம் பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றுவதற்கான நகல் சட்டமூலமானது தற்போதைய உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியாகச் செயற்படும் பரஸ்பர உரித்துவமுடைய கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தை பரஸ்பரமற்ற உரித்துவம் பகிரப்பட்ட பங்குகளினால் வரையறுக்கப்பட்ட கம்பனியாகச் செயற்படும் பங்கும் பரிமாற்றகமாக மாற்றுவதற்கு வசதியளிக்கும். சட்டவரைஞர் பரஸ்பரமற்ற உரித்துவம் பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றுதவதற்கான நகல் சட்டமூலத்தை மீளாய்விற்காகவும் கருத்துக்களுக்காகவும் இ.பி.ப.ஆ. க்கு சமர்ப்பித்துள்ளார். இ.பி.ப.ஆ. அதன் மீளாய்வுச் செயற்பாட்டில் கம்பனிகள் பதிவாளர் நாயகம், மதிப்பிற்குரிய சட்டமா அதிபர் மற்றும் கொ.ப.ப. ஆகியோருடன் கலந்துரையாடி அதன் கருத்துக்களைச் சமர்ப்பித்தது.

மீளாய்வாண்டில் கொ.ப.ப. இன் பரஸ்பரமற்ற உரித்துவம் பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றுவதற்கான செயற்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் செயற்திட்டக் குழுவானது இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்குகின்றது. இக்குழுவானது ஓர் ஆலோசனை வழங்குனரிடமிருந்து கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் மதிப்பீடு ஒன்றை நடாத்தி பரஸ்பரமற்ற உரித்துவம் பகிரப்பட்ட பங்குப் பரிமாற்றகத்தின் ஆரம்பப் பங்காளிகளிடையே ஓர் நியாயமான உரித்துவப் பகிர்வினையும் மேற்கொள்வதற்காக பிரேரணையொன்றைக் கோரியுள்ளது.

## புதிய பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் விதிக்கோவையின் நகல் சட்டமூலம்

இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது புதிய பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையின் நகல் சட்டமூலத்திற்கு இறுதி செப்பனிடுதல்களைச் செய்தவண்ணமுள்ளது. இது முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் இவ்விதிக்கோவையானது வர்த்தமானியிடப்படுவதற்கு முன்னர் பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகள் கோரப்படும்.

## ஓர் தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடாக ஆகக்குறைந்த பொதுப் புழக்கத்திற்கான விதிகள்

பொதுமக்களது ஆலோசனைகள் மூன்றின் பின்னர் இ.பி.ப.ஆ. தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடாக பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளுக்கு ஆகக்குறைந்த பொதுப் புழக்கத்தினைப் பேணுவதற்கான விதிகளை வழங்கியது. இதன் பின்னர் கொ.ப.ப. ஆனது அதன் பட்டியலிடல் விதிகளில் குறிப்பிட்ட விதிகளை ஒன்றிணைக்குமாறு பணிப்புரைத்தது.

இவ்விதிகள் ஏனையவற்றுக்கிடையில் கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் பின்வருமாறு ஆகக்குறைந்த பொது உரித்துவத்தினை பேணுமாறு பொறுப்பாணையை வழங்கியுள்ளன.

- பிரதான பலகையில் பட்டியலிட்டுள்ள கம்பனிகள் ஆகக்குறைந்த பொது உரித்துவமாக 20%த்தை 750 பங்குதாரர்களின் கைகளில் இருப்பதனை பேணுதல் வேண்டும் அல்லது அதன் பொது உரித்துவத்தில் 500 பொது பங்குதாரர்களின் கைகளில் சந்தை மூலதனவாக்கத்தில் ரூபா 5 பில்லியனுடன் ஆகக்குறைந்த பொது உரித்துவமாக 10% இனையும் பேணுதல்.
- திரிசவி பலகையில் பட்டியலிட்டுள்ள கம்பனிகள் ஆகக் குறைந்தது 10% பொது உரித்துவம் 200 பொதுப் பங்குதாரர்களின் கையில் இருப்பதனைப் பேணுதல்

## கரைகடந்த பட்டியலிடல் விதிகள்

இ.பி.ப.ஆ. தெற்காசிய பரிமாற்றகச் சம்மேளனத்தினால் (தெ.ப.ச.) பிராந்திய நிதியியல் ஒன்றிணைப்பினை ஊக்குவிப்பதற்காக நடாத்தப்பட்ட கருத்தரங்கில் பங்குபற்றியது. மூலதனச் சந்தையின் சந்தை நுண்கட்டமைப்பினை விருத்திசெய்யும் நோக்கில், தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள அனைத்துப் பங்குப் பரிமாற்றகங்களிலும் ஓர் பொருத்தமான முறைமைப்படுத்தல் வடிவமைப்பினை நிருவுவதற்காக தெ.ப.ச. இனால் விருத்திசெய்யப்பட்ட ஓர் விதிப் புத்தகம் ஓர் வழிகாட்டியாகப் பயன்படுத்துவதற்காக கொ.ப.ப. க்கு அனுப்பிவைக்கப்பட்டது. இக்குறிப்பிட்ட விதிப் புத்தகமானது பிராந்திய நிதியியல் ஒன்றிணைப்பிற்கு ஓர் முறைமைப்படுத்தல் வடிவமைப்பினை வழங்குவதனையும் கரைகடந்த பட்டியலிடல்களை ஊக்குவிப்பதனையும் நோக்காகக் கொண்டு வெளியிடப்பட்டது.

மீளாய்வாண்டில் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பிற்கான சங்கத்தின் (தெ.பி.ஒ.ச.) ஓர் "உச்சநிலை அங்கம்" தராதரத்தினை வழங்குவதற்கான தெ.ப.ச. இன் விண்ணப்பத்திற்கு, அது

தெ.பி.ஒ.ச. இன் வழிகாட்டிகள் மற்றும் செயல்முறைகளுக்கு அமைவுறும் பட்சத்தில், சம்மதத்தினை வழங்கியது. இச்சம்மதமானது இ.பி.ப.ஆ. னால் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சிற்கு வழங்கப்பட்டது.

# செயல்முறை மீளாய்வு

### சந்தை இடையீட்டாளர் விதிகளை வர்த்தமானியிடல்

இ.பி.ப.ஆ. சந்தை இடையீட்டாளர் விதிகளது மீளாய்வினை பூர்த்திசெய்து அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக சட்டவரைஞருக்குச் சமர்ப்பித்தது. சட்டவரைஞர் அதனைத் தயார்செய்தவண்ணமுள்ளார்.

### முதலீட்டுச் சபைக் (மு.ச.) கம்பனிகளை பட்டியலிடுவதற்காக முதலீட்டுச் சபையுடன் ஒன்றிணைந்த வடிவமைப்பு

மு.ச. கம்பனிகளுக்கு ஓர் வர்த்தக மேடையை வழங்குவதன் மூலம் இலங்கைக்கு மேலதிக வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் (வெ.நே.மு.) கவர்வதற்காக, இ.பி.ப.ஆ. முதலீட்டுச் சபையுடன் இணைந்து மு.ச. கம்பனிகளது சாதாரண வாக்குரிமையுள்ள பங்குகளை கொ.ப.ப. இல் பட்டியலிடுவதற்காக ஓர் வடிவமைப்பினை விருத்திசெய்தது.

### “அறிமுகம்” முறையின் கீழ் பொதப் பங்குதாரர்களை கதவடைப்பிலிருந்து தளர்த்துவதற்கான வழிகாட்டல்கள்

அறிமுகத்தினூடாக ஆரம்பப் பட்டியலிடல் விண்ணப்பத்திற்கு 12 மாதங்களுக்கு முன்னர் பங்குகளைக் கொள்வனவு செய்துள்ள பொதுப் பங்குதாரர்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள கதவடைப்பு விதியினை, அறிமுகத்தினூடாக பட்டியலிடும் சமயம் காணப்படும் ஆகக் குறைந்து பொது உரித்துவப் தேவைப்பாட்டிற்கு அமைவுறும் பொருட்டு, உள்ளக வழிகாட்டிகள் விருத்திசெய்யப்பட்டன. இவ்வழிகாட்டிகள் பட்டியலிடல்களுக்கு இடமளிப்பதற்காகவும் “பொது பங்குதாரர்கள்” இரண்டாந்தரச் சந்தை வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு வசதியளிப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்டன.

### கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் விதிகளுக்கான திருத்தங்கள்

மீளாய்வாண்டில் கொ.ப.ப. இன் விதிகளில் பின்வரும் திருத்தங்களுக்கான அங்கீகாரத்தினை இ.பி.ப.ஆ. வழங்கியது.

### மத்திய வைப்புத் திட்டமுறை விதிகள் (ம.வை.தி. விதிகள்)

புதிய தன்னியக்க வர்த்தக முறையின் 7ஆம் பதிப்பினூடாகக் கடன் பிணையங்களது வர்த்தகம், தீர்வகம் மற்றும் தீர்ப்பனவிற்கு வசதியளிப்பதற்காக ம.வை.தி. விதிகளுக்கான திருத்தங்கள்.

### பட்டியலிடல் விதிகள்

- தொகுதிக்கடன்கள் வழங்குவது தொடர்பாக நம்பிக்கைப் பொறுப்புறுதியுடன் சம்பந்தப்பட்ட கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதி 3 இல் திருத்தங்கள்.
- விதிகள் 2, 3, 5 மற்றும் 7 இற்கான திருத்தங்கள்

இ.பி.ப.ஆ. ஆல் 2013 ஒக்டோபர் 11, 2013 ஆகஸ்ட் 23, 2011 செப்டம்பர் 14 மற்றும் 2010 நவம்பர் 22 திகதியிடப்பட்டு கொ.ப.ப. க்கு விடுக்கப்பட்ட பணிப்புரையின் தொடர்ச்சியாக கொ.ப.ப. இன் மேற்குறிப்பிட்ட பட்டியலிடல் விதிகளுக்கு பல திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இது ஓர் ஆரம்பப் பொது வழங்கலுக்கு முன்னர் கம்பனியின் ஸ்தாபகர்களுக்கு உரித்தான பங்குகள் தொடர்பாக பட்டியலிடலின் பின்னர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அவற்றுக்கு ஓர் “கதவடைப்பினை” அறிமுகப்படுத்துவதற்காகும். மேலும், ஓர் ஆரம்பப் பொது வழங்கலுக்கு முன்னர் பொதுப் பங்குதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட பங்குகள் இந்த கதவடைப்பு விதியிலிருந்து விடுவிக்கப்பட்டன.

- கடன் பிணையங்களது வர்த்தகம் தொடர்பான விதிகளுக்கான திருத்தங்கள்

இலங்கையின் கம்பனி முறிகள் சந்தையினை விருத்திசெய்வதற்காக ஆணைக்குழுவின் முன்னெடுப்பின் தொடர்ச்சியாக, பத்து முக்கிய செயற்திட்டங்களின் கீழ், கடன் பிணையங்கள் தொடர்பாக தற்போது நடைமுறையிலுள்ள பட்டியலிடல் விதிகளில் ஓர் மீளாய்வு இடம்பெற்றது. இம் முன்னெடுப்பின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள விஷேட குழுவானது கடன் பிணையங்கள் தொடர்பாக கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் பல திருத்தங்களைச் சிபாரிசு செய்தது. இவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பின்னர் கொ.ப.ப. இன் நடைமுறையிலுள்ள பட்டியலிடல் விதிகளுள் ஒன்றிணைக்கப்பட்டது.

### பங்குத் தரகர் விதிகள்

பங்குத்தரகர் விதிகளின் 6 ஆம் பிரிவிற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இது பங்குத் தரகுக் கம்பனிகள் வெளிநாட்டவர்களை (கூட்டிணைப்பு அங்கம்/தனிநபர்) முகவர்களாக நியமிப்பதற்கு அனுமதியளிக்கின்றது.

### தன்னியக்க வர்த்தக முறை விதிகள் (த.வ.மு. விதிகள்)

தன்னியக்க வர்த்தக முறை விதி இலக்கம் 8.1 ற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இது கொ.ப.ப. இன் தன்னியக்க வர்த்தக முறையில் இறுதி விலை கணிப்பீட்டு வழிமுறை பற்றியதாகும்.

### இ.பி.ப.ஆ. ஆல் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

மீளாய்வாண்டில் பின்வரும் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

- கொ.ப.ப., உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர்கள் மற்றும் பங்கு வர்த்தகர்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட மத்திய வைப்புத்திட்ட முறைமை ஆகியோருக்கு ஓர் பணிப்புரை வழங்கப்பட்டது. இது தேசிய சேமிப்பு வங்கியில் (தே.சே.வ.) விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அகற்றுவதற்காக வழங்கப்பட்டது. ரூபா 20 மில்லியனுக்கும் மேலான அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்கும் தே.சே.வ. அத்தாட்டிசிப்படுத்தப்பட்ட

பணிப்பாளர் சபை தீர்மானத்தினை வழங்கும் தேவைப்பாடு காணப்பட்டது. இது வங்கியினால் மேற்கொள்ளப்படும் பங்குக் கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவுத் தவறுதல் இடர்நேர்கையினை குறைப்பதற்காக கிரமமான வழிமுறைகள் காணப்படுவதாக வங்கியானது எடுத்துக் கூறியதன் காரணமாக அகற்றப்பட்டது.

- விற்பனைக்கான கொடைமுனைவுகள் மற்றும் ஒப்பளிப்பதற்கான கொடைமுனைவுகள் தொடர்பாக ஓர் ஆரம்பப் பொது வழங்கலுக்கு முன்னர் ஸ்தாபகர்களினாலும் மற்றும் ஏனைய பிரத்தியேக பங்குதாரர்களினாலும் வைத்திருக்கப்படும் பங்குகளில் கதவடைப்புக் காலத்தினை அமுல்படுத்தும் பணிப்புரையொன்று கொ.ப.ப. க்கு வழங்கப்பட்டது.

- டச்வுட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் பிஎல்சி இன் நடாத்தையில் ஓர் ஆரம்ப விசாரணையினை மேற்கொண்டதன் பின்னர் இ.பி.ப.ஆ. கம்பனியானது சில தகவல்களை சந்தைக்கு பரப்பும்வரை டச்வுட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் பிஎல்சி இன் பங்குகளிலான வர்த்தகத்தை இடைநிறுத்தும் இரண்டு பணிப்புரைகளை செப்டம்பரில் வழங்கியது.

- முதலீட்டாளர்களது நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு டச்வுட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் பிஎல்சி க்கு ஓர் பணிப்புரை வழங்கப்பட்டது. இது கம்பனியானது அதன் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்ட நடைமுறையற்ற சொத்துக்கள் எதனையும் இ.பி.ப.ஆ. இன் முன் அங்கீகாரமின்றி பொறுப்பேற்கவோ, உரிமை மாற்றவோ, விற்கவோ, அடகு வைக்கவோ, வாடகைக்கு விடவோ, ஈடுவைக்கவோ, குத்தகைக்கு விடவோ, அதன்மேல் பொறுப்பினை உருவாக்கவோ அல்லது பராதீனப்படுத்தவோ தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வழமையான வணிகச் செயற்பாடுகளில் கம்பனியினால் பேணப்படும் புத்தகங்கள் அல்லது பதிவுகளிலிருந்து எவ்விதமான தகவல்களையும் அழிப்பதனையோ, மறைப்பதனையோ, மாற்றுவதனையோ, திருத்துவதனையோ அல்லது அகற்றிவிடுவதனையோ நிறுத்திவிடுமாறு இ.பி.ப.ஆ. அறிவுரை வழங்கியது. அத்துடன் இ.பி.ப.ஆ. ஆல் நடாத்தப்படும் புலனாய்விற்கு கம்பனியானது தனது பூரண ஒத்துழைப்பினை இ.பி.ப.ஆ. க்கு வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

- உரித்துவத்தினை பட்டியலிடும் ஓர் முறையான அறிமுகத்தினை மறுபடியும் செயல்படுத்துமாறு கொ.ப.ப. க்கு ஓர் பணிப்புரை விடுக்கப்பட்டது. இவ்வாறு பட்டியலிடுவதற்காக ஏற்கனவே பட்டியலிடல் விதிகளில் எடுத்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கும் மேலதிகமாக பட்டியலிடுவதற்கான தகுதிப் பிரமாணம், பட்டியலிடுவதற்கு முன்னர் பங்குகளுக்கான கதவடைப்புக் காலம், அறிமுகப்படுத்தல் ஆவணத்திற்கான மேலதிகத் தகவல்கள் மற்றும் ஏனைய மேலதிகத் தேவைப்பாடுகளையும் உள்ளடக்கும்.

- திரிசவி பலகையில் பட்டியலிடுவதற்கு தேவையான தகுதிப் பிரமாணம் தொடர்பாக கொ.ப.ப. க்கு ஓர் பணிப்புரை வழங்கப்பட்டது. இங்கு கம்பனிகள் ஆகக்குறைந்த பொது உரித்துவமாக, பட்டியலிடும் சமயம் காணப்படும் மொத்த பங்குகளின் எண்ணிக்கையில், 10% த்தினையும் இது ஆகக்குறைந்தது 200 பொதுப் பங்குதாரர்களினால் வைத்திருக்கப்படல் வேண்டும்.

- நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளின் முகாமைத்துவக் கம்பனிகள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு அவர்கள் ஒவ்வொரு நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சியிலும் எந்நேரமும் ஆகக்குறைந்தது 5 அலகுடைமையாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்று ஓர் பணிப்புரை விடுக்கப்பட்டது.

- தொடர்புடைய நபர்களது கொடுக்கல் வாங்கல்களில் சிறந்த நடைமுறைகளுக்கான நியதிகளை அமுல்படுத்துமாறு கொ.ப.ப. க்கு ஓர் பணிப்புரை விடுக்கப்பட்டது. இது இப்பணிப்புரையில் குறிக்கப்பட்டவாறு அனைத்து பொதுப் பட்டியிலிடப்பட்ட கம்பனிகளுக்கும் பிரயோகிக்கத்தக்கதாகவும், இனங்காணப்பட்ட கால எல்லைக்குள்ளும் மற்றும் அமுலாக்கல் நியதிகளுடனும் காணப்படல் வேண்டும்.

- நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளின் முகாமைத்துவக் கம்பனிகள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களில் உள்ள நிலையான வருமானப் பிணையங்களுக்கு ஒரே விதமான மதிப்பிடல் முறைகளை அமுல்படுத்துமாறு ஓர் பணிப்புரை விடுக்கப்பட்டது.

- 2014 ஜனவரி 01 முதல் தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடாக ஆகக்குறைந்த பொதுப் புழக்கத்தை பேணும் விதிகளை கட்டாயமாக அமுல்படுத்துமாறு அனைத்து பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கும் ஓர் பணிப்புரை வழங்கப்பட்டது. இது அமுலுக்கு வரும் தினத்தன்று இதற்கு அமைவுறாத கம்பனிகளுக்கு மூன்று ஆண்டு கால அவகாசம் வழங்கப்பட்டு அதற்குள் அமைவுறல் வேண்டும்.

- அனைத்து பொதுப் பட்டியலிடப்பட்ட கம்பனிகளும் அவற்றின் பணிப்பாளர்கள் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரிகள் பங்குகள் மற்றும் ஏனைய வகுப்புப் பங்குகளில் அவர்களது உரிய நலன்களில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களை குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் சந்தைக்கு கட்டாயமாக வெளிப்படுத்தும்படி ஓர் பணிப்புரை வழங்கப்பட்டது.

# செயல்முறை மீளாய்வு

## அங்கீகாரங்கள்

### உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்கள்

ம.வை.தி. இன் சிபாரிசிற்கமைய இ.பி.ப.ஆணைக்குழுவானது உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு கொ.ப.பரிமாற்றகத்தில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்குகின்றது. இவ் அங்கீகாரமானது அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணச் சலவைத் தடுப்புச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல் அறிக்கைச் சட்டம் மற்றும் இலங்கையின் பிணையங்கள் தொடர்பான சட்டம் ஆகியவற்றிற்கு அமைவுறுதலைப் பொறுத்தே வழங்கப்படுகின்றது.

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. 178 உலக, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்டுள்ள பிணையங்களில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியதுடன் அங்கீகாரமளிக்கப்பட்ட 32 நிதியங்களின் பெயர் மாற்றங்களையும் ஏற்றுக்கொண்டது.

### பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியதிகளது நிர்வகிப்பு

1995ஆம் ஆண்டில் உருவானதும் பின்னர் 2003 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டதுமான பொறுப்பேற்புகளும் இணைப்புகளும் நியதிகள், பொறுப்பேற்புகளிலும் இணைப்புகளிலும் அத்தகைய பொறுப்பேற்பின் இலக்கு ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியாயின் பிரயோகிக்கப்படும். இந்த நியதியின் விதிகள் பொறுப்பேற்க முற்படும் கம்பனியின் ஒரே வகுப்பைச் சேர்ந்த சகல பங்குதாரர்களும் சமமான முறையில் கவனிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு முனைகின்றது. இந்நியதியின் விதிகள், பொறுப்பேற்கப்படும் கம்பனியின் பங்குதாரர்கள் இப்பொறுப்பேற்பு தொடர்பான அறிவுபூர்வமான தீர்மானத்தை மேற்கொள்ளும் பொருட்டு போதியளவு தகவல்களும் அறிவுரைகளும் போதியளவு கால அவகாசத்துடன் பரப்பப்படுதலை உறுதி செய்வதை நோக்காகக் கொண்டுள்ளது. ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியினை ஓர் கட்டாயக்கொடை, மனமுவந்த கொடை அல்லது பகுதியளவு கொடையின் மூலமாக கையேற்கும் செயற்பாட்டில் நபர்கள் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியதிகளின் ஏற்பாடுகளைக் கடைப்பிடிப்பதை நாம் உறுதிசெய்கிறோம்.

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. இலங்கையின் கம்பனிகள் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியமங்களுக்கு அமைய 5 கட்டாயக் கொடைகளையும் 2 மனமுவந்த கொடைகளையும் நிர்வகித்தது. இவற்றின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (உருவம் 16)

உருவம் 16: பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியமங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடைமுனைவுகள்

| பொறுப்பேற்பவர் | பொறுப்பேற்கப்படுபவர் | கொடையின் வகை |
|---|---|---|
| லங்கா கொமோடிட்டீஸ் புரோக்கர்ஸ் லிமிட்டட். | ஏசியா சியக்க கொமோடிட்டீஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடை |
| றோயல் செரமிக்ஸ் லங்கா பி.எல்.சி. | லங்கா செரமிக்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடை |
| ஹேமாஸ் மெனுவெக்சரிங் (பிரைவேட்) லிமிட்டட் | ஜே. எல். மொரிசன் சன்ஸ் அன்ட் ஜோன்ஸ் (சிலோன்) பி.எல்.சி. | கட்டாயக் கொடை |
| கூட்டுக் கொடை / LOLC மைக்ரோ இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பிரெக் லங்கா இன்வெஸ்ட்மென்ட் (பிரைவேட்) லிமிட்டெட் (கூட்டு பொறுப்பேவர்கள்) | நந்தா இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடை |
| அடம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட் | ஓரியன்ட் கார்மன்ட்ஸ் பி.எல.சி. | கட்டாயக் கொடை |
| ஏஜஏ கம்பனி லிமிட்டெட் ஹொங்கொங் | ஏஜஏ இன்சூரன்ஸ் லங்கா பி.எல். சி. முன்னர் அவீவா என்டிபி இன்சூரன்ஸ் பி.எல்.சி என்று தெரிந்துகொள்ளப்பட்டது | மனமுவந்த கொடை |
| ஹேமாஸ் மெனுவெக்சரிங் (பிரைவேட்) லிமிட்டட் | ஜே. எல். மொரிசன் சன்ஸ் அன்ட் ஜோன்ஸ் (சிலோன்) பி.எல்.சி. | மனமுவந்த கொடை |

### இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 28 ஏ பிரிவின் கீழான அங்கீகாரங்கள்

கொ.ப.ப. இல் பட்டியலிட விரும்பும் அனைத்துப் பொதுக் கம்பனிகளும் ஓர் பரிமாற்றகத்தில் பட்டியலிடுவதற்கு ஒரு வருட காலத்திற்கு முன்னர் யாரேனும் நபருக்கு பங்குகளை ஒதுக்கியிருப்பின் அதற்கான எழுத்துமூல முன்னனுமதியை ஆணைக்குழுவிடமிருந்து பெற்றாலன்றி அப்பங்குகளை பட்டியலிடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. இவ்வருடத்தில் பின்வரும் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

## இவ்வருடத்தில் வழங்கப்பட்ட இரண்டு அங்கீகாரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- அணிலானா ஹோட்டல்ஸ் அன்ட் புரொபட்டீஸ் லிமிட்டெட்
- அமானா பேங் லிமிட்டெட்

## இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 29 ஏ பிரிவின் கீழான அங்கீகாரங்கள்

இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 29 ஏ பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்படும் பட்டியலிடப்படா பிணையங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் இ.பி.ப.ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. ஓர் திறனான செயல்முறைக்கு வசதியளிக்கும்பொருட்டு இ.பி.ப.ஆ. இன் செயலகத்திற்கு பிரிவு 29 ஏ இன் விண்ணப்பங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்காக அதிகாரத்தினைப் பகிர்ந்தளிப்பதற்கான நியமத்தினை உருவாக்கியது. (உருவம் 17)

உருவம் 17: பட்டியலிடப்படா பிணையங்களை வழங்குவதற்கான வழங்கப்பட்ட அங்கீகாரங்கள்

| வழங்குனரின் பெயர் | வழங்களின் தன்மை | பிணையத்தின் வகை | அங்கீகரிக்கப்பட்ட தொகை | காலம் |
|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | தனிப்பட்ட ஏற்பாடு | சர்வதேச முறி | USD 500 மில்லி. | 5 வருடங்கள் |
| டீ எவ் சீ சீ வங்கி | தனிப்பட்ட ஏற்பாடு | சர்வதேச முறி | USD 250 மில்லி. | 10 வருடங்கள் |
| என் டீ பி வங்கி பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | சர்வதேச முறி | USD 250 மில்லி. | 10 வருடங்கள் |
| சென்ரல் வைனான்ஸ் கம்பனி பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா, சிரேஷ்ட, பிணைசாரா மற்றும் மீட்கத்தக்கத் தொகுதிக்கடன்கள் | ரூபா 500 மில்லியன், மிகை விண்ணப்பிக்கபடுமிடத்து மேலதிகமாக ரூபா 750 மில்லியன் | 4 வருடங்கள் |
| என் டீ பி கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா, மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகள் | ரூபா 300 மில்லியன் | ஆகக்கூடியது 8 வருடங்கள் வரைக்கும் (ஆகக்கூடியது 18 மாதங்கள் தயவுக் காலம்) விரைவுபடுத்தினாலன்றி |

## தளத்திற்கப்பாலான பங்குக் கொடுக்கல் வாங்கல்களுக்கான அங்கீகாரம்

இ.பி.ப.ஆ. சட்டத்தின் 28 ஆம் இலக்க (1) ஆம் பிரிவுக்கமைய உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிமாற்றகமொன்றில் பட்டியலிடப்பட்ட ஒரு பொதுக் கம்பனியில் பிணையங்களை வைத்திருக்கும் எந்த ஒரு நபரும் ஆணைக்குழுவின் முன் அங்கீகாரமின்றி அந்த உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிமாற்றகத்தினால் கடைப்பிடிக்கப்படும் வியாபார நடைமுறைகளுக்கு அமைவுற்றாலன்றி அத்தகைய பிணையங்களை வாங்கவோ, விற்கவோ, அன்பளிப்பு செய்யவோ அல்லது வேறொரு முறையில் வியாபாரம் செய்யவோ முடியாது.

மீளாய்வாண்டில் 455 அசாதாரணமான மாற்றல்களுக்கும் 158 பங்குத் தானங்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. எல்லைக் கடன் வர்த்தகம், நிதி முகாமைத்துவம், பட்டியலிலிருந்து நீக்கல் மற்றும் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டுத்தேக்கங்களை மறுசீரமைத்தல் ஆகியவற்றில், உரித்துவ நலன் மாறாதவாறு, அசாதாரணமான மாற்றல்கள் இடம்பெற்றன.

## மேற்பார்வை மற்றும் அமைவுறல்

திறன்பட இயங்கும் ஓர் மூலதனச் சந்தைக்கு நம்பகத்தன்மையும் ஸ்திரத்தன்மையும் அடிப்படைகளாவதுடன் இ.பி.ப.ஆ. சந்தையில் இடர்நேர்கைகளை பயனுள்ள விதத்தில் கண்காணித்து குறைப்பதற்கு தொடர்ச்சியாக அயராது பாடுபடுகின்றது. நாம் முறைமைப்படுத்தும் சந்தைப் பங்குபற்றுனர்கள் திறந்த மற்றும் திரவத்தன்மை எல்லைகள் போன்ற விவேகமுள்ள நியமங்களைப் கடைப்பிடிக்குமாறு வேண்டுகின்றோம்.

# செயல்முறை மீளாய்வு

## பட்டியலிடப்பட்ட கம்பனிகளது மேற்பார்வை

பட்டியலிடப்பட்ட கம்பனிகள் யாவும் நிதியாண்டு நிறைவுற்று ஐந்து மாதங்களுக்குள் ஆண்டறிக்கைகளை தமது பங்குதாரர்களுக்கும் கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்திற்கும் (கொ.ப.ப.) சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றன.

இ.பி.ப.ஆ. பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் ஆண்டறிக்கைகளை மீளாய்வு செய்து அமைவுறா விடயங்கள் தொடர்பில் கம்பனிகளுக்கு அறிவிக்கின்றது. இந்த முயற்சியில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பதிலளிப்பானது அதீத சாத்தியப்பாடுடையதாகக் காணப்பட்டது.

இச் செயற்பாட்டின் நோக்கமானது பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் பரப்பப்படும் தகவல்கள் மற்றும் நிதி அறிக்கையிடுதலின் தரம் ஆகியவற்றினை மேம்படுத்துவதாகும். பிணையங்கள் சந்தையில் தெளிவையும் பொறுப்புடைமையையும் நிலை நிறுத்தும்பொருட்டும் தொழில்நெறித் தரம் பேணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காகவும் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் முக்கிய தகவல்களை உடனடியாக பரப்புமாறு வேண்டப்படுகின்றன.

ஆண்டறிக்கைகளை மீளாய்வு செய்யும்போது இ.பி.ப.ஆ. பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்தியது :

- கொ.ப.பரிமாற்றகத்தின் பட்டியலிடல் விதிகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி.) மற்றும் கம்பனிகள் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளுக்கு அமைவுறுதல்
- நிதியியல் எடுத்துக்காட்டுகள்
- தலைவரின் அறிக்கை
- கம்பனி ஆளுகை நடைமுறைகள்
- பணிப்பாளர்களது அறிக்கை
- கணக்காய்வாளர்களது அறிக்கை
- பங்குதாரர் மற்றும் முதலீட்டாளர் தகவல்கள்
- நிதித் தரவுகள்

இவ்வாண்டில் நாம் 70 பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் ஆண்டறிக்கைகளில் மீளாய்வினை ஆரம்பித்து 65ஐ நிறைவு செய்து 38 கருத்து தெரிவிப்புக் கடிதங்களை வழங்கினோம்.

## சந்தைப் பங்குபற்றுனர்களுக்கான மேற்பார்வை

### பங்கு தரகுத் துறை

மூலதனச் சந்தையில் முதலீட்டாளர் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்காகவும் முதலீட்டாளர் பாதுகாப்பினை அடைவதற்காகவும் அவசியமான சந்தை மேற்பார்வையை பலப்படுத்துவதற்கு உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களை அமைவிடத்திலும் மற்றும் அமைவிடத்துக்கப்பாலும் மேற்பார்வை செய்யும் முறையினூடாக இ.பி.ப.ஆ. நிதியியல் ஸ்திரத்தன்மையினையும் மற்றும் செயற்பாட்டு சாத்தியப்பாட்டினையும் உறுதிசெய்வதற்கு முனைகின்றது.

பங்குத்தரகுக் கம்பனிகளில் அமைவிடத்திலான பரிசீலனைகள் இடர்நேர்கை அடிப்படையான அணுகுமுறையைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டன. இது பலதரப்பட்ட இடர்நேர்கை வகைகளான விவேகம், திரவத்தன்மை, நிதியியல், கடன், சட்டம் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்கை என்பவற்றில் கவனஞ் செலுத்தியதுடன் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவுறுவதில் முக்கியத்துவம் செலுத்தப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் பங்குத்தரகுக் கம்பனிகளில் உள்ளகக் கட்டுப்பாட்டு செயல்முறைகளை நிரூபித்துக்கொள்வதற்கான வழிமுறைகளை ஒன்றிணைப்பதன் மூலம் அமைவிடத்திலான பரிசீலனைகளில் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டன. 2013 இல் இ.பி.ப.ஆ. அமைவிடத்திலான பரிசீலனைகளை அனைத்து உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகுக் கம்பனிகளிலும் மேற்கொள்ளக்கூடியதாயிருந்தது.

மாதாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் இணக்கப்பாட்டு அறிக்கைகள் கிடைக்கப்பெற்றதும் அமைவிடத்துக்கப்பாலான மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. அமைவிடத்துக்கப்பாலான மீளாய்வுகள் அனேகமாக பிரயோகிக்கவேண்டிய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவுறாமை மற்றும் முறிவடைதல் போன்ற இடர்நேர்கையை ஏற்படுத்தக்கூடிய கம்பனிகள் மற்றும் நடவடிக்கைகளை கண்டுபிடிப்பதனை நோக்காகக் கொண்டது. அமைவிடத்துக்கப்பாலான மீளாய்வுகளில் ஏதேனும் முரண்பாடுகள் மற்றும் அமைவுறாமை அவதானிக்கப்படின் அவை சீர்படுத்துவதற்காக கம்பனிக்கு அறிவிக்கப்படும். மேலும் இரண்டு வாரங்களுக்கொருமுறையான அடிப்படையில் பங்குத்தரகுக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படும் “கடன்பட்டோர் பிரகடனங்களை” மீளாய்வு செய்வதன் மூலம் மிகவும் கடன் இடர்நேர்கையானது உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பங்குத்தரகுத் துறையின் மொத்தப் புரள்வானது 2013 இல் வீழ்ச்சியடைந்தது. எனவே, தேறிய நட்டமானது 2013 ஆம் ஆண்டில் மேலும் அதிகரித்தது. பங்குத் தரகுத் துறையின் செயற்பாட்டின் ஒப்பீட்டளவு புள்ளிவிபரங்கள் உருவம் 18 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

உருவம் 18: பங்குத் தரகுத் துறையின் நிதியியல் புலப்படுத்தல்கள்

| | 2013 (ரூபா‘000) | 2012 (ரூபா‘000) | மாற்றம் % |
|---|---|---|---|
| புரள்வு | 1,745,186 | 1,921,489 | -9.2% |
| தேறிய தரகுக்கூலி | 1,541,338 | 1,756,498 | -12.2% |
| செயற்பாட்டு இலாபம் மற்றும் நட்டம் | (619,374) | (436,094) | 42.0% |
| ஏனைய வருமானங்கள் | 810,282 | 786,300 | 3.0% |
| வரிக்கு முந்திய தேறிய நட்டம் | (711,484) | (557,819) | 27.5% |

| | 2013 (ரூபா'000) | 2012 (ரூபா'000) | மாற்றம் % |
|---|---|---|---|
| வரிக்கு பிந்திய தேறிய நட்டம் | (711,091) | (299,234) | 137.6% |
| மொத்தச் சொத்துக்கள்* | 10,265,557 | 10,781,900 | -4.8% |
| மொத்தப் பொறுப்புக்கள் * | 4,462,858 | 4,308,204 | 3.6% |
| தேறிய மூலதனம்* | 4,742,514 | 4,926,718 | -3.7% |

மூலம்: இ.பி.ப.ஆ. க்குச் சமா்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்படாத நிதிக்கூற்றுக்கள்

*2013/2012 டிசம்பா் 31 இல் உள்ளவை

## நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித்துறை

நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறையினை நிலைநிறுத்துவதற்கும் வளா்ப்பதற்குமாக சமீபத்தைய வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட சலுகைகள் மற்றும் தூண்டுதல்களின் பின்னணியில் இத்துறையானது துரிதமான வளா்ச்சியை நோக்கிச் செல்வதற்கு ஆயத்தமாயுள்ளது.

2013 ஆம் ஆண்டில் இ.பி.ப.ஆ. இத்துறையின் சாத்தியப்படத்தக்க வளா்ச்சியுடன் தொடா்ந்து செல்வதற்காக இத்துறையில் முறைமைப்படுத்தல் பிடியினை இறுக்குவதற்கான பல முன்னெடுப்புகளை அமுல்படுத்தியது. சாதாரண முதலீட்டாளா்களுக்கு கிடைக்கத்தக்க ஓா் சிற்றளவு கருவியாக நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சியினை மீள் நிலைநிறுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சியும் எந்நேரமும் வைத்திருக்கவேண்டிய ஆகக்குறைந்த அலகுடைமையாளா்களின் எண்ணிக்கையை குறிப்பிடும் ஓா் புதிய பணிப்புரையை இ.பி.ப.ஆ. வழங்கியது. மேலும் இலங்கை நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிச் சங்கத்தினால் மேள்கொள்ளப்பட்ட பல வேண்டுகோள்களுக்கமைய, நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் நிலையான வருமானப் பிணையங்களில், மதிப்பீட்டின் துல்லியத்தன்மையினையும் ஒரே சீரான தன்மையினையும் மேம்படுத்துவதற்காக, தினசரி மதிப்பீட்டு வழிமுறையில் ஓா் பணிப்புரை வழங்கப்பட்டது.

நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளில் முறைமைப்படுத்தல் மேற்பாா்வையானது நாம் அனைத்து பதின்மூன்று நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளிலும் அமைவிடத்திலான இடா்நோ்கை அடிப்படையிலான பரிசீலனைகளை மேற்கொண்டதுடன் இணைக்கப்பட்டது. இம்மேற்பாா்வையானது பல்வகையான இடா்நோ்கைகளை உள்ளடக்கியிருந்தது. அவையாவன, விவேகம், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் செயல்முறைகள், ஆளுகை, தகவல் முறைகள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் தேவைப்பாடுகள் என்பனவாகும். நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளினால் சமா்ப்பிக்கப்படும் கணக்காய்வு செய்யப்படாத மாதாந்த நிதிக்கூற்றுக்களை, இம்முகாமைத்துவக் கம்பனிகள் நிதியியல் ரீதியாக ஸ்திரமான நிலையிருப்பதனையும் இ.பி.ப.ஆ. இனால் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தேறிய மூலதனத் தேவைப்பாட்டினை பேணுவதனையும் உறுதிசெய்யும்பொருட்டு, நாம் பரிசீலனை செய்தோம். இதற்கும் மேலாக நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளின் திறந்தநிலை மட்டங்கள் நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சிக் கோவை, அவற்றின் நம்பிக்கைப் பொறுப்புறுதிகள் மற்றும் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பணிப்புரைகள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டங்களுக்குள் இருப்பதனை உறுதிசெய்யும்பொருட்டு நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி நிதியங்களின் மாதாந்த அறிக்கைகள் ஆராய்ந்து பாா்க்கப்பட்டன.

## சந்தை இடையீட்டாளா்கள்

எல்லைக்கடன் வழங்குநா்கள், முதலீட்டு முகாமையாளா்கள், கடன் தரப்படுத்தல் முகவா்கள், ஒப்புரவாளா்கள் மற்றும் தீா்வக இல்லங்கள் ஆகிய ஐந்து வகையான சந்தை இடையீட்டாளா்களுக்கு மூலதனச் சந்தையில் பங்குபற்றுநா்களாக அவா்களது தொழிற்பாட்டினை மேற்கொள்வதற்காக பதவீடுகளை வழங்குவதற்கு இ.பி.ப.ஆ. க்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டின் எமது தொழிற்பாட்டின் பிரதான உந்துகையாக சந்தை இடையீட்டாளா்களில் சந்தை மேற்பாா்வையினை மிகைப்படுத்துவதனை உள்ளடக்கியிருந்தது. பலவிதமான விதிகளை உருவாக்கியும் மற்றும் ஏனைய முன்னெடுப்புக@ டாகவும் இ.பி.ப.ஆ. முதலீட்டாளா்களது நலன்களைப் பாதுகாக்கும் அதேசமயம் சந்தையின் வளா்ச்சியையும் போட்டித்தன்மையினையும் ஊக்குவிப்பதற்காக அதன் முறைமைப்படுத்தல்களை தெளிவாக்கியது.

2013 ஆம் ஆண்டில், இ.பி.ப.ஆ. அதன் தொழிற்பாட்டில் முக்கியமாக முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களின் மேற்பாா்வை செய்யப்படும் பகுதிகளில் இடா்நோ்கை மதிப்பிடல் நடவடிக்கைகளை ஒன்றிணைத்தது. இதற்கும் மேலாக முறைசாா் அக்கறையுடைய விடயங்களை அதிகரிக்கத்தக்க சாத்தியப்படக்கூடிய பிரச்சனைகளை இனங்காண்பதற்கு இ.பி.ப.ஆ. அதன் முயற்சிகளை மும்முரமாக்கியது. எனவே, முதலீட்டாளா்களுக்கும் சந்தையின் நன்மதிப்பிற்கும் அதீத இணக்கப்பாட்டு இடா்நோ்கைகளைத் தோற்றுவிக்கக்கூடிய நிறுவனங்கள் மற்றும் நடவடிக்கைகளை இனங்கண்டு கவனஞ்செலுத்துவதற்காக இ.பி.ப.ஆ. இணக்கப்பாட்டு மற்றும் இடா்நோ்கை மதிப்பீட்டு வினாப்பட்டியல் போன்ற இடா்நோ்கை முனைப்புள்ள நுட்பங்களை அமுல்படுத்துவதனை தொடா்ந்தது. மூலதனச் சந்தையின் மீளெழுச்சியினை பலப்படுத்தும் முற்றுமுழுதான வியூகத்தில் முறைசாா் இடா்நோ்கைகளை முகாமைப்படுத்துவது முக்கியமான பகுதியாகும்.

# செயல்முறை மீளாய்வு

மேலும், பதிவீடளிக்கப்பட்ட நிறுவனங்கள் விவேகமுடைய இடர்நேர்கை முகாமைத்துவ வடிவமைப்பினை பேணுவதற்கான அவசியத்தினை வலியுறுத்தி அவர்களது திரவத்தன்மையின் திறந்தநிலை மற்றும் முற்றுமுழுதான நிதியியல் நிலைமை என்பவற்றை இனங்காண்பதற்காக சந்தை இடையீட்டாளர்களில் இ.பி.ப.ஆ. அமைவிடத்துக்கப்பாலான மேற்பார்வைகளை மும்முரமாக்கியது.

இத்துறையினை பலப்படுத்துவதற்கான மற்றுமோர் படிக்கல்லாக இ.பி.ப.ஆ. 2013 இல் சந்தை இடையீட்டாளர்களுக்கு பிரயோகிக்கப்படும் விதிகளை மீள்பார்வையிடுவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கு நிதானமாக சிந்தித்தது. இலங்கை மத்திய வங்கியினால் (இ.ம.வ.) "உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட விஷேட வங்கிகளுக்கு பங்குச் சந்தை திறந்தநிலை தொடர்பாக வழங்கப்பட்ட 2011 ஆம் ஆண்டின் வங்கியியல் சட்டப் பணிப்புரை இலக்கம் 5 மற்றும் 6 இனை" திருத்துமாறு இலங்கை மத்திய வங்கிக்கு வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டது. அதற்கமைய இ.ம.வ. இவ்வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட விஷேட வங்கிகள் இ.பி.ப.ஆ. சட்டத்தின் கீழ் பிரகடனம் பண்ணப்பட்டுள்ள எல்லைக் கடன் வழங்குனர் தரத்தின்கீழ் செயற்படும் எல்லைக்கடன் வழங்குனர்களுக்கு பிரயோகிக்கப்படும் விதிகளை கடைப்பிடிக்குமாறு வேண்டியது. (உருவம் 19)

உருவப்படம் 19 : சந்தை இடையீட்டாளர்களின் நிதியியல் புலப்படுத்தல்கள் (31.12.2013 இல் உள்ளவாறானது)

| வகை | மொத்த வருமானம் ரூபா | வரிக்கு முந்திய மொத்த தேறிய இலாபம் ரூபா | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா |
|---|---|---|---|---|
| எல்லைக் கடன் வழங்குநர் | 384,458,673 | 76,035,571 | 1,123,456,037 | 233,560,981 |
| முதலீட்டு முகாமையாளர் | 321,825,371 | (261,710,169) | 6,774,620,969 | 4,540,264,146 |
| ஒப்புரவாளர் | 1,588,877,000 | 1,463,141,938 | 15,029,785,000 | 79,999,000 |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | 136,390,529 | 46,673,543 | 305,233,219 | 78,644,516 |
| பல்நோக்கு நிறுவனங்கள்** | 1,192,374,673 | 401,614,460 | 8,110,404,395 | 2,732,279,236 |
| மொத்தம் | 3,623,926,246 | 1,725,755,342 | 31,343,499,620 | 7,664,747,879 |

*இலங்கை மத்திய வங்கியினால் முறைமைப்படுத்தப்படுகின்ற உரிமமளிக்கப்பட்ட வங்கிகள், பதிவீடு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் விசேடித்த குத்தகைக் கம்பனிகள் தொடர்பான தகவல்கள் என்பன ஓர் நியாயமான துறைசார் நிலைமையினை வழங்குவதற்காக நீக்கப்பட்டுள்ளன.

**பல்நோக்கு நிறுவனங்கள் என்பன ஒன்றுக்கும் மேற்பட்ட முறைமைப்படுத்தப்படும் நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக பதிவீடளிக்கப்பட்ட முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களாகும்.

## கண்காணிப்பு, புலனாய்வு மற்றும் வலியுறுத்தல்

### கண்காணிப்பு

கொ.ப.ப. இல் இடம்பெறும் வர்த்தக நடவடிக்கைகளை இ.பி.ப.ஆ. சட்டத்தினை மீறும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் அல்லது வர்த்தகங்களை கண்டுபிடிப்பதற்கும் அவற்றைத் தவிர்ப்பதற்காகவும் பயனுள்ள விதத்தில் கண்காணிப்பதற்கு இ.பி.ப.ஆ. பொறுப்பாளியாயுள்ளது. இதன் நடவடிக்கைகளது நோக்கமானது விலைக் கண்டுபிடிப்பு செய்முறையின் நன்னம்பிக்கையுடன் தலையீடு செய்யக்கூடிய நாளாந்த சந்தை நடவடிக்கைகளை கண்காணிப்பதனை உள்ளடக்கும். அதி நவீன கண்காணிப்பு முறைமையொன்றைப் பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கைகளில் மெய்நேர அடிப்படையில் இக்கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

2013 ஆம் ஆண்டில் இப்பிரிவானது பல்வேறு விடயங்களில் மொத்தமாக 14 கண்காணிப்பு ஆலோசனைக் கோரல்களை தயார்செய்தது. இதற்கும் மேலாக இ.பி.ப.ஆணைக்குழு கொ.ப.ப. இடமிருந்தும் 17 ஆலோசனைக் கோரல்களைப் பெற்றுக்கொண்டது. (உருவம் 20, 21)

உருவம் 20 கண்காணிப்பு ஆலோசனைக்கோரல்கள்

| சந்தேகத்திற்கிடமான விடயம் | எண் |
|---|---|
| உள்ளுறைபவர் வர்த்தகம் | 04 |
| முன்னோடுதல் | 03 |
| சந்தைக் கையாளுகை | 05 |
| ஏனையவை | 02 |
| மொத்தம் | 14 |

உருவம் 21 கண்காணிப்பு கண்டுபிடிப்புகளின் வகைப்படுத்தல்




முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும்பொது ஆலோசனைக் கோரல்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இது பிரதானமாக கண்காணிப்பு விடயங்களை முதன்மைப்படுத்தியதனாலாகும். மிகவும் முக்கியமான மற்றும் கணிசமான சந்தைத் தாக்கத்தினை ஏற்படுத்தும் விடயங்கள் மாத்திரமே ஆலோசனைக் கோரலுக்குச் செல்கின்றன. இவற்றுள் அநேகமானவை "கண்காணிப்பு விடயங்கள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டில் 400 க்கும் அதிகமான "கண்காணிப்பு விடயங்கள்" அவதானிக்கப்பட்டு கோப்பிலிடப்பட்டன. "கண்காணிப்பு விடயங்களின்" தன்மை காரணமாக அவற்றிற்கு முழு ஆலோசனைக் கோரல் அறிக்கைகள் தேவைப்படவில்லை ஆனால் மேலதிகக் கண்காணிப்பும் ஆய்வும் தேவைப்பட்டன. ஒருதடவை கண்காணிக்கப்பட்டதும் ஓர் போக்கு எழுந்துள்ளதா என்று அவதானிக்கவும் மற்றும் ஓர் முற்று முழுதான ஆலோசனைக் கோரல்கள் தேவையா என்பதற்காகவும் சம்பந்தப்பட்ட வர்த்தகர்களும் பங்குகளும் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுகிறார்கள். மேலதிகத் தரவுகள் மற்றும் பகுப்பாய்வுச் சாதனங்கள் இ.பி.ப.ஆ. இல் காணப்படுவதனால் அதிக எண்ணிக்கையிலான கண்காணிப்பு விடயங்கள் எழுப்பப்பட்டன. இதற்கும் மேலாக ஆலோசனைக் கோரல்களில் வீழ்ச்சியானது குறைவான மட்டத்திலான தாழ்நிலை வர்த்தகம் மற்றும் புரள்வின் காரணத்தினாலாகும். ஒப்பீட்டளவில் குறைவான மட்டத்திலான சிற்றளவு நடவடிக்கைகளும் குறைந்த மட்டத்திலான ஆலோசனைக் கோரல்களுக்கு மேலும் பங்களித்தது.

இக்குழுவானது இ.பி.ப.ஆ. இன் பொறுப்பதிகாரி / பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் தலைமை தாங்கப்படுவதுடன் ஆலோசனைக் கோரல் விடயங்களைக் கலந்துரையாடுவதற்காக இவ்வருடத்தில் 7 தடவைகள் கூடின. குழுவானது சிறிய தவறாளிகளை அழைப்பித்து பின்னர் அவர்கள் எதிர்காலத்தில் இத்தகைய வர்த்தக நடைமுறையில் ஈடுபடுவதினை தவிர்க்குமாறு எச்சரிக்கப்பட்டார்கள். குழுவின் அறிவுறுத்தலின் பேரில் சந்தேகத்திற்கிடமான சந்தைத் துர்ப்பிரயோகங்களில் சம்பந்தப்பட்ட 8 பகுதியினரிடமிருந்து எழுத்துமூல விளக்கங்கள் கோரப்பட்டன. இவர்களது மறுமொழிகள் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டது. மொத்த ஆலோசனைக் கோரல்களில் 2 விடயங்களில் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் புலனாய்வுக்கு அதிகாரமளிக்கப்பட்டது.

### புலனாய்வுகள்

மூலதனச் சந்தையின் முறைமைப்படுத்துபவர் என்ற ரீதியில் இ.பி.ப.ஆ. இன் பங்களிப்பில் முக்கியமான அங்கமாக புலனாய்வுகள் அமைகின்றன. சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தை சந்தர்ப்பங்களில் விரைவான மற்றும் பயனுறுதியான புலனாய்வுகளை நடாத்துவதானது, ஓர் ஒழுங்கான மற்றும் நியாயமான சந்தையைப் பேணுவதற்கு உதவுவதுடன் முதலீட்டாளர் நம்பகத்தன்மையை ஊக்குவித்து அதனூடாக இலங்கையின் மூலதனச் சந்தையின் அபிவிருத்திக்குப் பங்களிக்கின்றது. இ.பி.ப.ஆ. சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ள பொறுப்பாணைக்கு அமைய இ.பி.ப.ஆ. 2013 ஆம் ஆண்டில் சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தை விடயங்களில் புலனாய்வுகள் மேற்கொள்வதினை தொடர்ந்ததுடன் அது தொடர்பாக

# செயல்முறை மீளாய்வு

பொருத்தமான வலியுறுத்தல் நடவடிக்கையினை சிபாரிசு செய்தது. இதன் காரணமாக சந்தையில் உயர்ந்த தரத்திலான தொழில்சார் நடாத்தை மற்றும் கம்பனிசார் ஒழுக்கத்தை வளர்ப்பதற்கும் சந்தை இடையீட்டாளர்கள், பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மற்றும் முதலீட்டாளர்களது எதிர்கால அத்துமீறல்களையும் தடுக்கக்கூடியதாயுள்ளது.

2013 ஆம் ஆண்டில் இ.பி.ப.ஆ. னால் சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தைகள், சந்தை /விலைக் கையாளுகை உள்ளடங்களாக, உள்ளுறைபவர் வர்த்தகம், முன்னோடுதல் போன்றவற்றில் மொத்தமாக 15 புலனாய்வுகள் நடாத்தப்பட்டன. குறிப்பிட்ட சில புலனாய்வுகள் 2013 இற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கும் மேலாக 2012 ஆம் ஆண்டில் ஆரம்பித்து அதே ஆண்டில் முடிவுற்ற ஓர் புலனாய்வு தொடர்பாக மதிப்பிற்குரிய சட்டமா அதிபரிடமிருந்து ஓர் அபிப்பிராயம் பெறப்பட்டதுடன் இது மீளாய்வாண்டில் நிலுவையாயுள்ளது.

மீளாய்வாண்டானது இ.பி.ப.ஆ. சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் என்பவற்றின் கீழ் மேற்கொண்ட தவறுகள் / ஒழுங்கீனங்கள் தொடர்பாக இ.பி.ப.ஆ. இனால் பல வலியுறுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டது. இது தொடர்பில் முக்கியமாகக் கருதப்பட்டது என்னவெனில் ஒன்பது ஆலோசனைக் கோரல்களை அடிப்படையாகக் கொண்டு சந்தேகத்திற்கிடமான சந்தை / விலை கையாளுகையில் நடாத்தப்பட்ட புலனாய்வுகளைத் தொடர்ந்து நான்கு முதலீட்டு ஆலோசகர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இந்த எச்சரிக்கைகள் இ.பி.ப.ஆ. இன் இணையத்தளத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டன. சந்தேகத்திற்கிடமான உள்ளுறைபவர் வர்த்தகத்தில் இ.பி.ப.ஆ. ஆல் நடாத்தப்பட்ட இன்னுமோர் புலனாய்வினைத் தொடர்ந்து ஓர் முதலீட்டாளர் எச்சரிக்கப்பட்டதுடன் ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனிக்கும் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டது. சந்தேகத்திற்கிடமான முன்னோடுதல் புலனாய்வொன்றின் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டு இன்னுமோர் முதலீட்டு ஆலோசகருக்கும் முன்னெச்சரிக்கையாயிருக்குமாறு அறிவிக்கப்பட்டது.

2013 டிசம்பர் இறுதியில் குறிப்பிட்ட புலனாய்வுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை - தற்போதைய நிலவரம் ஆகியவற்றின் விளக்கங்கள் மற்றும் ஓர் சுருக்கமான விபரம் கீழ்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. (உருவம் 22)

உருவம் 22: புலனாய்வுகளின் விபரங்கள்

| புலனாய்வுகளின் தன்மை | புலனாய்வுகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை/தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| உள்ளுறைபவர் வர்த்தகம்[1] | 4 | • 2012 ஆம் ஆண்டின் இறுதியில் சந்தேகத்திற்கிடமான உள்ளுறைபவர் வர்த்தகத்தில் மூன்று புலனாய்வுகள் நிலுவையிலிருந்தன.<br>◦ மீளாய்வாண்டில் இத்தகைய உள்ளுறைபவர் வர்த்தகப் புலனாய்வொன்றின் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக்கொண்டு ஓர் தனிநபருக்கு எச்சரிக்கைக் கடிதமொன்று வழங்கப்பட்டதுடன் பட்டியலிடப்பட்ட கம்பனிக்கு முன்னெச்சரிக்கைப் பத்திரமொன்றும் வழங்கப்பட்டது.<br>◦ இத்தகைய ஓர் புலனாய்வு தொடர்பான அறிக்கையொன்று நவம்பர் 2013 இல் இடம்பெற்ற ஆணைக்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br>◦ மற்றைய புலனாய்விலான அறிக்கையானது 2013 டிசம்பர் இறுதியில் முடிவுறுத்தப்பட்ட வண்ணமுள்ளது.<br>• 2013 ஆம் ஆண்டில் சந்தேகத்திற்கிடமான ஓர் உள்ளுறைபவர் வர்த்தகப் புலனாய்வானது ஆரம்பிக்கப்பட்டது. இக்குறிப்பிட்ட புலனாய்வானது செயற்பாட்டிலுள்ளது. |

உருவம் 22 (தொடர்ச்சி)

| புலனாய்வுகளின் தன்மை | புலனாய்வுகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை/தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| சந்தை / விலை கையாளுகை[2] | 6 | • 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஒரே கூட்டணியைச் சேர்ந்த முதலீட்டு ஆலோசகர்களால் மேற்கொள்ளப்பட்ட சந்தேகத்திற்கிடமான சந்தை / விலை கையாளுகை நடவடிக்கை தொடர்பாக கிடைக்கப்பெற்ற ஒன்பது கண்காணிப்பு ஆலோசனைக் கோரல்கள் சம்பந்தமாக ஒரு பரவலான புலனாய்வு நடாத்தப்பட்டது. இக்குறிப்பிட்ட புலனாய்வு தொடர்பான அறிக்கையானது 2013 ஆம் வருடத்தில் முடிவுறுத்தப்பட்டது. இக்குறிப்பிட்ட புலனாய்வின் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஓர் கூட்டணியைச் சேர்ந்த 4 முதலீட்டு ஆலோசகர்கள் எச்சரிக்கப்பட்டு அவ் எச்சரிக்கையானது பகிரங்கப்படுத்தப்பட்டது.<br>• 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட சந்தேகத்திற்கிடமான சந்தை / விலைக் கையாளுகையில் வேறு நான்கு புலனாய்வுகள் 2013 ஆம் ஆண்டில் எவ்வித அமுலாக்கல் செயற்பாடுமின்றி முடிவுறுத்தப்பட்டது. இதில் தொடர்புபட்ட முதலீட்டாளர்கள் மற்றும் / அல்லது முதலீட்டு ஆலோசகர்களுக்கு எதிராக ஏதேனும் கையாளுகை நடத்தையினை சட்டரீதியாக நிலைநிறுத்துவதற்கான ஆவணங்கள் / சாட்சிகள் இல்லாமையினாலாகும்.<br>• 2013 ஆம் ஆண்டில் சந்தேகத்திற்கிடமான மற்றுமோர் சந்தை / விலைக் கையாளுகைப் புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டதுடன் இக்குறிப்பிட்ட புலனாய்வானது 2013 ஆண்டின் இறுதியில் செயற்பாட்டிலுள்ளது. |
| முன்னோடுதல்[3] | 02 | • 2012 ஆம் ஆண்டின் இறுதியில் சந்தேகத்திற்கிடமான முன்னோடுதலில் ஓர் புலனாய்வு நிலுவையிலிருந்தது. 2013 ஆம் ஆண்டில் ஓர் தனிநபர் இக்குறிப்பிட்ட முன்னோடுதல் புலனாய்வின் கண்டுபிடிப்புகளது அடிப்படையில் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டார்.<br>• 2013 ஆம் ஆண்டில் மற்றுமோர் சந்தேகத்திற்கிடமான முன்னோடுதல் புலனாய்வானது ஆரம்பிக்கப்பட்டு இக்குறிப்பிட்ட புலனாய்வானது செயற்பாட்டிலுள்ளது. |
| ஒரு பங்குத்தரகுக் கம்பனியினால் நிறைவேற்றப்பட்ட வர்த்தகங்கள் தொடர்பான சந்தேகத்திற்கிடமான முறைகேடான நடவடிக்கைகள் தொடர்பான புலனாய்வு | 01 | • இது தொடர்பான புலனாய்வானது 2012 இல் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், செயலகத்தினால் சிபாரிசு செய்யப்பட்டவாறும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் அறிவுறுத்தப்பட்டவாறும் இவ்விடயம் தொடர்பாக மதிப்பிற்குரிய சட்டமா அதிபரிடமிருந்து ஓர் முறைப்படியான அபிப்பிராயத்திற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டது.<br>• 2013 டிசம்பரில் இம்முறைப்படியான அபிப்பிராயமானது இன்னும் நிலுவையிலுள்ளது. |
| முறைப்பாடுகள் | 02 | • 2013 ஆம் ஆண்டில் ஒரு பங்குத்தரகுக் கம்பனிக்கெதிராக முதலீட்டாளர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இரண்டு புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டு இக்குறிப்பிட்ட புலனாய்வுகள் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்பாட்டிலுள்ளன. |
| ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியின் வணிக விவகாரங்கள் தொடர்பான புலனாய்வு | 01 | • 2013 இல் ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனியின் வணிக விவகாரங்கள் தொடர்பான ஓர் புலனாய்வானது ஆரம்பிக்கப்பட்டு இக்குறிப்பிட்ட புலனாய்வானது டிசம்பர் 2013 இறுதியில் முடிவுறுத்தப்பட்டுக்கொண்டுள்ளது. |

# செயல்முறை மீளாய்வு

1 ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியின் பங்குகளில், அக்குறிப்பிட்ட கம்பனியின் பிணையங்கள் தொடர்பாக பிரசுரிக்கப்படாத விலை உணர்திறன் தகவல்களை வைத்திருக்கும் சமயம் வர்த்தகம் மேற்கொள்ளல்.

2 ஓர் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட ஏதேனும் பிணையங்களது விலை அல்லது வர்த்தகம் தொடர்பாக ஓர் பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் தோற்றப்பாட்டினை உருவாக்குதல்.

3 ஒரு வாடிக்கையாளருக்கு குறித்த கம்பனியின் பிணையங்களில் கணிசமான அளவு கொள்வனவு அல்லது விற்பனைக்கு முன்னர் ஒரு கம்பனியின் பிணையங்களில் வர்த்தகத்தினை மேற்கொண்டு அதன் பின்னர் இலாபமடையும் நோக்கத்துடன் அக்குறிப்பிட்ட பிணையங்களில் வர்த்தகம் செய்தல்.

## முறைப்பாடுகள்

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. பொதுப் பட்டியலிடல் கம்பனிகள் தொடர்பாக 20 முறைப்பாடுகளைக் கையாண்டதுடன் 19 ஐ விடுவித்தது.

## வழக்காடல்கள்

மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனைய மூன்று பேர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு இலக்கம் 204/2012 மற்றும் இ.பி.ப.ஆ. எதிர் மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் மற்றும் ஏனைய ஒன்பது பேர்கள் நீதவான் மன்ற வழக்கு இலக்கம் S/74140/2012

2012 மார்ச் 05 இல் இ.பி.ப.ஆ. மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட்டிற்கு அது 2011 செப்டம்பர் 13 இல் லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி இன் 5%மான பங்குகளைக் கொள்வனவு செய்தது தொடர்பாக ஏனையவற்றுக்கிடையில் லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி (ல.மி.வு) இன் சிறுபான்மை பங்குதாரர்களுக்கு ஓர் கட்டாயக் கொடைமுனைவை செய்யுமாறு ஒரு பணிப்புரையை விடுத்தது. இ.பி.ப.ஆ. இப்பணிப்புரையினை கம்பனியானது கம்பனிகள் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் (பொ.ம.இ.) விதிக்கோவையின் விதி இலக்கம் 31 (1) (பி) இன் பிரகாரம் கம்பனியினால் பின்வருமாறு அறிவிக்கப்பட்டதையிட்டு கட்டாயக் கொடைமுனைவு கடப்பாட்டினைத் தூண்டியதாக அறிவித்தது. கம்பனியானது தாங்கள் 2011 செப்டம்பர் 13 இல் ல.மி.வு இன் பங்குகளைக் கொள்வனவு செய்தபோது அவர்களும் டிஸ்டிலரீஸ் கம்பனி ஒவ் ஸ்ரீலங்கா மற்றும் மில்போர்ட் எக்ஸ்போர்ட்ஸ் (சிலோன்) லிமிட்டட் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து ல.மி.வு. இன் வாக்குரிமையுள்ள பங்குகளில் 50%க்கும் குறைவான பங்குகளை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக அறிவித்தது.

கம்பனியானது முதலில் தாங்கள் பொ.ம.இ. விதிக்கோவையின் விதி இலக்கம் 31 (1) (பி) இனைத் தூண்டியதாக ஒத்துக்கொண்டாலும் அது ல.மி.வு. இன் சிறுபான்மை பங்குதாரார்களுக்கு கட்டாயக் கொடைமுனைவை மேற்கொள்வதற்கு தவறியது. பொ.ம.இ. விதிக்கோவையின் விதியின் மீறலை திருத்திக்கொள்ளுமாறு இ.பி.ப.ஆ. ஆல் பல சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட்டும் கம்பனியானது அவ்வாறு செயற்படுவதற்கு தவறியது. இதற்கமைய இ.பி.ப.ஆ. பொ.ம.இ. விதிக்கோவையின் விதி இலக்கம் 31 (1) (பி) இனை மீறியமைக்காக கம்பனி மற்றும் அதன் பணிப்பாளர்கள் சபைக்கெதிராக நீதவான் மன்றத்தில் வழக்கு இலக்கம் S/74140/2012 ஊடாக சட்ட நடவடிக்கையினை ஆரம்பித்தது.

மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் அதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் CA(Writ) 204/2012 ஐக் கொண்ட ஓர் ஆணை விண்ணப்பத்தினை கம்பனியானது லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி இன் முகாமைத்துவக் கட்டுப்பாட்டினை ஏற்கனவே கொண்டுள்ளதன் காரணமாக கம்பனி பொ.ம.இ. விதிக்கோவையின் விதி இலக்கம் 31 (1) (பி) இன் கீழ் பொறுப்பாளியல்ல என்ற அடிப்படையில் 2012 மார்ச் 05 திகதியிட்டு இ.பி.ப.ஆ. ஆல் வழங்கப்பட்ட பணிப்புரையினை அழிக்குமாறு வேண்டி தாக்கல் செய்தது. இப்பணிப்புரையானது ஏனையவற்றுக்கிடையில் மெல்ட்ஸ ாகோர்ப் லிமிட்டட்டினை லங்கா மில்க் வுட்ஸ் (சி.டபிள்யு.இ.) பிஎல்சி இன் சிறுபான்மை பங்குதாரர்களுக்கு ஓர் கட்டாயக் கொடைமுனைவினை மேற்கொள்ளுமாறு வேண்டியது. இ.பி.ப.ஆ., ல.மி.வு., டிஸ்டிலரீஸ் கம்பனி ஒவ் ஸ்ரீலங்கா பிஎல்சி மற்றும் மில்வோர்ட் எக்ஸ்போர்ட்ஸ் (சிலோன்) லிமிட்டட் என்பன முறையே 1ஆவது, 2ஆவது. 3ஆவது மற்றும் 4ஆவது பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டன.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள மேற்குறிப்பிடப்பட்ட வழக்கு மற்றும் கொழும்பு கோட்டை நீதவான் மன்றத்தில் மெல்ட்ஸ ாகோர்ப் லிமிட்டட் மற்றும் அதன் பணிப்பாளர் சபைக்கெதிராக இ.பி.ப.ஆ. ஆல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இலக்கம் S/74140/2012 என்பவற்றிற்கு ஓர் தீர்ப்பனவினைக் கோரி மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட்டிடமிருந்து இ.பி.ப.ஆ. 2013 ஜுலை 13 இல் ஓர் விண்ணப்பத்தினை பெற்றது. மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் மேன்முறையீட்டு நீதிமன்ற ஆணை விண்ணப்பம் 204/2012 இல் ல.மி.வு. தாக்கல் செய்த ஆட்சேபனைக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு இவ்விடயத்தில் ஓர் தீர்ப்பனவினை வேண்டியது. இவ் ஆட்சேபனைக் கூற்றானது மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் 2011 செப்டம்பர் 13 இல் பங்குகளைக் கொள்வனவு செய்தபோது மில்ஸ் என்டர்பிரைஸஸ் லிமிட்டட் 3ஆம் மற்றும் 4ஆம் பிரதிவாதிகளான டிஸ்லரீஸ் கம்பனி ஒவ் ஸ்ரீலங்கா மற்றும் மில்வோர்ட் எக்ஸ்போர்ட்ஸ் (சிலோன்) லிமிட்டட் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து செயற்படும் ஓர் மேலதிகப் பகுதியினர் என்று குறிப்பிட்டது. இந்த உண்மையானது மெலட்ஸாகோர்ப்பினால் ஆரம்பத்தில் இ.பி.ப.ஆ. க்கோ அல்லது நீதிமன்றத்திற்கோ முன்னர் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இ.பி.ப.ஆ. பின்வருவனவற்றில் ஆழ்ந்து யோசனை செய்தது. குறிப்பிட்ட விண்ணப்பம், ல.மி.வு. இனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆதரிக்கும் ஆவணங்கள் மற்றும் மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட்டினால் தாக்கல் செய்யப்பட்ட 2013 ஜுன் 13 திகதியிடப்பட்ட சத்தியக்கடதாசி என்பனவாகும். இச்சத்தியக் கடதாசியானது மில்ஸ் என்டர்பிரைஸஸ் லிமிட்டட் மெல்ட்ஸாகோர்ப் உடனான கூட்டணியின் அங்கத்தவர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்ட ஓர் மேலதிகத் தரப்பாக ல.மி.வு இனால்

எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையுடன் ஒன்றுபட்டதாகும். இவ்வாறு 2011 செப்டம்பர் 13 இல் ஒன்றிணைந்து செயற்பட்டமையானது ல.மி.வு. இல் ஒன்றிணைந்து செயற்பட்ட அனைத்து தரப்பினரதும் மொத்த உரித்துவமானது 50%க்கும் அதிகமாகக் காணப்பட்டதால் விதிக்கோவையின் நியதிகளுக்கமைய கட்டாயக் கொடைமுனைவினை மேற்கொள்ளவேண்டிய தேவைப்பாடானது இத்தால் நீக்கப்படுகின்றது.

இ.பி.ப.ஆ. இன் 2012 மார்ச் 05 திகதியிட்ட பணிப்புரை வழங்கப்படுவதற்கு முன்னர் அல்லது மேற்குறிப்பிட்ட வழக்குகள் தாக்கல் செய்வதற்கு முன்னர் மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் ஆரம்பத்தில் மில்ஸ் என்டர்பிரைஸஸ் லிமிட்டெட்டுடன் ஒன்றிணைந்து செயற்படும் தரப்பாக தொடர்புபட்டிருக்கவில்லை என்று அறிந்துகொண்டபோதும் மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட்டினால் குறிப்பிட்ட விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கத்தினை ஏற்றுக்கொள்வதற்கு தீர்மானித்தது.

இத்தீர்மானமானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மற்றும் நீதவான் மன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகளின் தலைப்பு விடயமான 2011 செப்டம்பர் 13 இல் மேற்கொள்ளப்பட்ட பங்குக் கொள்வனவில் மில்ஸ் என்டர்பிரைஸஸ் லிமிட்டட் கூட்டணியின் அங்கத்தவர்களுடன் ஒன்றிணைந்த செயற்பட்டதாகக் கருதி மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட்டிற்கு நன்மையினை வழங்குவதற்கு தீர்மானித்தது.

இதற்கமைய இ.பி.ப.ஆ. பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையின் கீழ் ஓர் கட்டாயக் கொடைமுனைவினை மேற்கொள்ளுமாறு மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட்டிற்கு 2012 மார்ச் 05 இல் வழங்கப்பட்ட இக்குறிப்பிட்ட பணிப்புரையினை வாபஸ்பெற்றது. மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் இ.பி.ப.ஆ. க்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு ஆணை விண்ணப்பத்தினை வாபஸ்பெற்றது. இ.பி.ப.ஆ. தீர்ப்பனவு நியதிகளுக்கமைய மெல்ட்ஸ ாகோர்ப் லிமிட்டட் மற்றும் அதன் பணிப்பாளர் சபைக்கெதிராக கொழும்பு கோட்டை நீதவான மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை, இக்குறிப்பிட்ட தீர்ப்பனவு நியதிகள் நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டதன் பின்னர், வாபஸ்பெற்றது.

## மெக்பெக் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் எதிர் இ.பி.ப.ஆ. வழக்கு இலக்கம் HCMCA 217/2007

இ.பி.ப.ஆ. விதிகளுக்கு முரணாக சில முக்கியமான தகவல்களை உடனடியாக வெளிப்படுத்தாமைக்காக குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட நான்கு குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள் அறிவுபடைத்த நீதிவான் அவர்களது தீர்ப்புக்கும் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கும் எதிராக மாகாண மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்கள். மாகாண மேல்நீதிமன்றத்தின் அறிவுபடைத்த நீதிபதி அவர்கள் இவ்விடயத்தில் ஓர் இணக்கமாக மூன்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தொடர்பாக நீதிவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பினை உறுதிப்படுத்தி இரண்டு குற்றச்சாட்டெண்களுக்கும் தலா ரூபா 3.3 மில்லியனை குற்றப்பணமாக விதித்தார். அறிவுபடைத்த நீதிவான் அவர்களால் சுமத்தப்பட்ட சிறைவாசத் தண்டனையானது ஒதுக்கிவைக்கப்பட்டது. குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனைத் தீர்ப்பு இரண்டிற்கும் எதிரான 6ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரது மேன்முறையீடானது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது.

## இ.பி.ப.ஆ. எதிர் திரு. பி.ஏ.ஜயசேகர மற்றும் ஏனையோர் வழக்கு இலக்கம் S/64721/2006

இ.பி.ப.ஆ. ஆல் நவலோக ஹொஸ்பிட்டல் பி.எல்.சி. பங்குகள் தொடர்பான சந்தைக் கையாளுகைக்காக கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஒன்பது நபர்களுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. சட்டமா அதிபரின் அனுமதியுடன் ஏழு குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு இ.பி.ப.ஆ. ஒத்திணங்கியதுடன் ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிரான குற்றச்சாட்டுகள் வாபஸ் பெறப்பட்டது. 09ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர்பாக வழக்கின் விளக்கமானது நிலுவையிலுள்ளது.

## இ.பி.ப.ஆ. எதிர் மிரமார் பீச் ஹோட்டல்ஸ் மற்றும் ஏனையோர் நீ.நீ. வழக்கு இலக்கங்கள் S/72082/2010 S/72083/2010

31 மார்ச் 2008 மற்றும் 31 மார்ச் 2009 இல் நிறைவடைந்த நிதியாண்டுகளுக்கான இ.பி.ப.ஆணைக்குழுவின் விதி இலக்கம் 3(1) மற்றும் 17க்கு முரணாக கம்பனியின் ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறியமைக்காக மிரமார் பீச் ஹோட்டல்ஸ் மற்றும் கம்பனியின் பணிப்பாளர்களுக்கெதிராக 2010 நவம்பர் 04 இல் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இவ்விதியை மீறியதன் காரணமாக பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் ஓர் குற்றத்தை இழைத்ததாகவும் இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (2) இன் கீழ் இது தண்டனைக்குரியதாகும். கம்பனியானது குறிப்பிட்ட வருடங்களுக்கான ஆண்டறிக்கைகளை வெளியிடுவதற்கு அனுமதி கோரியபோதும் இதுவரை அவ்வாறு செய்யவில்லை. இவ்விடயமானது கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தின் முன் நிலுவையிலுள்ளது.

## டச்வுட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி இன் ஒடுக்கல் விண்ணப்ப வழக்கு இலக்கம் CHC/31/2013/CO இல் இ.பி.ப.ஆ. இனால் தாக்கல் செய்யப்பட்ட பிரேரணை

டச்வுட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சிக்கு கடன் அளித்தவராகக் கோரும் நபர் ஒருவர் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் அவருக்கு கம்பனியானது அவரது வைப்புகளுக்குப் பதிலாக பணம் செலுத்தவேண்டுமென்று ஓர் விண்ணப்பத்தினை மேற்கொண்டார்.

# செயல்முறை மீளாய்வு

கம்பனியின் முன்னால் தலைவருக்கும் அவரது மனைவியான கம்பனியின் பணிப்பாளருக்கும் எதிராக பல முறைப்பாடுகளை இ.பி.ப.ஆ. பெற்றுக்கொண்டுள்ளது. இதன்பின்னர் இ.பி.ப.ஆ. கம்பனியின் வணிக விடயங்களில் ஓர் புலனாய்வினை ஆரம்பித்ததுடன் கம்பனியின் நடமுறையற்ற சொத்துக்களை பாராதீனப்படுத்துவதற்கு எதிராக கம்பனியினைப் பணித்தது. அத்துடன் ஒடுக்கல் விண்ணப்பம் நிலுவையிலுள்ள நீதிமன்றத்தில் கம்பனி தொடர்பாக இ.பி.ப.ஆ. எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக நீதிமன்றத்திற்கு அறிவிப்பதற்காக ஓர் பிரேரணையைத் தாக்கல் செய்தது.

கம்பனியினுள்ளான இ.பி.ப.ஆ. இன் புலனாய்வானது நிலுவையிலுள்ளது.

### பி.பி. சன்ஜீவ மிஹிர குமார மற்றும் பி.பி. சுஜித் சமீர குமார எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோர் (CA (W) 265/2013)

இரண்டு முதலீட்டாளர்கள் அவர்களது தரகர் மற்றும் அவர்களது எல்லைக் கடன் வழங்குனர் இவர்களது நலன்களுக்கு எவ்விதமான அக்கறையுமின்றி ஆரம்பத்தில் ரூபா 20 மில்லியனாக மதிப்பிடப்பட்ட அவர்களது பங்கு முதலீட்டுத் தேக்கத்தினை பூச்சிய நிலுவையாக குறைத்தமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஓர் ஆணை விண்ணப்பத்தினைத் தாக்கல் செய்தார்கள்.

மனுதாரர்கள் பங்குத்தரகர் மற்றும் எல்லைக் கடன் வழங்குனருக்கும் மேலாக இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இனைப் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிட்டது. பங்குத்தரகர் மற்றும் எல்லைக் கடன் வழங்குனருக்கெதிராக இ.பி.ப.ஆ. ஓர் புலனாய்வினை நடாத்தவேண்டுமென்று ஓர் ஆணையீட்டெழுத்தாணையையும் பங்குத்தரகர் மற்றும் எல்லைக்கடன் வழங்குனர்களது முறையே உரிமம் மற்றும் பதிவீட்டினை இ.பி.ப.ஆ. புதுப்பிப்பதனை தடைசெய்யும் தடைப்பேராணை ஒன்றையும் வேண்டினார்கள்.

மனுதாரர்களினால் நீதிமன்றத்திற்கான அறிவித்தலுடன் மேற்கொள்ளப்பட்ட சார்த்துரைகளில் இ.பி.ப.ஆ. ஏற்கனவே புலனாய்வுகளை ஆரம்பித்துள்ளதுடன் இவ்விடயமானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது.

### சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் பொதுச் சேவைகள் ஊழியர் சம்மேளனம் மற்றும் ஏனையோர் எதிர் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை மற்றும் ஏனையோர்

நாணயச் சபையின் அங்கத்தவர்களுக்கெதிராக உயர்நீதி மன்றத்தின் முன்னால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை விண்ணப்பத்தில் இ.பி.ப.ஆ. 08ஆம் பிரதிவாதியாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் கொ.ப.ப. இல் ஊழியர் சேமலாப நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில வர்த்தகங்கள் மூலதனச் சந்தைச் சட்டத்தினை மீறியுள்ளதாக சாட்டியுரைத்துள்ளார்கள்.

உயர் நீதிமன்றமானது இவ்விண்ணப்பத்தினைத் தள்ளுபடி செய்ததுடன் பின்வரும் அவதானிப்பினை மேற்கொண்டது. ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதியினைப் பயன்படுத்தி கொ.ப.ப. இல் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் பின்னணியிலுள்ள கொள்கைகளை நாணயச் சபையானது பொது மக்களுக்கு வெளிப்படுத்துதல் மதியுடையது என்று குறிப்பிட்டது.

### வலியுறுத்தல் செயற்பாடுகள்

ஆணைக்குழுவின் வழிகாட்டலில் பின்வரும் வலியுறுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### முன்னெச்சரிக்கைகள்

- 2012 ஆம் ஆண்டிற்கான தேவையான எண்ணிக்கையிலான தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் சமூகமளிக்கத் தவறியமைக்காக ஒன்பது முதலீட்டு ஆலோசகர்களுக்கு மீளாய்வாண்டில் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டது.

- இ.பி.ப.ஆ. சட்டத்தின் விதி இலக்கம் 15 இன் கீழ் கம்பனியில் சுமத்தப்பட்டுள்ள சட்டரீதியான கடப்பாடுகளுக்கு கடுமையாக அமைவுறுவதனை உறுதிப்படுத்துமாறு ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனிக்கு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டது. இந்த முன்னெச்சரிக்கையானது கம்பனியினைப் பொறுப்பேற்கும் சாத்தியப்படக்கூடிய வதந்திகளை நேரகாலத்துடன் தெளிவுபடுத்துவதற்கு கம்பனி தவறியமை தொடர்பாக வழங்கப்பட்டது.

- பெயர்குறித்து நியமிக்கப்பட்டுவர்கள் / குடும்ப அங்கத்தவர்கள் சார்பில் வர்த்தகங்களை நிறைவேற்றுவதற்கு முன்னர் தேவையான அதிகாரத்தினை பெறுவதற்கு தவறியமைக்காக ஒரு முதலீட்டு ஆலோசகர் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டார்.

- சில வாடிக்கையாளர் கணக்குகள் தொடர்பாக அஜாக்கிரதையான விதத்தில் செயற்பட்டமைக்காக இரண்டு முதலீட்டு ஆலோசகர்கள் கடுமையாக முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டார்கள்.

- ஒரு பொதுப் பட்டியலிடப்பட்ட கம்பனியின் பணிப்பாளர் ஒருவர் சந்தைக்கு சாத்தியப்படக்கூடிய விலை உணர்திறன் தகவல்களை வெளியிடுவதற்கு முன்னர் அவரது கம்பனியின் பங்குகளில் வர்த்தகம் செய்வதற்கு எதிராக கடுமையாக அறிவுரைக்கப்பட்டார். இந்த விடயத்தில் குறிப்பிட்ட பணிப்பாளர் கம்பனியின் சில தகவல்கள் சந்தைக்கு வெளியிடப்படுவதற்கு முன்னர் பங்குகளைக் கொள்வனவு செய்திருந்தார். இந்த நிறைவேற்று அதிகாரமுடைய பணிப்பாளரினால் இக்குறிப்பிட்ட பங்குகளது கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டும் சந்தையில் இத்தகவல் தாக்கத்தை ஏற்படுத்தாதன் காரணமாகவும் இப்பணிப்பாளரை பொறுப்பிலிருந்து விடுவித்தது.

### கடுமையான கண்டனங்கள்

- நான்கு முதலீட்டு ஆலோசகர்களுக்கு அவர்களது வாடிக்கையாளர்கள் சார்பாக வர்த்தகம் மேற்கொள்ளும்போது ஒழுங்கீனமான நடைமுறைகளைக் கடைப்பிடித்தமைக்காக கடுமையான கண்டனங்கள் வழங்கப்பட்டன.

### எச்சரிக்கைகள்

- ஓர் பட்டியலிடப்படா கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி (பி.நி.அ.) ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியின் பங்குகளில், இப்பட்டியலிடப்பட்ட கம்பனிக்கும் பட்டியலிடப்படா கம்பனிக்கும் இடையே சில கலந்துரையாடல்கள் நடைபெறும் சமயம், வர்த்தகம் மேற்கொண்டமை தொடர்பாக எச்சரிக்கை விடுக்கப்பட்டார். இக்கலந்துரையாடல்கள் விலை உணர்திறனுடையதாகக் கருதப்படாததனால் பி.நி.அ. ஓர் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டார்.

## மூலதனச் சந்தை அபிவிருத்தி

மூலதனச் சந்தையானது வளங்களை ஒன்றுதிரட்டி அவற்றை பயனுள்ள வழிகளில் திசைதிருப்புவதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவித்து வசதியளிக்கின்றது. இ.பி.ப.ஆ. அதன் இரட்டைப் பங்களிப்பான மூலதனச் சந்தையினை முறைமைப்படுத்துதல் மற்றும் அபிவிருத்திசெய்தல் என்பவற்றை சமநிலைப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது. இ.பி.ப.ஆ.இன் சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகள் பின்வருவனவற்றில் கவனஞ் செலுத்தியது. முதலீட்டுக் கருவிகள் மற்றும் சேவைகளின் பரப்பினை விஸ்தரித்தல், மேலும் கம்பனிகளை பட்டியலிடுவதற்கு கவருதல், மூலதனச் சந்தை உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல், முறிகள் சந்தை மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித்துறை என்பவற்றை விருத்தி செய்தல் என்பவையாகும். மூலதனச் சந்தையில் விளைவினை ஏற்படுத்தக் கூடிய கொள்கைகளில் அரசாங்கத்திற்கு அறிவுரையளிப்பதற்கும் இ.பி.ப.ஆ. கடப்பாடுடையதாயுள்ளது.

### புதிய நிதிகளை கவர்தல் (உள்ளூர் மற்றும் வெளியூர்)

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையளிக்கும் சமயம் மிகவும் துடிப்பான மற்றும் திரவத்தன்மையான பங்குச் சந்தையினை உருவாக்குவதற்கு சந்தைக்கு புதிய நிதிகளைக் கவர்வது மிகவும் முக்கியமானதாகும். எனவே நாட்டில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புகளைக் காட்சிப்படுத்துவதற்காக கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்துடன் ஒன்றிணைந்து பின்வரும் தெருக்காட்சிகள் நடாத்தப்பட்டன.

- மும்பாய் தெருக்காட்சி

  வோர் சீசன்ஸ் ஹோட்டலில் 2013 பெப்ரவரி 21 இல் தெருக்காட்சி இடம்பெற்றதுடன் இதில் இந்தியாவைத் தளமாகக் கொண்ட நிறுவன நிதியங்கள் மற்றும் இந்தியாவுக்கு வெளியேயுள்ள கரைகடந்த நிதியங்கள் என்பவற்றை முகாமைப்படுத்தும் கம்பனிகளிலிருந்து 128 பிரதிநிதிகள் சமூகமளித்தார்கள்.

- மும்பாய் தெருக்காட்சி / தொடர் விஜயம்

  இத்தெருக்காட்சியின் பின்னர், ஓர் தொடர் விஜயம் ஒழுங்குசெய்யப்பட்டு 11 சமூகமளித்தவர்கள் இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டார்கள். மூலதனச் சந்தையில் முதலீடுகள் தொடர்பான விடயங்களைத் தெளிவு படுத்துவதற்காகவும் கலந்தாலோசிப்பதற்காகவும் சமூகமளித்தவர்கள் இ.பி.ப.ஆ., கொ.ப.ப., இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுடன் சந்திப்பினை மேற்கொண்டார்கள்.

- துபாயில் முதலீட்டாளர் மன்றங்கள்

  - இலங்கையைவிட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கான முதலீட்டாளர் மன்றங்கள்-

    இந்நிகழ்வானது லே மெரீடியன் ஹோட்டல், துபாயில் 2013 ஜுன் 01 இல் இடம்பெற்றது. அண்ணளவாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் தொழில்புரியும் 78 இலங்கைத் தொழில்வல்லுனர்கள் இந்நிகழ்வில் சமூகமளித்திருந்தார்கள்.

- துபாயில் தளம் அமைத்துள்ள நிதி முகாமையாளர்களுக்கான

  முதலீட்டாளர் மன்றங்கள் - இந்நிகழ்வானது ரிட்ஸ் கால்டன், துபாயில் 2013 ஜுன் 03 இல் இடம்பெற்றது. பிரதானமாக நிறுவன நிதி முகாமையாளர்கள் மற்றும் உயர் பெறுமதி வாய்ந்த முதலீட்டாளர்கள் உள்ளடங்களாக அண்ணளவாக 68 பங்குபற்றுனர்களை இம்மன்றம் கவர்ந்தது.

- ஹொங்கொங் தெருக்காட்சி

  முதலீட்டாளர் மன்றமானது 2013 செப்டம்பர் 09 இல் சங்கிரிலா ஹோட்டல் ஹொங்கொங்கில் இடம்பெற்றது. நிறுவன நிதி முகாமையாளர்கள் மற்றும் உயர் பெறுமதி வாய்ந்த முதலீட்டாளர்கள் உள்ளடங்களாக அண்ணளவாக 75 பங்குபற்றுனர்களை இம்மன்றம் கவர்ந்தது.

  வெளிநாட்டு முதலீட்டாளர்களது பங்குபற்றுதலை மேம்படுத்துவதற்காக இலங்கையின் மூலதனச் சந்தையினுள் உட்புகுவதற்கான செயல்முறை மற்றும் ஏனைய பொருத்தமான தகவல்களுடன் ஓர் தகவல் அடக்க விவரத்தினை கொ.ப.ப. உடன் கூட்டாக முடிவுறுத்தப்பட்டது.

### கம்பனிகள் முறிகள் சந்தையினை அபிவிருத்திசெய்தல்

ஓர் வலுவுள்ள கம்பனிகள் முறிகள் சந்தையினை விருத்திசெய்வதற்காக கொள்கை பத்திரிகை ஒன்று உருவாக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டது. இப்பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியமான கொள்கை வழிமுறைகள் பின்வருவன:

# செயல்முறை மீளாய்வு

- முதன்மை வர்த்தகர்கள் மற்றும் ஏனைய சந்தை இடையீட்டாளர்கள் கம்பனி முறிகள் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு அங்கீகாரம்.
- கம்பனிகள் முறிகளில் வர்த்தகம் மேற்கொள்வதற்கான இ.பி.ப.ஆ. தகைமை வடிவமைப்பு உள்ளடங்களாக தகுதிப் பிரமாணம்.
- வர்த்தகம் மற்றும் அறிக்கையிடல் உட்கட்டமைப்பிற்கான மேம்பாடுகள்
- தீர்வக மற்றும் தீர்ப்பனவு முறை (மத்திய எதிர் தரப்பினர் வடிவமைப்பு)
- சிறந்த தகவல் பரப்புவதற்காக கம்பனிகள் முறிகள் தரவுத்தளம்
- கம்பனிகள் முறிகள் சந்தையில் சிற்றளவு பங்குபற்றலுக்கு வசதியளிப்பதற்காக ஆகக் குறைந்த விண்ணப்ப எல்லையாக ரூபா 10,000 இனை விதித்தல்
- ஓர் நியமன தரகுக் கட்டணத்தை அறிமுகப்படுத்துதல்
- முகப்பெறுமதியில் ஓர் எல்லையினை அமுல்படுத்துதல்
- வழங்கல் செயல்முறையினை மாற்றியமைப்பதற்காக பட்டியல் தேவைப்பாடுகளை எளிமையாக்குதல்
- பட்டியலிடல் விதிகளுக்கான திருத்தங்கள்
- முறிகளில் பொது வழங்கலை ஊக்குவித்தல்
- வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவருதல்
- விழிப்புணர்வைக் கட்டியெழுப்புதல்
- கம்பனிகள் முறிகளில் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளுக்கு வசதியளித்தல்

வழங்கல் முன்விவரணக்கோவையில் ஒன்றிணைப்பதற்காக அனைத்து கடன் தரப்படுத்தல் முகவர்களுக்கும் ஓர் பொதுவான வெளிப்படுத்தல் அட்டவணையை விருத்திசெய்வதற்காக கலந்தரையாடலை மேற்கொள்வதற்காக கடன் தரப்படுத்தல் முகவர்களுடன் ஆலோசனைக் கூட்டங்கள் இடம்பெற்றன.

## நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித்துறையின் அபிவிருத்தி

- இலங்கை மத்திய வங்கிக்கு மேற்கொள்ளப்பட்ட எடுத்துக்கூறல்களினூடாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட விஷேட வங்கிகள் ஆகியவற்றின் திரவச்சொத்துக்களாக அரசாங்கப் பிணைய நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளில் முதலீடுகளைக் கருதுவதற்கு வசதியளித்ததுடன் இதைப் பற்றி ஊடக அறிக்கையொன்றும் பிரசுரிக்கப்பட்டது.

- முழுச் சந்தைக்குமான சந்தைப்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வினைக் கட்டியெழுப்பும் பிரசாரம்

  ஆரம்பத்தில் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறைக்கான ஓர் ஊக்குவிப்பு பிரசாரமொன்று முடிவுறுத்தப்பட்டு பின்னர் இவ் ஊக்குவிப்பு பிரசாரத்தின் நோக்கத்தினை, கொ.ப.ப. உடன் கூட்டிணைந்து முழுவதுமான சந்தையினை உள்ளடக்குவதற்காக, பரவலாக்குவதற்கான தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டது.

  இப் பிரசாரத்தை நடாத்துவதற்காக இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடன் ஒன்றுசேர்ந்து பிரேரிப்புக்கான வேண்டுதலை முடிவுறுத்தியது. கொ.ப.ப. எட்டு விளம்பரப்படுத்தல் முகவர்களிடமிருந்து பிரேரிப்புகளைக் கோரியிருந்ததுடன் இப்பிரேரிப்புகளை மதிப்பிடுவதற்கு 2013 டிசம்பரில் ஓர் குழு நியமிக்கப்பட்டது.

## மத்திய எதிர்தரப்பினரை அமுல்படுத்துதல் (மஎத)

- இ.ம.வ., இ.பி.ப.ஆ., கொ.ப.ப. மற்றும் லங்கா கிளியர் ஆகியவற்றின் அனைத்து நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்குமான ஓர் ஒன்றிணைத்த ம.எ.த. கூட்டாக நிறுவுவதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்வதற்கு ஓர் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆலோசனைச் சேவைகளைக் கோருவதற்கான அக்கறை வெளிப்பாடானது முடிவுறுத்தப்பட்டு அனைத்து பங்காளிகளதும் அங்கீகாரம் பெறப்பட்டது.

- இதன் பின்னர் இ.ம.வ. இனால் இந்த அக்கறை வெளிப்பாடானது பிரசுரிக்கப்பட்டதுடன் அமுல்படுத்துவதற்கான காலஅவகாசம் மற்றும் சிக்கலான நிலை என்பவற்றை கருத்திற்கொண்டு அனைத்து பங்காளிகளுக்குமான ஒன்றிணைந்த ம.எ.த. ஆ அல்லது தனித்தனி ம.எ.த. ஆ என்ற தீர்மானம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## புதிய பட்டியலிடல்களைக கவருதல் (பொது மற்றும் தனியார் துறை)

இலங்கையின் மூலதனச் சந்தையூடாக விரிவுபடுத்துவதற்கு அவசியமான மூலதனத்தைத் திரட்டிக்கொள்ளக்கூடிய சாத்தியப்பாட்டில் விழிப்புணர்வினை உருவாக்கும் நோக்கத்தோடு வட பிராந்தியத்திலுள்ள வர்த்தக முயற்சிகளுக்கு யாழ்ப்பாணத்தில் ஓர் பட்டியலிடல் ஊக்குவிப்பு மன்றம் இடம்பெற்றது. மத்திய பிராந்தியத்தை உள்ளடக்கும் முகமாக மற்றுமோர் மன்றமானது கண்டியில் இடம்பெற்றது. புதிய பட்டியலிடல்களைக் கவருவதற்காக வழங்குனர் உறவுகள் மன்றமொன்றும் கொழும்பில் இடம்பெற்றது.

கொ.ப.ப. இல் பட்டியலிடுவதன் அனுகூலங்களைப் பற்றி முகாமைத்துவத்தினிடையே விழிப்புணர்வினை உருவாக்குவதற்காக இ.பி.ப.ஆணைக்குழு கொ.ப.ப. இன் உதவியுடன் 79 வணிக நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை மென்பொருள் மற்றும் சேவைகள் கம்பனிகளது சங்கத்துடன் (இ.மெ.சே.க.ச.) அறிவுச் செயல்முறை வெளிமூலம், வணிகச் செயல்முறை வெளிமூலம் மற்றும் தகவல் தொழில்நுட்பக் கம்பனிகள் ஆகியவற்றுடன் கொ.ப.ப. ஊடாக மூலதனத்தைத் திரட்டுவதற்கான வாய்ப்புகளைப் பகிர்ந்துகொள்வதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

பொதுப் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு காட்சிப்படுத்துகை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை வழங்குவதற்காக ஓர் சுயாதீன உரித்துவப் பகுப்பாய்வுத் திட்டத்திற்கு இ.பி.ப.ஆ. வசதியளித்தது. 2014 ஜனவரியில் எஸ் அன்ட் பி ஸ்ரீலங்கா 20 சுட்டியினுள் உள்ளடக்கப்பட்ட பத்து பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் சுயாதீன பகுப்பாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவை கொ.ப.ப. இன் இணையத்தளத்தில் பொது மக்களுக்கு இலவசமாகக் கிடைக்கக்கூடியதாயிருக்கின்றது. "பங்குப் பரிமாற்றகத்தில் பட்டியலிடுவதற்கான ஓர் வழிகாட்டி" என்ற தலைப்பிலான ஓர் புத்தகத்தை உருவாக்குவதற்கு இ.பி.ப.ஆணைக்குழு கொ.ப.ப. க்கு துணைபுரிந்ததுடன் இப்புத்தகத்தின் சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகள் சமீபத்தில் பூர்த்தியாக்கப்பட்டன. இத்தகவல் சாதனத்தின் அங்குரார்ப்பணமானது ஆகஸ்ட் 2013 இல் இடம்பெற்றது.

## புதிய முதலீட்டுக்கருவிகளை விருத்திசெய்தல்

- முழுவளர்ச்சியடைந்த பல ஆதன வகுப்பு பண்டங்கள் மற்றும் மூலாதாரப் பிணையங்களது பரிமாற்றகத்தினை இலங்கையில் நிருவுதல்

  இதுவரைக்கும் இ.பி.ப.ஆ. பின்வருவன உள்ளடங்களாக இத்திட்டத்திற்கு வசதியளித்துள்ளது. பரிமாற்றகம் ஒன்றினை நிருவி செயற்படுத்துவதற்கு அக்கறை வெளிப்படுத்துகையினைக் கோருதல், உள்ளகத்தே பிரேரணைக்கான வேண்டுகோளை விருத்தி செய்தல் மற்றும் நிதியமைச்சினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் (தொ.ம.கு.) மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகளுக்கமைய இரண்டு பரிமாற்றக விலைகேட்போரை குறுக நிரைப்படுத்தியமை என்பனவாகும்.

  இத்திட்டத்தினை மேலும் தொடர்வதற்கு மற்றும் குறுக நிரைப்படுத்திய தரப்பினரை மதிப்பிடுவதற்கும் மந்திரிசபையினால் நியமிக்கப்பட்ட ஆலோசகர்கள் பெறுகைக் குழுவிற்கு தொ.ம.கு. ஓர் சிபாரிசினை மேற்கொள்வதற்கு வழிகாட்டுவதற்காக இவ்விடயத்தில் ஓர் வல்லுனரிடமிருந்து தொழில்நுட்ப உதவியினைப் பெறுதல் முக்கியமானதாகும்.

  இது தொடர்பில் இத்திட்டத்திற்கு மற்றும் ஏனைய பரவலான மூலதனச் சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்கு தொழில்நுட்ப உதவியினை வழங்குவதற்கு ஆர்வமாயுள்ள நிதியளித்தல் முகவர்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. எனவே, நிதி திட்டமிடல் அமைச்சின் வெளிவாரி வளங்கள் திணைக்களத்தினூடாக உதவிகள் பெறப்படும்.

- அறிமுகப்படுத்தவிருக்கும் சாத்தியப்படக்கூடிய முதலீட்டுக் கருவிகள்

  - இலங்கையில் காணப்படும் மூலதனச் சந்தைக் கருவிகள் தற்போது பட்டியலிடப்பட்ட கடன் மற்றும் உரித்துடைமைக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சந்தை அசைவுகளுக்கு எதிராக முதலீட்டாளர்கள் தம்மைப் பாதுகாப்பதற்கான வாய்ப்புகள் அற்றும் மற்றும் எவ்வித மாற்றீட்டு முதலீட்டு கருவிகள் அற்றும் காணப்படுகின்றது.
  - இ.பி.ப.ஆ. சாத்தியப்படக்கூடிய 3 முதலீட்டுக் கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கு கவனஞ்செலுத்தியது. அவையாவன, டொலர் முறிகள் நிதியங்கள், ஆதன முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்புகள் (ஆ.மு.ந.பொ.) மற்றும் பரிமாற்றக வர்த்தக நிதியங்கள் (ப.வ.நி.) என்பனவாகும். இவற்றுள் மிகவும் நிகழக்கூடிய கருவியாக காணப்படும் டொலர் முறிகள் நிதியங்கள் நிதியமைச்சின் அங்கீகாரத்திற்கு தற்போது காத்திருக்கின்றது.
  - ஆ.மு.ந.பொ. ஆனது சந்தைப் பங்குபற்றுனர்களிடமிருந்து மிகவும் ஆர்வத்தினை ஏற்படுத்தியுள்ள ஓர் முதலீட்டுப் பிரிவாகும். இக்கருவியின் நான்கு பிரேரிப்பவர்கள் தற்போது இ.பி.ப.ஆ. உடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்கள்.
  - அதேசமயம், ப.வ.நி. க்கான வடிவமைப்பானது தற்போது ஆராயப்பட்டு மலேஷியா மற்றும் சிங்கப்பூர் ஆகியவற்றின் கற்கைகள் அவதானிக்கப்பட்டவண்ணமுள்ளன.

## மூலதனச் சந்தை கல்வி, பயிற்சி மற்றும் ஆய்வு

உரிமமளித்தல் பரீட்சைகள், பல்வேறு கேட்போர்களுக்கான நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பிணையங்கள் துறையிலுள்ள தொழில்வல்லுனர்களுக்கு தொடர்ச்சியான கற்கை வாய்ப்புகள் என்பவற்றை விநியோகிப்பதன் மூலம் இ.பி.ப.ஆ. திறன்மிக்க மற்றும் அறிவுபடைத்த சந்தை வல்லுனர்கள் தேக்கமொன்றை வளர்ப்பதில் ஓர் முக்கியமாயமான பங்கினை வகிக்கின்றது.

## மூலதனச் சந்தைகளில் சான்றிதழ் (மூ.ச.சா.)

இவ்வாண்டில் நாம் பங்குத்தரகுக் கம்பனிகளின் பயிற்சி முதலீட்டு ஆலோசகர்களுக்கு ஓர் ஆகக்குறைந்த மட்டத்திலான தேர்ச்சியை அளிப்பதற்காக தகமைக் கட்டமைப்பினை தொடர்ச்சியாக அமுல்படுத்தியதுடன் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களது அபிவிருத்தியூடாக தொழில்நடத்துபவர்கள் மேல்நிலை தகமைகளுக்கு முன்னேறுவதற்கும் துணைபுரிந்தோம். 2013 இல் கொழும்புப் பங்குச் சந்தை காட்டிய உறுதியான வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு, மாணவர்களில் அநேகமானோர் மூலதனச் சந்தைகளில் ஓர் தொழிலைத் தொடரும் எதிர்பார்ப்புடன், மூ.ச.சா. நிகழ்ச்சித்திட்டங்களில் பதிவுசெய்வதற்கு முன்வந்தார்கள். மீளாய்வுக் காலப்பகுதியில் 100 மாணவர்களுக்கும் மேலாக மூ.ச.சா. நிகழ்ச்சிதிட்டத்தினை நிறைவு செய்ததுடன் அதேயளவு எண்ணிக்கையான பயிற்சி முதலீட்டு ஆலோசகர்கள் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தரகுக் கம்பனிகளில் முதலீட்டு ஆலோசனைச் சேவைகளில் ஈடுபடுவதற்கான பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ப.மு.ஆ.) தகமையைப் பெற்றுக்கொண்டார்கள். (உருவம் 23, 24)

# செயல்முறை மீளாய்வு

அட்டவணை 23: மூ.ச.சா. பரீட்சைகளின் புள்ளிவிபரச் சுருக்கம் - (2013 ஆம் ஆண்டில்)

| கற்பித்தல் மொழி மூலம் | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் மொத்தம் | உரித்துடமைத் தொடரை நிறைவு செய்தவர்கள் | கடன் தொடரை நிறைவு செய்தவர்கள் | நிதியியல் ஒழுங்குவிதிகள் மற்றும் ஒழுக்கநெறித் தொடரை நிறைவுசெய்தவர்கள் | மூ.ச.சா. நிறைவு செய்தவர்கள் | ப.மு.ஆ. நிறைவு செய்தவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| சிங்கள மொழிமூலம் | 37 | 15 | 42 | 26 | 34 | 61 |
| ஆங்கில மொழிமூலம் | 72 | 40 | 59 | 41 | 77 | 50 |
| மொத்தம் | 109 | 55 | 101 | 67 | 111 | 111 |

அட்டவணை 24: மூ.ச.சா. மற்றும் ப.மு.ஆ. ஆகியவற்றிற்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் திரட்டு (2013)

| நிகழ்ச்சித் திட்டம் | தொடர் | ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை | சித்தி % |
|---|---|---|---|
| மூலதனச் சந்தைச் சான்றிதழ் (ஆங்கில மொழி) | உரித்துடமைப் பிணையங்கள் | 3 | 66% |
| | கடன் பிணையங்கள் | 3 | 79% |
| | நிதியியல் ஒழுங்குவிதிகள் மற்றும் நீதிதெறிகள் | 3 | 56% |
| மூலதனச் சந்தைச் சான்றிதழ் (சிங்கள மொழி) | உரித்துடமைப் பிணையங்கள் | 1 | 56% |
| | கடன் பிணையங்கள் | 2 | 57% |
| | நிதியியல் ஒழுங்குவிதிகள் மற்றும் நீதிநெறிகள் | 2 | 48% |
| பதிவீடுசெய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (சிங்கள மொழிமூலம்) | பொருத்தமற்றது | 15 | 79% |
| பதிவீடுசெய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ஆங்கில மொழிமூலம்) | பொருத்தமற்றது | 13 | 87% |

## மூலதனச் சந்தைகளில் டிப்ளோமா (மூ.ச.டி.)

மூ.ச.டி. நிகழ்ச்சித்திட்டத்திற்கான விரிவுரைகளை நாம் ஐக்கிய இராச்சியத்தின் பிணையங்கள் மற்றும் முதலீடுகளுக்கான பட்டய நிருவகத்துடன் ஒன்றிணைந்து நடாத்தினோம். மீளாய்வுக் காலப்பகுதியில் 5 மாணவர்கள் டிப்ளோமாவினை நிறைவுசெய்து விருது வழங்கும் வைபத்தில் அவர்களது சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டார்கள். (உருவம் 25)

உருவம் 25: தகைமை வடிவமைப்பினை பூர்த்தி செய்த மாணவர்கள்



## தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி (தொ.தொ.அ.) நிகழ்ச்சித்திட்டங்கள்

மீளாய்வாண்டில் மூலதனச் சந்தையில் நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்களுக்கு அவர்கள் உள்ளூர் மற்றும் உலகளாவிய மூலதனச் சந்தைகளிலுள்ள சமீபத்தைய போக்குகளுடன் தொடர்ச்சியாக தம்மை மதிப்பிடுவதற்கும் நிகழ்வழிப்படுத்துவதற்கும் பொருத்தமான 9 தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி (தொ.தொ.அ) நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் பங்குத் தரகுக் கம்பனிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் துறைசார் தொழில்வல்லுனர்கள் உள்ளடங்களாக 1000 பங்குபற்றுனர்களுக்கு அதிகமானோரைக் கவர்ந்தன. நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்கள் கொ.ப.ப. ஆல் தமது வர்த்தக உரிமங்களைப் புதுப்பித்துக்கொள்வதற்கு கட்டாயமாக ஆகக்குறைந்தது ஒரு ஆண்டில் 2 தொ.தொ.அ. நிகழ்ச்சித்திட்டங்களிலாவது பங்கேற்க வேண்டுமென இ.பி.ப.ஆ. கட்டாயப்படுத்தியுள்ளது. (உருவம் 26)

உருவம் 26: 2013 இல் நடாத்தப்பட்ட தொ.தொ.அ.நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள்




- வாடிக்கையாளரைக் கையாளும் பங்குச் சந்தைத் தொழில்வல்லுனர்களுக்கான நெறிமுறை நடத்தை
- ஓர் முதலீட்டு ஆலோசகர் அறிந்திருக்கவேண்டிய நிதியியல் அறிக்கையிடலின் குறைபாடுகள் மற்றும் துளைகள் - I
- ஓர் முதலீட்டு ஆலோசகர் அறிந்திருக்கவேண்டிய நிதியியல் அறிக்கையிடலின் குறைபாடுகள் மற்றும் துளைகள் - II
- பங்குச் சந்தைத் தவறுகள்
- மூலாதாரப் பிணையங்களுக்கான அறிமுகம்
- இலங்கையின் முதலீட்டுத்துறையினை எவ்வாறு மேலும் கவர்ச்சிகரமாக்குதலும் தக்கவைப்பதும்
- இ.பி.ப.ஆ. சட்டத்தில் பிரேரிக்கப்பட்டுள்ள மாற்றங்களின் மேலோட்டம் - I
- இ.பி.ப.ஆ. சட்டத்தில் பிரேரிக்கப்பட்டுள்ள மாற்றங்களின் மேலோட்டம் - II
- முதலீட்டுத் தேக்க முகாமைத்துவத்தின் நடைமுறைத் தோற்றம்

## பங்குத்தரகர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் துறைசார் வல்லுனர்களிடையே மூலதனச் சந்தைப் பிரிவிலுள்ள நடைமுறை விடயங்களில் அறிவினை மேம்படுத்துவதற்கு வசதியளிக்கும் நோக்கத்துடன் இ.பி.ப.ஆ. 2013 ஒக்டோபர் 07 இல் பங்குத்தரகுக் கம்பனிகளின் உத்தியோகத்தர்களுக்கு "காளைகளுடனும் கரடிகளுடனும் எவ்வாறு தொடர்ந்து வாழ்வது" என்ற தலைப்பில் ஓர் காட்சியளிப்பினை நடாத்தியது.

## பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்

கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பில் பணிப்பாளர்களது பங்களிப்பின் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு இ.பி.ப.ஆ. 2013 ஏப்ரல் 04 இல் "ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனியில் பணிப்பாளர்களது கம்பனிச் சட்டக் கடப்பாடுகள்" என்ற தலைப்பில் ஓர் கருத்தரங்கினை நடாத்தியது.

## நடைமுறையிலுள்ள மற்றும் சாத்தியப்படக்கூடிய முதலீட்டாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

பங்கு வர்த்தகத்தின் அடிப்படை கொள்கை வழி மற்றும் நடைமுறைத் தோற்றம் ஆகியவற்றை வழங்கும் நோக்குடன் சாத்தியப்படக்கூடிய மற்றும் நடைமுறையிலுள்ள முதலீட்டாளர்களுக்கு நாம் 3 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தினோம். இந்த எட்டு கிழமை நிகழ்ச்சித்திட்டங்கள் மொத்தமாக 71 மாணவர்களைக் கவர்ந்தது.

## முதலீடு மேற்கொள்வதில் உயர்தரமான நிகழ்ச்சித்திட்டம்

பங்குச் சந்தையில் ஏற்கனவே முதலீடு செய்யும் நபர்களுக்கு அல்லது மூலதனச் சந்தை முதலீடுகளில் ஓரளவு அறிவுடையவர்களுக்கு "முதலிடுவதில் உயர்தர நிகழ்ச்சித்திட்டம்" எனும் தலைப்பிடப்பட்ட ஏழு கிழமைகளுக்கான நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தில் 33 பங்குபற்றுனர்கள் சமூகமளித்திருந்தார்கள்.

## நிதியியல்சார் ஊடகவியலாளர்களுக்கான டிப்ளோமா

மீளாய்வுக் காலப்பகுதியில் இ.பி.ப.ஆ. வங்கியியல் கற்கைக்கான மையத்துடன் (வ.க.மை.) கூட்டிணைந்து சிங்கள மொழிமூலத்தில் "ஊடகவியலாளர்களுக்கான பொருளியல், வங்கியியல் மற்றும்

# செயல்முறை மீளாய்வு

நிதியியல் டிப்ளோமா” என்ற தலைப்பில் ஓர் நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்தியது. பல்வேறு இலத்திரணியல் மற்றும் பத்திரிகை ஊடகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 55 ஊடகவியலாளர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் சமூகமளித்திருந்தார்கள். இவ்வாண்டில் இத்தகைய ஓர் நிகழ்ச்சித்திட்டமானது ஆங்கில மொழிமூலத்திலும் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறையிலுள்ள இலங்கையின் நிதியியல்சார் ஊடகவியலாளர்களைக் கற்பித்து மற்றும் பயிற்றுவிப்பதற்கும் மற்றும் இத்துறைக்கு சாத்தியப்படக்கூடிய இளம் ஊடகவியலாளர்களைக் கவர்வதற்காகவும் வடிவமைக்கப்பட்டன.

## தங்கப் பதக்கம் மற்றும் பணக் கொடைத் திட்டம்

பல்கலைக்கழகங்களில் மூலதனச் சந்தை தொடர்பான பாடங்களைப் பல்கலைக்கழக மாணவர்கள் கற்பதனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தங்கப் பதக்கம் மற்றும் பணக்கொடைத் திட்டத்தினை இ.பி.ப.ஆ. தொடர்ந்தது. இத்திட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகங்களில் மூலதனச் சந்தைப் பிரிவுகளில் மிகச்சிறந்து விளங்கும் பல்கலைக்கழக மாணவனுக்கு தங்கப் பதக்கம் மற்றும் பணப் பரிசு வழங்கப்படுகின்றது. மேற்கூறப்பட்ட திட்டம் தொடர்பாக பதினொரு (11) பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (பு.ஒ.) கைச்சாத்திடப்பட்டன.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைகழகங்களிலிருந்து ஏழு பல்கழைக்கழக மாணவர்களுக்கு மீளாய்வாண்டில் தங்கப் பதக்கங்கள் மற்றும் பணப் பரிசில்கள் என்பன வழங்கப்பட்டன.

- களனிப் பல்கலைக்கழகம்
- இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகம்
- இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகம்
- இலங்கையின் ரஜரட்ட பல்கலைக்கழகம்
- ருஹுண பல்கலைக்கழகம்
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## ஆய்வு

பாரிய பொருளாதாரம், பிணையங்கள் துறை, முற்றுமுழுதான சந்தையின் செயற்திறன் மற்றும் ஏனைய வெளித்தோன்றும் சந்தை / எல்லைப்புறச் சந்தைகளுடன் ஒப்பிடல்கள் என்பவற்றில் இ.பி.ப.ஆ. ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு வெளியீடுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருந்தன. ஏனைய விஷேட ஆய்வறிக்கைகளுக்கும் மேலதிகமாக திடீர் அறிக்கைகள் மற்றும் காட்சியளிப்புகளை வழங்குதல் என்பனவாகும்.

சில அரச நிதியங்களுடன் ஓர் தொடர்ச்சியான கலந்துரையாடலை முன்னெடுப்பதற்காகவும் ஓர் குறிப்பிட்ட முதலீட்டு மூலோபாயத்துடன் மூலதனச் சந்தையில் அவர்கள் முதலீடு செய்வதற்கு ஊக்குவிப்பதற்காகவும் காட்சியளிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு ஏனைய வெளித்தோன்றும் / எல்லைப்புற சந்தைகளில் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் கண்டுபிடிப்புகள் அரச நிதியங்களின் முக்கியமான முகாமையாளர்களுக்கு ஓர் முறையான விதத்தில் காட்சியளிக்கப்பட்டது.

தினசரிச் சந்தைச் சுருக்கம், சந்தைச் செயற்திறன் மீளாய்வுகள் மற்றும் சந்தை மற்றும் பாரிய பொருளாதாரத்திலான பரந்த ஆய்வுகள் என்பவற்றை பொருத்தமான பங்காளிகளுக்கு இ.பி.ப.ஆ. பரப்பியது.

## மூலதனச் சந்தை விழிப்புணர்வுகள்

முதலீட்டாளர்களுக்கு மூலதனச் சந்தையில் கிடைக்கக்கூடிய முதலீட்டு வாய்ப்புகளில் ஓர் நல்ல புரிந்துணர்வினை வழங்குவதற்கும், அவர்களது முதலீட்டுடன் ஒன்றுசேர்ந்துள்ள இடர்நேர்கைகளை மதிப்பிடுவதற்கும் மற்றும் நன்கு தகவலறிந்த முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வசதியளிப்பதற்காகவும் நாம் முதலீட்டாளர்களைக் கற்பிக்கின்றோம். நடைமுறையிலுள்ள முதலீட்டாளர்கள் மற்றும் நிதியியல் சாதுரியம் அற்ற முதலீட்டாளர்கள் ஆகியோருக்கு நாம் நிதியியல் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்ததுடன் பல வகையான முதலீட்டாளர்களை இலக்குவைத்தோம். சிறந்த ஆய்வு மற்றும் பயனுறுதிக்காக நாம் துறைசார் சங்கங்கள் மற்றும் சந்தைப் பங்குபற்றுனர்கள் ஆகியோருடன் கூட்டாகக் கருமமாற்றினோம்.

## இலத்திரணியல் ஊடகங்களூடான கல்வி

### “வரண” தொலைக்காட்சித் தொடர்

சிரச தொலைக்காட்சியுடன் இணைந்து இ.பி.ப.ஆ. “வரண” என்று தலைப்பிடப்பட்ட ஒரு மணிநேர நேரடி தொலைக்காட்சித் தொடரை ஒளிபரப்பியது. இத்தொடரானது 23 அத்தியாயங்களைக் கொண்டதுடன் நடைமுறையிலுள்ள முதலீட்டாளர்கள் மற்றும் சாத்தியப்படக்கூடிய முதலீட்டாளர்கள் மிகவும் எளிமையாகப் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் மூலதனச் சந்தையில் முதலிடுவது பற்றி அறிவினை பகிர்ந்தளிப்பதில் கவனஞ் செலுத்தியது.

இத்தொடரனாது பல்வேறு காலத்துக்கு ஏற்ற விடயங்களில் கலையகக் கலந்துரையாடல்களையும் மூலதனச் சந்தையில் முதலிடுவது தொடர்பான பல தலைப்புகளையும் உள்ளடக்கியதுடன் உரித்துடமை மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளில் முதலிடுவதில் உள்ள அனுகூலங்கள் மற்றும் இடர்நேர்கைகள் பற்றிய சமநிலையான தகவல்களையும் வழங்கியது. பிணையங்கள் சந்தையில் நன்கு பரிச்சயமான பிரசித்திபெற்ற நபர்கள் இக்கலந்துரையாடல்களில் பங்கேற்றார்கள். பார்வையாளர்கள் கேள்விகளைக் கேட்பதற்காக பிரத்தியேகமான ஓர் தொலைபேசி இணைப்பு காணப்பட்டதுடன் ஒவ்வொரு நிகழ்ச்சியும் பங்குத்தரகர் நிறுவனங்கள் மற்றும் நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் அனுசரணையில் புதிர்களையும்

உள்ளடக்கியிருந்தது. இப்புதிர்களின் வெற்றியாளர்கள் பங்குச் சந்தையில் மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி அலகுகளில் முதலீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருந்தார்கள்.

இதற்கும் மேலாக இ.பி.ப.ஆ. இலத்திரணியல் ஊடகங்களில் மூலதனச் சந்தையில் பங்காளர்களைக் கற்பிப்பதற்காக வழக்கமான பேட்டி நிகழ்ச்சிகளை நடாத்தியது. (உருவம் 27)

உருவம் 27: இ.பி.ப.ஆ. ஆல் நடாத்தப்பட்ட தொலைக்காட்சித் தொடர்கள்

| நிகழ்ச்சித்திட்டம் | அலைவரிசை | ஆரம்பம் | நிறைவு |
|---|---|---|---|
| வரண தொலைக்காட்சித் தொடர் | சிரச | 27 ஜனவரி 2013 | 14 ஜுலை 2013 |
| மூலதனச் சந்தைப் புதிர் | ஐடிஎன் | 22 டிசம்பர் 2012 | 16 பெப்ரவரி 2013 |

வரண தொலைக்காட்சித் தொடரின் வாராந்த புதிருக்கு குறுஞ்செய்திகள், தொலைபேசி அழைப்புக@டாக பார்வையாளர்களிடமிருந்து 31,137 பதில்கள் கிடைக்கப்பெற்றன. இத்தொலைக்காட்சித் தொடரிலிருந்து திறக்கப்பட்ட புதிய கணக்குகள் ரூபா 128 மில்லியன் புரள்வினை உருவாக்கியதுடன் நடைமுறையிலுள்ள முதலீட்டாளர்கள் மொத்தப் புரள்வாக ரூபா 780 மில்லியனை உருவாக்கினார்கள்.

மூலதனச் சந்தையில் முதலீடு செய்வது பற்றிய விழிப்புணர்வினை திடமான விதத்தில் மேம்படுத்துவதற்காகவும் மக்களுக்கு சந்தையினை விருத்திசெய்தவற்காக இ.பி.ப.ஆ. இன் முன்னெடுப்புகளைப் பரப்புவதற்காகவும் இலத்திரணியல் மற்றும் பத்திரிகை ஊடகங்கள் முக்கியமான பங்கினை வகித்தன. இ.பி.ப.ஆ. அதன் பத்து முக்கியமான திட்டங்கள், 2013 இல் இ.பி.ப.ஆ. ஆல் மேற்கொள்ளப்பட்ட முறைமைப்படுத்தல் முன்னெடுப்புகள் மற்றும் இ.பி.ப.ஆ. இன் எதிர்காலத் திட்டங்களை விளக்குவதற்காகவும் ஓர் ஊடகச் சுருக்க உரையை இ.பி.ப.ஆ. ஒழுங்கு செய்தது.

## பத்திரிகை ஊடகத்தினூடாகக் கற்பித்தல்

இ.பி.ப.ஆ. இன் பல விழிப்புணர்வு முன்னெடுப்புகளில் நிதியியல் அறிவு மட்டத்தினை மேம்படுத்துதல் மற்றும் நாட்டின் பல்வேறு பிராந்தியங்களில் பிணையங்கள் சந்தையில் பெருமளவு பொதுமக்கள் பங்குபற்றுவதற்கு வசதியளித்தல் என்பன முன்னணி வகித்தன. பல வருடங்களாக நாம் மூன்று மொழிகளிலும் கிழமைதோறும் மூலதனச் சந்தையில் முதலிடுதல் தொடர்பான முழுப்பக்க / அரைப்பக்க கட்டுரைகளைப் பிரசுரித்தோம். இதற்கு மேலாக பத்திரிகைகளுடன் கூட்டிணைந்து கிரமமான பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் பேட்டிகள் என்பவற்றை பிரசுரிக்கக்கூடியதாகவும் இவை இ.பி.ப.ஆ. இனைப் பற்றிய தோற்றத்தினை மேம்படுத்தியுள்ளதுடன் முதலீட்டாளர்களது நம்பகத்தன்மையினையும் மீள்கட்டியெழுப்பியுள்ளது. (உருவம் 28)

உருவம் 28: பத்திரிகைளில் இ.பி.ப.ஆ.ஆல் பிரசுரிக்கப்பட்ட கிழமைதோறுமான கட்டுரைத் தொடர்கள்

| பத்திரிகை | பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கை |
|---|---|
| டெய்லி மிரர் | 120 |
| டெய்லி லங்காதீப | 80 |
| அத | 82 |
| வீரகேசரி | 25 |
| தினக்குரல் | 12 |

## கருத்தரங்குகள் மற்றும் மன்றங்களினூடான விழிப்புணர்வு

ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (ஆ.ப.பொ.ஒ.) நிதியியல் முறைமைப்படுத்துபவர்கள் பயிற்சி முன்னெடுப்பு (நி.மு.ப.மு.) ஆகியவற்றின் பிராந்திய கருத்தரங்கு “சந்தை இடையீட்டாளர்களது மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு”

இ.பி.ப.ஆ. “சந்தை இடையீட்டாளர்களது மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு” எனும் தலைப்பில் ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (ஆ.ப.பொ.ஒ.) நிதியியல் முறைமைப்படுத்துபவர்கள் பயிற்சி முன்னெடுப்பு (நி.மு.ப.மு.) ஆகியவற்றின் பிராந்திய கருத்தரங்கினை செப்டம்பரில் உபசரணை செய்தது. இக்கருத்தரங்கானது கனிஷ்ட மற்றும் மத்திய மட்டத்திலான பிணையங்கள் முறைமைப்படுத்துபவர்களுக்காக பின்வருவனவற்றை கற்பிப்பதற்காக விருத்திசெய்யப்பட்டது. சந்தைக் கட்டமைப்பில் நவீன அபிவிருத்திகள் பற்றிக் கற்றல், முறைமைப்படுத்தலில் அதன் தாக்கத்தினை எவ்வாறு மதிப்பிடுவது, இடர்நேர்கை அடிப்படையான மேற்பார்வை மாதிரிக்கான உட்கட்டமைப்பு வடிவமைப்பு, கடன் வர்த்தகத்திற்கு பயன்படுத்தப்படும் கண்காணிப்பு முறைகள், கூட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கான மேற்பார்வை வடிவமைப்பு என்பனவாகும். பல உள்@ர் பங்குபற்றுனர்கள் மற்றும் ஹொங்கொங், மலேஷியா, தாய்லாந்து, இந்தியா, நேபாளம், கொரியக் குடியரசு, பிஜி, நைஜீரியா, மொரிஸியஸ் மற்றும் சீன மக்கள் குடியரசு ஆகிய பிராந்திய பங்குபற்றுனர்களும் கருத்தரங்கில் சமூகமளித்தார்கள்.

## ச.பி.ஆ.ஒ. இன் கம்பனி முறிகள் சந்தைகள் சமூக நிகழ்ச்சித்திட்டம்

ச.பி.ஆ.ஒ. உடன் கூட்டிணைந்து இ.பி.ப.ஆ. 2013 ஒக்டோபரில் ஓர் கம்பனி முறிகள் சந்தைகள் சமூக நிகழ்ச்சித்திட்டத்தினை உபசரணை செய்தது. ச.பி.ஆ.ஒ. - இளம்சி மற்றும் உலக வங்கி ஆகியவற்றினால் வெளித்தோன்றும் சந்தைகளில் கம்பனி முறிகள் சந்தையின் அபிவிருத்தி என்பதில் கூட்டாகப் பிரசுரிக்கப்பட்ட அறிக்கையானது முறிகள் சந்தைகளில் மேலும் கலந்துரையாடல்களுக்கு அழைப்பு விடுத்தது. எனவே இந்த நிகழ்ச்சித்திட்டமானது இவ்வறிக்கையின்

# செயல்முறை மீளாய்வு

கண்டுபிடிப்புகளை வலியுறுத்துவதில் இரண்டு நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகளின் தெளிவுபடுத்தலாகும். இக்கருத்தரங்கானது பின்வருவனவற்றை உள்ளடக்கிய பரவலான தலைப்புகளை ஆராய்ந்தது. முறைமைப்படுத்தல் வடிவமைப்பினை விருத்திசெய்தல், கம்பனி முதலீட்டாளர்களுக்கு ஓர் சந்தையை வடிவமைத்தல், முறிகள் சந்தைகள் மற்றும் நிதியியல் ஸ்திரத்தன்மை, முதன்மைச் சந்தை வடிவமைப்பினை விருத்திசெய்தல், தனிப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் ஏனைய கலப்பு பரிபாலனங்கள் என்பனவாகும். பல உள்@ர் மற்றும் தெற்காசியா, தூர கிழக்கு ஆசியா, ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு ஆகிய நாடுகளிலிருந்து வெளிநாட்டு பங்குபற்றுனர்களும் இக்கருத்தரங்கில் சமூகமளித்திருந்தார்கள்.

## முதலீட்டுத் தின நிகழ்வுகள்

அனுபவமிக்க முதலீட்டாளர்கள் மற்றும் நிதியியல் அறிவு குறைந்த முதலீட்டாளர்களுக்கு மூலதனச் சந்தையில் முதலீடு செய்வதற்கான அறிவினையும் வழிகாட்டியையும் வழங்குவதற்காக “2013 முதலீட்டுத் தினம்” ஒழுங்குசெய்யப்பட்டது. இந்நிகழ்வானது கொழும்புப் பங்குப் பரிமாற்றகம், பங்குத் தரகுக் கம்பனிகள், முதலீட்டு முகாமையாளர்கள், எல்லைக் கடன் வழங்குனர்கள், பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய முழுவதுமான மூலதனச் சந்தையினை ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து முதலீட்டாளர்கள் மூலதனச் சந்தையில் முதலிடுவது தொடர்பான ஓர் முற்றான அறிவைப் பெறுவதற்கான ஓர் நல்ல மேடையாகக் காணப்பட்டது. பிணையங்கள் துறையைச் சார்ந்த முக்கியமான தொழில்வல்லுனர்கள் மூன்று மொழிகளிலும் பரவலான தலைப்புகளில் நாள் முழுவதும் கூட்டத்திற்கு சொற்பொழிவாற்றினார்கள். இதற்கும் மேலாக முதலீட்டாளர்கள் மூன்று மொழிகளிலும் மூலதனச் சந்தையில் முதலிடுவது தொடர்பான காணொளி ஆவணப்படங்களைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றதுடன் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பினையும் வென்றார்கள்.

## ஏனைய விழிப்புணர்வு முன்னெடுப்புகள்

ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், நடைமுறையிலுள்ள மற்றும் சாத்தியப்படக்கூடிய முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக சம்மேளனங்களின் அங்கத்தவர்கள் போன்ற பல்வேறு இலக்குவைக்கப்பட்ட குழுக்களை “ஒரு அளவு எல்லோருக்கும் பொருந்தும்” என்ற அணுகுமுறையில் அணுகுவது பயனற்றதாகையினால் அவர்களது நிதியியல் அறிவு மட்டத்தினையும் தேவைகளையும் கருத்திற்கொண்டு நாம் செயலுாட்டும் முதலீட்டாளர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை விருத்திசெய்தோம். 2013 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு முன்னெடுப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (உருவம் 29)

உருவம் 29: விழிப்புணர்வு முன்னெடுப்புகள்




## ஏனைய முன்னெடுப்புகள்

### ஆயோஜனயட முலபுரமு புத்தக அங்குரார்ப்பணம்

முதலிடுவதில் உள்@ர் முதலீட்டாளர்களது அறிவை மேம்படுத்தவும் மற்றும் மூலதனச் சந்தையில் அவர்களது பங்குபற்றுதலை அதிகரிக்கவும் “ஆயோஜனயட முலபுரமு” என்று தலைப்பிடப்பட்ட புத்தகமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இப்புத்தகமானது பின்வரும் நடைமுறை மற்றும் பயனுள்ள தலைப்புகளை உள்ளடக்கியிருந்தது. பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு முன்னர் கருத்திற்கொள்ளவேண்டிய காரணிகள், பங்குகள் மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி அலகுகளில் முதலிடுவதற்கான படிப்படியான செயல்முறை, மூலதனச் சந்தையில் முதலீடு செய்யும்போது முதலீட்டாளர்களினால் மேற்கொள்ளப்படும் பொதுவான தவறுகள் மற்றும் பங்குகளை எவ்வாறு தெரிவுசெய்வது என்பனவாகும். “ஆயோஜனயட முலபுரமு” புத்தகமானது லங்காதீப பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரைத் தொடர்களை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் மூலதனச் சந்தையில் முதலிடுவது பற்றிச் சிங்கள மொழியில் எழுதப்பட்ட புத்தகங்களின் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்காக எழுதப்பட்டது.

### இ.பி.ப.ஆ, இன் இலச்சினையின் மீள் அங்குரார்ப்பணம்

இ.பி.ப.ஆ. இன் இலச்சினையானது இரண்டு தசாப்தங்களுக்கு மேல் வடிவமைக்கப்பட்டதனால் அதன் தற்போதைய முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்திப் பங்களிப்பினை சிறப்பாகப் பிரதிபலிப்பதற்காக இ.பி.ப.ஆ. இன் இலச்சினை மீள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இவ்விலச்சினையானது நிறுவனத்தின் சில முக்கிய அம்சங்களை வெளிப்படுத்துவதற்காக மீள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதுடன் அதன் பங்களிப்பும் குறிக்கோள்களும் இ.பி.ப.ஆ. இன் தனித்துவ அடையாளத்தினையும் வெளிப்படுத்தியது.

## மனித வளங்கள்

மனித மூலதனமானது ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கு முக்கிய காரணியாகும். எனவே இ.பி.ப.ஆணைக்குழுவின் பொறுப்பாண்மை மற்றும் இலங்கையின் மூலதனச் சந்தையினை விருத்திசெய்து முறைமைப்படுத்துவதற்கு தவிர்க்கமுடியாததாக முதன்மைப்படுத்தப்பட்ட "10 முக்கிய திட்டங்களது" முன்னெடுப்பு ஆகியவற்றை நிறைவேற்றுவதில் எமது ஊழியர்களது திறமை, ஆற்றல், அர்ப்பணிப்பு, பொறுப்பு மற்றும் தொழில்முறை என்பன இவ்வருடத்தில் தாராளமாகக் காண்பிக்கப்பட்டது.

## சேனைகளின் திரட்டு

கடந்த காலங்களைப் போன்று எமது முறைமைப்படுத்தல் பரிமாணத்தினைப் பலப்படுத்துவதற்காக நாம் இ.பி.ப.ஆ. க்கு ஆற்றல் மிக்க நபர்களை புதிதாகச் சேர்த்துக்கொண்டோம். இவ்வாண்டில், நிலையான சேனையாக ஒன்பது புதிய ஆட்சேர்த்தல்கள் பதிவுசெய்யப்பட்டதுடன் இது மூன்று பணிப்பாளர்களையும், மூன்று நிறைவேற்று அதிகாரிகளையும் மூன்று அதிகாரிகளையும் உள்ளடக்கியது. 2012 இல் மேற்கொள்ளப்பட்ட ஆறு ஆட்சேர்த்தல்கள் ஐந்து நிறைவேற்று அதிகாரிகளையும் ஒரு காரியாலய உதவியாளரையும் உள்ளடக்கியிருந்தது. இதற்கும் மேலாக "10 முக்கிய திட்டங்கள்" தொடர்பான வேலையை விரைவுபடுத்துவதற்காக மீளாய்வாண்டில் இரண்டு ஆலோசனை நிபுணர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். 2012 இல் இடம்பெற்ற ஒரு நிறைவேற்று அதிகாரியின் பதவி விலகளுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டில் பணிப்பாளர் நாயகம், ஒரு பணிப்பாளர், ஒர சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி, மூன்று நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் ஒரு அதிகாரி உள்ளடங்களாக ஏழு பதவி விலகல்கள் பதிவுசெய்யப்பட்டன. சேனைகளின் பத்து அங்கத்தவர்கள் அவர்கள் இ.பி.ப.ஆ. க்கு மேற்கொண்ட சேவை, அவர்களது சிறந்த செயற்திறன் மற்றும் நடத்தை ஆகியவற்றை இனங்கண்டு உயர்ந்த பதவிகளுக்கு பதவியுயர்வு அளிக்கப்பட்டார்கள். ஆறு நிறைவேற்று அதிகாரிகள் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி தரத்திற்கு பதவியுயர்வு அளிக்கப்பட்டதுடன் ஒரு அதிகாரி நிறைவேற்று அதிகாரியாகவும் நூல் நிலைய அதிகாரி நிறைவேற்றுனர் தரத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைக்கு ஏற்ப பதவியுயர்வு அளிக்கப்பட்டார்கள். உள்ளக வேட்பாளர்களுக்கு உயர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு, அவர்கள் ஆட்சேர்த்தல் கட்டளை விதிகளது ஏற்பாடுகளின்படி உரிய தகமையுடன் பொருத்தமான அனுபவத்தினையும் கொண்டிருப்பார்களாயின், எந்நேரமும் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. இதற்கமைய உதவிப் பணிப்பாளர் பதவியானது ஓர் போட்டித்தன்மையுடைய தெரிவுச் செயற்பாட்டின் பின்னர் உள்ளிருந்து சேர்க்கப்பட்டது. (உருவம் 30)

உருவம் 30: 31 டிசம்பர் 2013 இல் உள்ளவாறான சேனையின் தகவல்கள்

| வர்க்கம் | அங்கீகரிக்கப்பட்ட மொத்த சேனை | தொழிலில் தற்போது உள்ள சேனை | | வெற்றிடமாயுள்ள பதவிகள் |
|---|---|---|---|---|
| | | நிலையானது | ஓப்பந்தம் | |
| பணிப்பாளர் நாயகம் | 1 | - | | 1 |
| பிரதி பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | | - |
| பணிப்பாளர்கள் | 11 | 8 | 2 | 1 |
| உதவிப் பணிப்பாளர்கள் | 5 | 3 | | 2 |
| முகாமையாளர்கள் | 8 | 4 | | 4 |
| சிரேஷ்ட நிறைவேற்றுனர்கள் | 43 | 14 | | - |
| நிறைவேற்றுனர்கள் | | 24 | 1 | 4 |
| நிறைவேற்றுனரல்லாதோர் | 17 | 16 | | 1 |
| சிரேஷ்ட அலுவலக உதவியாளர்கள் | 10 | 6 | | - |
| அலுவலக உதவியாளர்கள் | | 1 | | - |
| அலுவலக துணையாளர் | | 1 | 2 | |
| மொத்தம் | 96 | 78 | 5 | 13 |

# செயல்முறை மீளாய்வு

2013 டிசம்பர் 31இல் 31 ஆண்களும் 52 பெண்களும் உள்ளடங்களாக மொத்தம் 83 ஊழியர்கள் இ.பி.ப.ஆணைக்குழுவில் சேவையாற்றினார்கள். வருடத்தின் இறுதியில் உள்ளவாறான ஊழியர்களது சேனைகளின் கூட்டு, சேவை ஆய்வியல், பால் ஆய்வியல் மற்றும் வயது ஆய்வியல் என்பன வரைபடங்களின் மூலம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (உருவங்கள் 31,32,33,34)

உருவம் 31: ஊழியர் வர்க்கத்தின் அடிப்படையில் சேனைகளின் திரட்டு




உருவம் 32: பால் ஆய்வியல்




உருவம் 33: வயது ஆய்வியல்




உருவம் 34: சேவைக்காலத் தகவல்கள்




## பயிற்சியும் அபிவிருத்தியும்

ஊழியர்களது கல்வி, பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றில் இ.பி.ப.ஆ.இன் கடப்பாட்டினை வெளிப்படுத்தும் வண்ணம் இ.பி.ப.ஆ. பட்டய நிதியியல் ஆய்வு நிருவகத்துடன் (ப.நி.ஆ.நி.), ஊழியர்களுக்கு முறைமைப்படுத்துபவர் உபகாரச் சலுகை நிகழ்ச்சித்திட்டத்தினை வழங்குவதற்காக, முக்கியமான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. எமது ஊழியர்கள் அவர்களது வேலைப் பலுவின் மத்தியிலும் இக்கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் அக்கறையுடன் ஈடுபடுவது உற்சாகமளிக்கக்கூடியதொன்றாகக் காணப்படுகின்றது. இதனை நிச்சயப்படுத்திய ப.நி.ஆ. நிருவகத்தின் குழுவிற்கு நாம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கல்வி, பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பன ஊழியர்களின் மறைந்துள்ள சாத்தியப்பாட்டினை அவிழ்த்துவிடுவதுடன் இது இ.பி.ப.ஆ. இன் பொறுப்பாண்மையினை பயனுள்ள விதத்தில் நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கும். எனவே இ.பி.ப.ஆ. ஊழியர்களுக்கு ஏனைய நியாயாதிக்கங்களில் போதுமான அளவு அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டங்களாவன ஏனைய முறைமைப்படுத்தல் முகவர்களமைப்புகளில் கடைப்பிடிக்கப்படும் சிறந்த நடைமுறைகள் தொடர்பாக ஊழியர்களுக்கு போதிப்பதுடன் இந்நிகழ்ச்சித்திட்டங்களில் எடுத்துக்காட்டப்படும் விடயம் தொடர்பான ஆய்வுகள் ஊழியர்களுக்கு முறைமைப்படுத்தல் சிக்கல்களை வெளிப்படுத்துவதுடன் ஏனைய முறைமைப்படுத்துபவர்கள் முகங்கொடுக்கும் முறைமைப்படுத்தல் சவால்கள் மற்றும் மூலதனச் சந்தைகள் முறையாக மற்றும் சிறப்பாக முறைமைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி போதுமான அளவு செயல்முறை விளக்கமளிக்கின்றது.

ச.பி.ஆ.ஒ. மற்றும் ஏனைய மூலதனச் சந்தை முறைமைப்படுத்தல் முகவரமைப்புகள், ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு போன்றவற்றிற்கு அவர்களது ஒத்துழைப்பு மற்றும் எமது ஊழியர்களுக்கு பாரியளவு நன்மை பயக்கும் பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டமைக்காகவும் எமது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இ.பி.ப.ஆணைக்குழுவின் பயிற்றுவித்தல் அங்கமானது ஊழியர்களுக்கு அவர்களது மூலதனச் சந்தை பற்றிய அறிவினைத் தரமுயர்த்துவதற்காக மூலதனச் சந்தை தொடர்பான பாடத்திட்டங்களை பின்பற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது. இதனைத் தவிர இ.பி.ப.ஆணைக்குழு ஊழியர்களுக்கு மேல்நிலை கல்வியை, பட்டப்படிப்பின் பின்னரான பல்கலைக்கழகப் பட்டம் உள்ளடங்களாக, தொடர்வதற்கான அனுசரணையினை வழங்குகின்றது. இது அவர்கள் அப்பாடத்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவுசெய்ததன் பின்னர் இ.பி.ப.ஆணைக்குழுவில் இரண்டு வருடங்கள் சேவையாற்றல் வேண்டும் என்ற ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டதாகும்.

இதற்கும் மேலாக ஊழியர்கள் பொருத்தமான உள்@ர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டங்களிலும் பங்கேற்றார்கள். இவை வங்கியல் கற்கைக்கான மையத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் உள்ளடக்கும். உள்@ர் மற்றும் வெளியூர் பயிற்சிச் செலவினமானது 2012 இல் செலவிடப்பட்ட ரூபா 18,961,953 உடன் ஒப்பிடும்போது 2013 இல் இது ரூபா 22,142,023 ஆகக் காணப்பட்டது. இதற்கும் மேலாக இ.பி.ப.ஆ. அதன் ஊழியர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழில்சார் அங்கங்களில் அங்கத்துவக் கட்டணமாக ரூபா 512,265/- ஐ செலவழித்ததுடன் இது 2012 இல் ரூ. 392,145/- ஆகக் காணப்பட்டது.

## ஊழியர் உட்படுத்துகை

ஊழியர்கள் முக்கியமாக "10 முக்கியமான திட்டங்கள்" தொடர்பில் அவர்களது திறமையுள்ள கருத்துக்களை வழங்குவதன் மூலம் அயராது பங்களித்ததுடன் இ.பி.ப.ஆணைக்குழுவின் மூலோபாய நோக்கங்களை அடைவதற்காக பல்-தொழிற்பாட்டு குழுக்களில் ஏனைய பங்காளிகளுடன் சேர்ந்து சேவையாற்றினார்கள்.

## ஊழியர் வெகுமதியளித்தல்

ஓர் கட்டமைக்கப்பட்ட செயற்திறன் மதிப்பீட்டுத் திட்டத்தின் அடிப்படையில் வெகுமதிகள் மற்றும் அங்கீகாரத்தைக் கொண்ட செயற்திறன் அடிப்படையிலான கலாச்சாரத்தினை நோக்கி நகர்வதன் முக்கியத்துவத்தினை நாம் இனங்கண்டோம். இதனை அடையும் பொருட்டு மக்கள் முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடு மற்றும் செயல்முறை என்பவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக ஓர் முறையான அணுகுமுறையினை கண்டறிந்து ஓர் பொருத்தமான வெகுமதி முகாமைத்துவ கொள்கையினை அறிமுகப்படுத்துவதற்காக நாம் ஓர் மனித வள ஆலோசகரை நியமித்தோம்.

## ஊழியர் நலன்கள்

ஊழியர்களது ஆரோக்கியம் இ.பி.ப.ஆ. இன் செல்வமாகும். எனவே ஓர் பயனுள்ள தொழில் வாழ்க்கை சமநிலையை அடைவதனை ஊக்குவிக்கும் முகமாக ஊழியர்கள் அவர்களுக்குத் தேவைப்படும்போது அவர்களது விடுமுறையினை பெற்றுக்கொள்வதற்கு போதுமான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் வேலைநாட்களில் ஊழியர்கள் நகரத்தை அடைவதற்கு முகங்கொடுக்கும் சிரமங்களின் காரணமாக அவர்களது அழுத்தத்தினைக் குறைக்கும் பொருட்டு ஓர் "இணக்கமுள்ள" ஊழியர் வருகை முறையொன்றும் காணப்படுகின்றது.

இதற்கும் மேலாக உள்வாரி மற்றும் வெளிவாரி ஆரோக்கிய நலன்கள், கடன் திட்டங்கள், வட்டி மானியம் என்பன ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பல நலன்புரி வசதிகளில் சிலவாகும்.

விளையாட்டுத் தினம் மற்றும் நத்தார் விருந்து போன்ற வருடாந்த நிகழ்ச்சி நிரல்கள் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் பரஸ்பர உணர்வுடன் நடந்துகொள்வதற்கு வசதியளிக்கின்றது. இது ஊழியர்களது மனவுறுதியை ஊக்குவிப்பதற்கும், மறைந்துள்ள ஊழியர்களது சாமர்த்தியத்தை இனங்காற்பதற்கும், ஒவ்வொருவருக்கிடையே புரிந்துணர்வினை ஏற்படுத்தவும் மற்றும் இ.பி.ப.ஆ. குடும்பத்தின் ஐக்கியத்தை மேம்படுத்தவும் துணைபுரிந்தது.

## கற்கைப் பயிற்சி

சமூகப் பொறுப்புணர்வினை நிறைவேற்றும்பொருட்டு தேசிய பல்கலைக்கழகங்களின் பல்கலைக்கழக மாணவர்கள் மூலதனச் சந்தை முறைமைப்படுத்தல் வடிவமைப்பில் தொழிற்பாடு தொடர்பான அனுபவத்தினையும், முன்னேற்றமாக தொழில்செய்யும் சூழலில் பொருத்தமான தொழில்சார் பயிற்சியினையும் பெறும்பொருட்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கு இ.பி.ப.ஆ. தொடர்ந்தும் உதவிக்கரம் நீட்டியது.

## தகவல் தொழில்நுட்பம்

மூலதனச் சந்தை அபிவிருத்தி திட்டச் செயற்பாடு நோக்கிய முன்னேற்றம் மற்றும் 10 முக்கிய திட்டங்களின் முன்னேற்றத்தினை பரப்புதல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவமளிக்கும் வண்ணம் நேரடி வரைபடங்கள் மற்றும் வர்த்தகத் தகவல்களுடன் பாவனையாளர் பரிச்சயம் மிக்கதாக இ.பி.ப.ஆ. இன் இணையத்தளமானது மேம்படுத்தப்பட்டது. 2012 இல் நிறைவேறிய கனணி வழங்கியின் மெய்நிகர்ப்படுத்தல் திட்டத்தின் அடுத்த கட்டமாக இ.பி.ப.ஆ. அதன் பிரயோகங்கள் மற்றும் தரவுகளை இயற்கையான தள விபரீதங்களிலிருந்தும் முழுமையான வன்பொருள் முறிவு அல்லது பிரயோக முறிவுகளிலிருந்தும் பாதுகாப்பதற்காக தகவல் தொழில்நுட்ப விபரீத மீட்சித் தளத்தை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தகவல் தொழில்நுட்ப விபரீத மீட்சித் தளத்துக்கான அவசியமானது ஓர் விபரீதம் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் தகவல் தொழில்நுட்ப முறையின் குறைவான செயலிழப்பிற்கும் மற்றும் குறைவான இடைமறிப்புடன் தகவல் தொழில்நுட்பச் சேவைகள் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்காகும்.

# செயல்முறை மீளாய்வு

### இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிருவகம் மற்றும் இ.பி.ப.ஆ. க்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

ஓர் அனுமதியளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்காக, பிரதானமாக பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர்களுக்கு பின்வருவனவற்றிற்காக இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிருவகம் மற்றும் இ.பி.ப.ஆ. இடையே ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இது கம்பனியின் விவகாரங்களை அதன் பங்காளர்களுக்காகவும் அவர்கள் சார்பிலும் பயனுள்ள விதத்தில் முகாமைப்படுத்துவதற்காக பணிப்பாளர்கள் அவசியமான அறிவுடன் பரிச்சயமாகிக்கொள்வதனையும், கம்பனி ஆளுகை, நிதியியல் அறிக்கையிடல் மற்றும் முறைமைப்படுத்தல் தோற்றப்பாடுகளில் அவர்களது திறமையினை மேம்படுத்தவதனையும் உள்ளடக்கியது. இக்குறிப்பிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது இரண்டு வருட காலத்திற்கு அமுலில் இருக்கும்.

### சட்டபூர்வமான நிதியங்கள்

### தீர்வை நிதியம்

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் 14யு மற்றும் 14டீ பிரிவுகளும், 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கத் திருத்தச்சட்டமும், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கத் திருத்தச்சட்டமும் 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் திருத்தச் சட்டமும் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றது.

### 14A

(1) அமைச்சரின் உத்தரவின் பேரில் குறிப்பிடப்பட்ட ஓர் கட்டணம், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறு உரிமம் பெற்ற பங்குப் பரிமாற்றகமொன்றில் பதிவாகும் ஒவ்வொரு பிணையங்கள் கொள்வனவு விற்பனையிலும் அல்லது அதன் விதிகளுக்கேற்ப கொள்வனவாளராலும் விற்பனையாளராலும் அறிவிக்கப்பட்ட கொள்வனவு விற்பனையிலும் தீர்வையாக கோரி வசூல் செய்து செலுத்தப்படவேண்டும். வெவ்வேறு வகைப்பட்ட பிணையங்களுக்கு வெவ்வேறு கட்டணங்கள் குறிப்பிடப்படலாம்.

2) இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையானது வேறு ஏதேனும் எழுதப்பட்டசட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் வேறு ஏதேனும் வரி அல்லது தீர்வைக்கு மேலாகச் செலுத்தப்படவேண்டும்.

### 14B

(1) 14 யு பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையை வரவு வைப்பதற்காக தீர்வக நிதியம் எனப்படும் நிதியமொன்று நிருவப்படவேண்டும்.

(2) ஆணைக்குழுவின் உத்தரவின்படி பின்வரும் நோக்கங்களுக்காக தீர்வை நிதியத்திலிருந்து கொடுப்பனவுகள் செய்யலாம் :

அ) பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு

ஆ) 38ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட நட்ட ஈட்டு நிதியத்தின் வரவிலுள்ள பணத்தை மேம்படுத்தல்

இ) ஆணைக்குழுவின் நோக்கங்களை அடையும் பொருட்டு அதனது அதிகாரம், கடமைகள், தொழிற்பாடுகள் போன்றவற்றை உபயோகிப்பதற்கும் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும்.

(3) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் விதத்தில் தீர்வை நிதியத்திலுள்ள பணத்தை ஆணைக்குழு முதலீடு செய்ய முடியும்.

இ.பி.ப.ஆணைக்குழுவினால் அறவிடப்படும் தீர்வைக் கட்டணமானது பல வாதப் பிரதிவாதங்களின் பின்னர் இரண்டாவது தடவையாக 2010 ஆகஸ்ட் 01 முதல் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.09% இலிருந்து 0.072% ஆகக் குறைக்கப்பட்டது. முன்னைய குறைப்பானது 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாந் திகதி தொடக்கம் பிரயோகத்திலுள்ள தீர்வைக் கட்டணம் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.1% இலிருந்து 0.09% ஆகக் குறைக்கப்பட்டது.

2011 ஜனவரி 1 முதல் இ.பி.ப.ஆ. தீர்வையானது ரூபா 50 மில்லியன் வரையான கொடுக்கல் வாங்கல்களுக்கு 0.072% உம், ரூபா 50 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு 0.045% உம் அறவிடப்படும்.

2006 பெப்ரவரி 15 தொடக்கம் தரகர், கொ.ப.ப., ம.வை. தி. மற்றும் இ.பி.ப.ஆ. க்குக் கொடுபடவேண்டிய கொடுக்கல் வாங்கல் கட்டணமானது, ஒரு வாடிக்கையாளர் ஒரே நாளில் ஒரே பிணையத்தை ஒரே தரகரூடாக வாங்கி விற்று அல்லது விற்று வாங்கியிருந்தால் ஒரு பக்கக் கொடுக்கல் வாங்கலுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது. பங்குக் கொடுக்கல் வாங்கல் வரியான 0.300% ஆனது இரண்டு பக்கக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் அறவிடப்படும்.

- கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை விற்பனை செய்த பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக இல்லாதவிடத்து மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு கொடுக்கல் வாங்கல் கட்டணம் குறைந்த எண்ணிக்கையிலான வாங்கிய அல்லது விற்ற பங்குகளுக்கு அறவிடப்படமாட்டாது.

- வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை விற்ற பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக உள்ளவிடத்து கொடுக்கல் வாங்கல் கட்டணம் விற்பனைக்கு அறவிடப்படமாட்டாது.

தரகுக்கூலி, கொ.ப.ப., ம.வை.தி. மற்றும் இ.பி.ப.ஆ. கொடுக்கல் வாங்கல் கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்து விலக்களிப்பதனை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக ஒரு வாடிக்கையாளரது ஒரே பிணையத்திலான மொத்தக் கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் கவனத்திலெடுக்கப்படும்.

நட்டஈட்டு நிதியத்தினைப் பலப்படுத்தவதற்காக 2009 ஆம் ஆண்டில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது.

இதற்கும் மேலாக ரூபா 100 மில்லியன் தீர்வை நிதியத்திலிருந்து தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்திற்குச் சமமாக 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் மாற்றல் செய்யப்பட்டது. திரட்டிய நிதியத்திற்கு மூன்று தடவைகள் மேற்கொண்ட மாற்றல்கள் முறையே ரூபா 276 மில்லியன், ரூபா 380 மில்லியன் மற்றும் ரூபா 94 மில்லியன் என்பன முறையே 30.09.2010, 24.09.2012 மற்றும் 31.12.2013 ஆகும்.

2013 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் இத்தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள தொகை ரூபா 2,193,243,136/- ஆகும். 2004 - 2013 வரையான காலப்பகுதியில் தீர்வை நிதியத்தின் நிலுவைகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது. (உருவம் 35)

உருவம் 35: தீர்வை நிதியத்தின் வளர்ச்சி




## நட்டஈட்டு நிதியம்

1987 இல் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு நிறுவப்பட்டதோடு நட்டஈட்டு நிதியமும் செயற்பாட்டிற்கு வந்துள்ளது. 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச்சட்டத்தின் 38 ஆம் பிரிவு (திருத்தியமைக்கப்பட்டது) பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

- உரிமம் பெற்ற பங்குத் தரகர் அல்லது உரிமம் பெற்ற பங்கு வர்த்தகர் ஒருவர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அதன் நிமித்தம் யாரேனும் ஒரு முதலீட்டாளருக்கு பணவகை நட்டமேற்படுமிடத்து அவருக்கு நட்டஈடு வழங்கும் பொருட்டு நட்ட ஈட்டு நிதியமொன்று நிறுவப்படல் வேண்டும்.

- இந்த நட்ட ஈட்டு நிதியமானது பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - இந்நிதியத்தின் நோக்கத்திற்காகப் பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட பணத்தொகைகள்.
    - 51 ஏ பிரிவின் கீழ் இந்நிதியத்திற்கு வரவு வைக்கப்படக்கூடிய பணத்தொகைகள். ( 51 ஏ பிரிவானது தவறுகளுக்கான ஒத்திணங்குதல் பற்றியது. )
    - இ.பி.ப.ஆ. சட்டத்தின் 14 பி பிரிவின் கீழ் தீர்வை நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படும் பணத்தொகைகள்.

- நட்டஈட்டு நிதியத்திலுள்ள பணத்தொகைகள் ஆணைக்குழுவினால் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கிணங்க முதலீடு செய்யப்படலாம்.

அமைச்சர் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கிடையிலிருந்து மூன்று அங்கத்தவர்களைத் தெரிவு செய்து நட்டஈட்டுக் குழுவை நியமிக்கவேண்டும்.

இக்குழுவானது செய்யப்படும் எந்த விண்ணப்பத்தின் தொடர்பிலும் நட்டஈட்டை மதிப்பிடுவதற்கும் வழங்குவதற்கும் பொறுப்பாயிருப்பதோடு, அத்தகைய மதிப்பீட்டின் அல்லது அளிப்பின் மீதான இக்குழுவின் தீர்மானம் இச்சட்டத்தின் தேவைகளுக்காக இறுதியானதும் முடிவானதுமாக இருத்தல் வேண்டும்.

இச்சட்டமானது நட்டஈட்டிற்கு விண்ணப்பம் செய்வதற்கான வழிமுறையையும் கூட வழங்குகிறது. இச்சட்டத்தின் பிரகாரம் இக்குழுவானது விண்ணப்பதாரரொருவரினால் செய்யப்படும் உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாகச் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களையும் பிற சான்றுகளையும் பரிசீலனை செய்த பின்னர், அல்லது எவ்வாறாயினும் விசாரணையொன்று நடத்தப்பட்டிருந்தால் அவ் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அந்த உரிமைக்கோரிக்கையை நட்டஈடு பெறுவதற்கு அனுமதிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம். நட்டஈட்டு நிதியத்தினைப் பலப்படுத்துவதற்காக தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது. இதுநாள்வரை நட்டஈட்டு நிதியத்திலிருந்து எவ்வித உரிமைக்கோரிக்கைகளும் செய்யப்படவில்லை.

31.12.2013 இல் இந்த நட்டஈட்டு நிதியத்தின் வரவு மீதி ரூபா 267,950,575/- ஆகும். 2004 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதியில் நட்டஈட்டு நிதியத்தின் வளர்ச்சி கீழே காண்பிக்கப்பட்டள்ளது. (உருவம் 36)

உருவம் 36: நட்டஈட்டு நிதியத்தின் வளர்ச்சி



# செயல்முறை மீளாய்வு

## தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் (தீ.உ.நி.)

தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் 1998 மே மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிதியம் கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் மத்திய வைப்பக முறைமையில் பங்குபற்றுபவர்களுக்கிடையேயான வர்த்தகங்களின் தீர்ப்பனவை உத்தரவாதமிடும் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் தொழிற்பாடு கீழே விளக்கப்பட்டுள்ளது.

- வர்த்தகமொன்று நிறைவேற்றப்பட்டவுடன் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் உடைமை மாற்றப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆந் திகதி கொ.ப.ப. ஆனது ஓரடுக்குத் தீர்வுச்சுற்றை அமுல்படுத்தியது. இதற்கமைய வாங்குபவர் T+3 மீது கொடுப்பனவு செய்யவேண்டும், அதாவது வர்த்தகம் செய்த நாள் உள்ளடங்களாக 4 ஆவது சந்தை தினத்தில் செலுத்தவேண்டும். விற்பனை செய்பவர் தீர்ப்பனவை T+3 ஆம் நாளன்று பெறுவார், அதாவது வர்த்தகம் செய்த நாளிலிருந்து 4ஆவது சந்தை நாளில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. உடமையின் மாற்றத்திற்கும் வரும்படிகளின் பெறுகைகளுக்குமிடையிலான ஒப்பீட்டளவிலான நீண்ட இடைவெளி பாதுகாப்பற்ற தீர்ப்பனவு இடர்நேர்கைக்கு வழிவகுத்துள்ளது. இது தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் தாபிக்கப்படும் தேவையை ஏற்படுத்தியுள்ளது.

- இந்நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக கீழ் காண்பவர்கள் பதவி வழி நியமனம் பெற்றுள்ளனர். பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர், கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் தலைவர், திறைசேரிப் பிரதிச் செயலாளர், பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் பணிப்பாளர் நாயகம்..

- இலங்கை அரசாங்கமானது சொல்லப்பட்ட இந்த நிதியத்திற்கு 50 மில்லியன் ரூபாயைக் கொண்ட தொகையை வழங்கியுள்ளது. இப்பணத்தொகை நம்பிக்கைப் பொறுப்பு உறுதி நியதிகளுக்கமைய அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியமானது மீள நிறைவாக்கல்களாக நன்கொடைகள், கொடைகள், தரும சாதனங்கள் போன்றவற்றைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது தரகர்களும் காப்பக வங்கிகளும் இந்நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவதில்லை.

- இந்நிதியத்தினைப் பலப்படுத்தும்பொருட்டு தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 100 மில்லியன் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் சமனாக இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. கொ.ப.பரிமாற்றகமும் ஜனவரி 2012 இல் இந்நிதியத்திற்கு ரூபா 100 மில்லியனை, தீ.உ.நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்புறுதியில் இத்தகைய பெறுகைகளுக்கு வசதியளிக்கும் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் மாற்றல் செய்வதற்கு இணங்கியுள்ளது.

எவ்வாறாயினும் தீ.உ.நி. ஆனது தீர்ப்பனவு இடர்நேர்கையை முறையாகத் தீர்ப்பதற்கு போதாததாகக் காணப்படுவதனால் இ.பி.ப.ஆ. இத் தீர்ப்பனவு இடர்நேர்கையை பயனுள்ள விதத்தில் சந்திக்கத்தக்க ஒரு மத்திய தீர்வக கூட்டுத்தாபனத்தை (ம.தீ.கூ.) நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ம.தீ.கூ. இன் மூலதனத்தின் ஒரு பகுதியாக தீ.உ.நிதியம் காணப்படலாம்.

இதுநாள் வரைக்கும் தீ.உ.நி. இலிருந்து எவ்வித உரிமைகோரல்களும் இடம்பெறவில்லை. 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆந் திகதியில் இந்நிதியத்தின் வரவில் உள்ள மீதி ரூபா 582,380,106/- ஆகும். 2004 முதல் 2013வரையான காலப்பகுதியில் தீ.உ.நிதியத்தின் வளர்ச்சியானது கீழே காண்பிக்கப்பட்டுள்ளது. (உருவம் 37)

உருவம் 37: தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் வளர்ச்சி



# மேலதிகத் தகவல்கள்

## நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்கள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள கம்பனிகள் பின்வரும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளை செயற்படுத்துவதற்கு உரிமமளிக்கப்பட்டுள்ளன:

1. சிலோன அஸட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிடட்ட்
   சிலோன் இன்டெக்ஸ் வன்ட்
   சிலோன் இன்கம் வன்ட்
   சிலோன் டுவரிசம் வன்ட்
   சிலோன் வைனான்சியல் செக்டர் வன்ட்
   சிலோன் ஐபிஓ வன்ட்
   சிலோன் எம்டிஐ ஷாரியா வன்ட்
   சிலோன் குளோபல் கொம்பக்ட் சஸ்டேனபிலிட்டி வன்ட்
   சிலோன் கிள்ட் எட்ஜ் வன்ட்
   சிலோன் டிரசரி பில் வன்ட்

2. கொம்ட்ரஸ்ட் எஸட் மனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
   கொம்ட்ரஸ்ட் ஈகியூட்டி வன்ட்
   கிரஸன்ட் ஐ வன்ட்
   கொம்ட்ரஸ்ட் மணி மார்க்கட் வன்ட்
   கொம்ட்ரஸ்ட் அதெல் முதாரபஹா வன்ட்
   கொம்ட்ரஸ்ட் கிள்ட் எட்ஜ் வன்ட்

3. என்டிபி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
   ஈகள் குரோத் அன்ட் இன்கம் வன்ட்
   ஈகள் கிள்ட் எட்ஜ் வன்ட்
   ஈகள் விக்ஸ்ட் இன்கம் வன்ட்
   ஈகள் குரோத் வன்ட்
   ஈகள் மணி வன்ட்
   ஈகள் மணி பிளஸ் வன்ட்
   சோர்ட் டேர்ம் எல்கேஆர் டிரசரி வன்ட்

4. சீ பேங்க் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
   சீ பேங்க் யுனிட் ட்ரஸ்ட்
   சீ பேங்க் சென்சரி குரோத் வன்ட்
   சீ பேங்க் கிள்ட் எட்ஜ் வன்ட் (மூடிய நிதியம்)
   சீ பேங்க் சேவிங்ஸ் பிளஸ் மணி மார்க்கட் வன்ட்
   சீ பேங்க் சுரகும்
   சீ பேங்க் கிள்ட் எட்ஜ் வன்ட் (பி சீரீஸ்)

5. நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
   நாமல் இன்கம் வன்ட்
   நாமல் மணி மார்க்கட் வன்ட்
   நெஷனல் ஈகியூட்டி வன்ட்
   நாமல் குரோத் வன்ட்
   நாமல் எகியுட்டி வெலுயூ வன்ட் (மூடிய நிதியம்)
   நாமல் ஐ பி ஓ வன்ட்
   நாமல் ஐ ஈல்ட் வன்ட்
   நாமல் ஷாரியா வன்ட்

6. வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
   வெர்ஸ்ட் கெப்பிட்டல் வெல்த் வன்ட்

7. ஜே பி வைனார்சியல் (பிரைவேட்) லிமிட்டட்
   ஜே பி வான்டேஜ் மணி மார்க்கட் வன்ட்
   ஜே பி வான்டேஜ் வெலுயூ ஈகியூட்டி வன்ட்

8. கார்டியன் எகியூட்டி எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
   கார்டியன் எகியூட்டி விக்ஸ்ட் இன்கம் வன்ட்
   கார்டியன் எகியூட்டி ஈக்கியூட்டி வன்ட்

9. கென்டோர் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
   கென்டோர் கெப்பிட்டல் குரோத் வன்ட்
   அமானா கென்டோர் ஷாரியா வன்ட்

10. எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
    எஸ்ட்ரூ கிள்ட் எட்ஜ் வன்ட்
    எஸ்ட்ரூ மணி மார்க்கட் வன்ட்

11. கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட்
    கெப்பிட்டல் எலாயன்ஸ் ஐ ஈல்ட் வன்ட்
    கெப்பிட்டல் எலாயன்ஸ் கோர்ப்பரேட் டிரசரி வன்ட்
    கெப்பிட்டல் எலாயன்ஸ் குவான்டிடேடிவ் ஈக்கியூட்டி வன்ட்
    கெப்பிட்டல் எலாயன்ஸ் கிள்ட் வன்ட்
    கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்மென்ட் கிரேட் வன்ட்
    கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்கம் வன்ட்
    கெப்பிட்டல் எலாயன்ஸ் கிள்ட் டிரேடிங் வன்ட்
    கெப்பிட்டல் எலாயன்ஸ் மீடியம் ரிஸ்க் டெட் வன்ட்
    கெப்பிட்டல் எலாயன்ஸ் கோர்ப்பரேட் டெட் கிள்ட் டிரேடிங் வன்ட்

12. ஆரர்பிக்கோ அட்டரக்ஷியா எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
    கேச் மெனேஜ்மன்ட் ட்ரஸ்ட் வன்ட்
    ஆரர்ப்பிக்கோ அட்டரக்ஷியா ரிபோ வன்ட்
    ஆரர்ப்பிக்கோ அட்டரக்ஷியா ஸ்ரீலங்கா பொன்ட் வன்ட் (கிள்ட் எட்ஜ் வன்ட்)
    ஆரர்ப்பிக்கோ அட்டரக்ஷியா எஸ் அன்ட் பி எஸ்எல் 20 இன்டெக்ஸ் வன்ட்

13. ஒரியன்ட் வெல்த் லிமிட்ட்
    ஒரியன்ட் கோப்பரேட் டெட் வன்ட்
    ஒரியன்ட் ஈக்கியூட்டி வன்ட்
    ஒரியன்ட் கிள்ட் எட்ஜ் வன்ட்

# மேலதிகத் தகவல்கள்

## பங்குத் தரகர்கள் மற்றும் பங்கு வர்த்தகர்கள்

31 டிசம்பர் 2013 இல் உள்ளவாறான உரிமம் பெற்ற பங்குத் தரகர்கள் மற்றும் பங்கு வர்த்தகர்கள்

| கம்பனி |
|---|
| எகியூட்டி ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| ஆஷா பிலிப் செக்கியூரிட்டிஸ் லிமிட்டட் |
| ஏசியா செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| எஸட்லைன் செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| பார்ட்லீட் ரெலிகெயார் செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| கென்டோர் ஈக்கியூட்டீஸ் லிமிட்டட் |
| கெப்பிட்டல் எலாயன்ஸ் லிமிட்டட் - (கடன் பிணையங்கள்) |
| கெப்பிட்டல் எலாயன்ஸ் செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| கெப்பிட்டல் ட்ரஸ்ட் செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| கிளரிட்ஜ் ஸடொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| சி டி சிமித் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஈக்கியூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| வெர்ஸ்ட் கெப்பிட்டல் மார்க்கட்ஸ் லிமிட்டட் - (கடன் பிணையங்கள்) |
| வெர்ஸ்ட் கார்டியன் ஈக்கியூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| ஐஐஎவ்எல் செக்கியூரிட்டிஸ் சிலோன் (பிரைவேட்) லிமிட்டட் |
| ஜே பி செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| ஜோன் கீல்ஸ் ஸ்டொக் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| லங்கா செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| எல் ஓ எல் சி செக்கியூரிட்டிஸ் லிமிட்டட் |
| நேஷன் லங்கா ஈக்கியூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| என் டி பி செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| நியூ வேர்ல்ட் செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| ரிச்சர்ட் பீரிஸ் செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| எஸ் சி செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| செரன்டிப் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| எஸ் எம் பி செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| சொவட்லொஜிக் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| சமர்வில் ஸ்டொக் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| டெப்ரோபேன் செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| டி கே எஸ் செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |

31 டிசம்பர் 2013 இல் உள்ளவாறான உரிமம் பெற்ற பங்கு வர்த்தகர்கள்

| கம்பனி |
|---|
| பார்ட்லீட் ரெலிகெயார் செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் - கடன் பிணையங்களில் வர்த்தகம் மேற்கொள்வதற்காக |
| கெப்பிட்டல் எலாயன்ஸ் லிமிட்டட் - கடன் பிணையங்களில் வர்த்தகம் மேற்கொள்வதற்காக |
| கெப்பிட்டல் எலாயன்ஸ் செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| வெர்ஸ்ட் கெப்பிட்டல் மார்க்கட்ஸ் லிமிட்டட் - கடன் பிணையங்களில் வர்த்தகம் மேற்கொள்வதற்காக |
| ஜே பி செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| செரன்டிப் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| எஸ் எம் பி செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட்- கடன் பிணையங்களில் வர்த்தகம் மேற்கொள்வதற்காக |
| சொவட்லொஜிக் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைைவேட்) லிமிட்டட் |

## பதிவிடப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்

2013 டிசம்பர் 31 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளோர்

எல்லை வழங்குநர்கள், முதலீட்டு முகாமையாளர்கள் மற்றும் ஒப்புரவாளர்கள் ஆகிய பிரிவுகளில் பதிவீடு செய்யப்பட்டுள்ள சந்தை இடையீட்டாளர்கள் கீழே தரப்பட்டுள்ளனர்.

| கம்பனி | எல்லை வழங்குநர்கள் | முதலீட்டு முகாமையாளர்கள் | ஒப்புரவாளர்கள் |
|---|---|---|---|
| எக்யூட்டி பார்ட்னர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | X | X | X |
| அதெல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | X | |
| அதெல் ஈக்யுட்டீஸ் லிமிட்டட் | X | | |
| அமானா கெப்பிட்டல் லிமிட்டட் | | X | |
| ஆர்ப்பிக்கோ அட்டரக்ஷியா எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| ஆஷா வைனான்சியல் சேர்விசஸ் லிமிட்டட் | X | | |
| எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட் | X | X | |
| இலங்கை வங்கி | | X | X |
| பாட்லீட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| பாட்லீட் வைனான்ஸ் லிமிட்டட் | X | | |
| பாட்லீட் ட்ரான்ஸ் கெப்பிட்டல் லிமிட்டட் | | X | X |
| கென்டோர் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| கெண்டோர் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட் | X | | |
| கெப்பிட்டல் எலாயன்ஸ் வைனான்ஸ் கம்பனி பி.எல்.சி | X | | |
| கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட் | | X | |
| கெப்பிட்டல் ட்ரஸட் கிரடிட் (பிரைவேட்) லிமிட்டெட் | X | | |
| கெப்பிட்டல் ட்ரஸ்ட் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| சீபேங் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | X | |
| சிலோன கார்டியன் இன்வெஸ்ட்மன்ட் ட்ரஸ்ட் பி.எல்.சி. | | | X |
| சிலோன் இன்வெஸ்ட்மன்ட் பி.எல்.சி. | | | X |
| சிலோன் ஜப்பான் செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| சிட்டிஸன் டெவலப்மன்ட் பிஸினஸ் வைனான்ஸ் பி.எல்.சி. | X | | |
| கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பி.எல்.சி | X | | X |
| கொம்ட்ரஸ்ட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| டீஎவ்சிசி வர்தன பேங்க் பி.எல்.சி. | X | | |
| வெஸ்ட் கெப்பிட்டல் எசட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | X | |
| வெஸ்ட் கெப்பிட்டல் மார்க்கட்ஸ் லிமிட்டெட் | X | | |
| ஜோர்ஜ் ஸ்டுவர்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | X | | |

# மேலதிகத் தகவல்கள்

## பதிவிடப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்

2013 டிசம்பர் 31 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளோர்

எல்லை வழங்குநர்கள், முதலீட்டு முகாமையாளர்கள் மற்றும் ஒப்புரவாளர்கள் ஆகிய பிரிவுகளில் பதிவீடு செய்யப்பட்டுள்ள சந்தை இடையீட்டாளர்கள் கீழே தரப்பட்டுள்ளனர்.

| கம்பனி | எல்லை வழங்குநர்கள் | முதலீட்டு முகாமையாளர்கள் | ஒப்புரவாளர்கள் |
|---|---|---|---|
| எக்யூட்டி பார்ட்னர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | X | X | X |
| அதெல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | X | |
| அதெல் ஈக்யுட்டீஸ் லிமிட்டட் | X | | |
| அமானா கெப்பிட்டல் லிமிட்டட் | | X | |
| ஆர்ப்பிக்கோ அட்டரக்ஷியா எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| ஆஷா வைனான்சியல் சேர்விசஸ் லிமிட்டட் | X | | |
| எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட் | X | X | |
| இலங்கை வங்கி | | X | X |
| பாட்லீட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| பாட்லீட் வைனான்ஸ் லிமிட்டட் | X | | |
| பாட்லீட் ட்ரான்ஸ் கெப்பிட்டல் லிமிட்டட் | | X | X |
| கென்டோர் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| கெண்டோர் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட் | X | | |
| கெப்பிட்டல் எலாயன்ஸ் வைனான்ஸ் கம்பனி பி.எல்.சி | X | | |
| கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட் | | X | |
| கெப்பிட்டல் ட்ரஸட் கிரடிட் (பிரைவேட்) லிமிட்டெட் | X | | |
| கெப்பிட்டல் ட்ரஸ்ட் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| சீபேங் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | X | |
| சிலோன கார்டியன் இன்வெஸ்ட்மன்ட் ட்ரஸ்ட் பி.எல்.சி. | | | X |
| சிலோன் இன்வெஸ்ட்மன்ட் பி.எல்.சி. | | | X |
| சிலோன் ஜப்பான் செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| சிட்டிஸன் டெவலப்மன்ட் பிஸினஸ் வைனான்ஸ் பி.எல்.சி. | X | | |
| கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பி.எல்.சி | X | | X |
| கொம்ட்ரஸ்ட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| டீவ்சிசி வர்தன பேங்க் பி.எல்.சி. | X | | |
| வெஸ்ட் கெப்பிட்டல் எசட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | X | |
| வெஸ்ட் கெப்பிட்டல் மார்க்கட்ஸ் லிமிட்டெட் | X | | |
| ஜோர்ஜ் ஸ்டுவர்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | X | | |
| கார்டியன் எக்யூட்டி எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | X | |
| கார்டியன் வன்ட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | X | |
| ஹட்டன் நஷனல் பேங்க் பி.எல்.சி. | X | | X |
| ஹொரய்ஸன் எசட் லிமிட்டட் | | X | |
| ஐஐஎவ்எல் கெப்பிட்டல் சிலோன் லிமிட்டட் | | X | |
| இனோவெஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| ஜேபி கிரடிட்(பிரைவேட்) லிமிட்டட் | X | | |
| ஜேபி வைனான்சியல் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| கெனங்கா இன்வெஸ்ட்மன்ட் கோர்ப்பரேஷன் லிமிட்டட் | | X | |
| எல்பி வைனான்ஸ் பி.எல்.சி. | X | | |

| கம்பனி | எல்லை வழங்குநர்கள் | முதலீட்டு முகாமையாளர்கள் | ஒப்புரவாளர்கள் |
|---|---|---|---|
| லங்கா ஒரிக்ஸ் வைனான்ஸ் கம்பனி பி.எல்.சி. | X | | |
| லெக்ஸின்டன் வைனான்ஸியல் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட் | X | | |
| லீனியர் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| மேர்ச்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீலங்கா பி.எல்.சி. | X | X | X |
| நேஷன் லங்கா கெப்பிட்டல் லிமிட்டட் | X | | |
| நேஷன் லங்கா ஈக்கியூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| நெஷனல் எசட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | X | |
| நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி. | X | | |
| நெஷனல் வெல்த் கோர்ப்பரேஷன் லிமிட்டட் | | X | |
| என் டி பி கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி | | | X |

| கம்பனி | எல்லை வழங்குநர்கள் | முதலீட்டு முகாமையாளர்கள் | ஒப்புரவாளர்கள் |
|---|---|---|---|
| என் டி பி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | X | |
| என்டபிள்யுஎஸ் வைனான்சியல் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட் | X | | |
| என்டபிள்யுஎஸ் மெனேஜ்மன்ட் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| ஒரியன்ட் வெல்த் லிமிட்டட் | | X | |
| ஒரியன் வன்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| பேன் ஏசியா பேங்கிங் கோபரேஷன் பி.எல்.சி. | X | | |
| பீப்பல்ஸ் பேங் | | X | |
| பீப்பல்ஸ் லீசிங் கம்பனி லிமிட்டெட் | X | | |
| பீப்பல்ஸ் மேர்ச்சன்ட் வைனான்ஸ் கம்பனி | X | | |
| ரிச்சர்ட் பீரிஸ் வைனான்சியல் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட் | X | | |
| சம்பத் பேங்க் பி.எல்.சி | X | | X |
| சனச எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| செரன்டிப் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | X | |
| செலான் பேங்க் பி.எல்.சி. | X | | |
| சிங்கர் வைனான்ஸ் (லங்கா) பி.எல்.சி. | X | | |
| சொவ்ட்லொஜிக் கெப்பிட்டல் பி.எல்.சி. | | X | |
| சொவ்ட்லொஜிக் வைனான்ஸ் பி.எல்.சி. | X | | |
| டிகேஎஸ் வைனான்ஸ் லிமிட்டட் | X | | |
| யூனியன் பேங் ஒப் கொழும்பு பி.எல்.சி. | X | | |
| வோல்டொக் மெகென்ஸி லிமிட்டெட் | X | X | |

### தீர்வக இல்லம் எனும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சந்தை இடையீட்டாளர்:

சென்ரல் டிபொசிடரி சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

### கடன் தரப்படுத்தல் முகவர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட சந்தை இடையீட்டாளர்:

விச் ரேடிங்ஸ் லங்கா லிமிட்டெட்
ராம் ரேடிங்ஸ் (லங்கா) லிமிட்டெட்
ஐசிஆர்ஏ லங்கா லிமிட்டெட்

# செய்கைப் பத்திரம்

| ஆண்டு | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|
| வருடாந்தப் புரள்வு (ரூ.மில்) பங்குகள் | 110,453.90 | 142,462.65 | 570,326.82 | 546,255.80 | 213,827.2 | 200,467.8 |
| உள்ளுர் (ரூ.மில்.) | 50,796.90 | 99,010.83 | 464,733.62 | 486,959.40 | 160,543.3 | 128,227.6 |
| வெளியூர் (ரூ.மில்.) | 59,656.90 | 43,451.82 | 105,593.20 | 59,296.40 | 53,283.9 | 72,240.2 |
| சந்தை நாட்கள் (எண்ணிக்கை) | 238 | 240 | 238 | 239 | 242 | 242 |
| தினசரி சராசரிப் புரள்வு (ரூ.மில.) பங்குகள் | 464.1 | 593.6 | 2,396.33 | 2,285.60 | 883.6 | 828.4 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகள் (எண்.மில்.) | 3,154.90 | 4,762.70 | 18,489.19 | 24,543.70 | 9,691.2 | 9,054.2 |
| உள்ளுர் (எண்.மில்) | 1,934.90 | 3,784.20 | 16,684.45 | 23,151.60 | 8,289.6 | 7,861.6 |
| வெளியூர் (எண்.மில்.) | 1,220.00 | 978.42 | 1,804.74 | 1,392.10 | 1,401.7 | 1,192.6 |
| வர்த்தகங்கள் (எண்ணிக்கை) பங்குகள் | 776,244 | 1,266,299 | 3,355,126 | 4,579,352 | 1,857,384 | 1,421,303 |
| உள்ளுர் (எண்ணிக்கை) | 730,415 | 1,190,822 | 3,225,041 | 4,463,404 | 1,796,868 | 1,355,380 |
| வெளியூர் (எண்ணிக்கை) | 45,829 | 75477 | 130,085 | 115,948 | 60,516 | 65,923 |
| புதிய பட்டியலிடல்கள் (எண்ணிக்கை) | 3 | 3 | 10 | 32 | 17 | 2 |
| பட்டியலிலிருந்து அகற்றப்பட்டவை (எண்ணிக்கை) | 2 | 6 | 1 | 0 | 2 | 1 |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகள் (எண்ணிக்கை) | 235 | 231 | 241 | 272 | 287 | 289 |
| வர்த்தகம் நடைபெற்ற கம்பனிகள் (எண்ணிக்கை) | 232 | 231 | 238 | 265 | 280 | 278 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ.மில்.) | 488.8 | 1,092.10 | 2,210.45 | 2,213.90 | 2,167.6 | 2,459.9 |
| சந்தை வி.உ.வி. வருட இறுதி (மடங்கு) | 5.4 | 16.6 | 25.16 | 15.8 | 15.9 | 15.9 |
| புரள்வு சந்தை மூலதனவாக்கத்திற்கு (%) | 16.9 | 18 | 34.5 | 24.7 | 9.8 | 8.7 |
| வருட இறுதி பங்கிலாப விளைவு (%) | 5.6 | 3 | 1.16 | 1.8 | 2.4 | 2.9 |
| விலை புத்தகப் பெறுமதி வருட இறுதி (மடங்கு) | 0.8 | 1.7 | 2.98 | 2 | 2.1 | 2 |
| சந்தை மூலதனவாக்கம் மொ.உ.உ. இன் % ஆக | 11.1 | 22.6 | 39.4 | 33.8 | 28.6 | 32.4 |

## விலைச் சுட்டிகள்

| ஆண்டு | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|
| அனைத்து பங்கு விலைச் சுட்டி (அ.ப.வி.சு.) | 1,503.00 | 3,385.55 | 6,635.87 | 6,074.40 | 5,643.0 | 5,912.80 |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | -40.9 | 125.25 | 96.01 | -8.5 | (7.1) | 4.8 |
| மிலங்கா விலைச் சுட்டி (மி.வி.சு.) | 1,631.30 | 3,849.38 | 7,061.46 | 5,229.20 | 5,119.1 | - |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | -50.4 | 135.97 | 83.44 | -25.9 | (2.1) | - |
| எஸ் அன்ட் பி ஸ்ரீலங்கா 20 | | | | | 3085.3 | 3,263.90 |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | | | | | | 5.8 |

## மொத்த வருமானச் சுட்டிகள்

| ஆண்டு | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|
| அபவிசு இல் மொத்த வருமானச் சுட்டி (அ.ப.வி.சு.) | 1,783.60 | 3,944.90 | 7,899.11 | 7,362.83 | 7037.3 | 7,584.40 |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | -38.1 | 121.18 | 100.24 | (6.79) | (4.4) | 7.8 |
| மிவிசு இல் மொத்த வருமானச் சுட்டி (அபமொவசு) | 1,962.50 | 4,506.24 | 8,481.73 | 6,393.00 | 6399.4 | - |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | -47.3 | 129.6 | 88.22 | (24.63) | 0.1 | |
| எஸ் அன்ட் பி ஸ்ரீலங்கா 20 இல் மொத்த வருமானச் சுட்டி | | | | | 3,780.4 | 4,132.4 |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | | | | | | 9.3 |

| ஆண்டு | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|
| **தேசியமல்லாத நடவடிக்கைகள்** | | | | | | |
| வருடாந்தப் புரள்வு (ரூ.மில்.) | 59,656.90 | 43,451.82 | 105,593.20 | 59,296.40 | 53,283.9 | 72,240.20 |
| கொள்வனவுகள் (ரூ.மில்.) | 66,632.20 | 43,057.32 | 92,425.53 | 49,776.80 | 72,614.2 | 83,607.00 |
| விற்பனைகள் (ரூ.மில்.) | 52,681.70 | 43,846.32 | 118,760.87 | 68,816.00 | 33,953.6 | 60,873.30 |
| தேறிய வெளிநாட்டுப் பாய்ச்சல் | 13,950.50 | -789 | (26,335.34) | -19,039.20 | 38,660.7 | 22,733.70 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகள் (எண்.மில்.) | 1,220.00 | 978.41 | 1,804.74 | 1,392.11 | 1,401.7 | 1,192.60 |
| கொள்வனவுகள் (எண்ணிக்கை மில்.) | 1,286.20 | 908.97 | 1,541.49 | 1,186.80 | 1,520.6 | 1,282.50 |
| விற்பனைகள் (எண்ணிக்கை மில்.) | 1,153.90 | 1,047.87 | 2,067.99 | 1,597.42 | 1,282.7 | 1,102.6 |
| வர்த்தகங்கள் | 45,829 | 75,477 | 130,085 | 115,948 | 60,516 | 65,923.0 |
| கொள்வனவுகள் (எண்ணிக்கை) | 50,052 | 69,431 | 115,071 | 112,246 | 71,944 | 77,511.0 |
| விற்பனைகள் (எண்ணிக்கை) | 41,606 | 81,523 | 145,100 | 119,651 | 49,088 | 54,335.0 |
| **கடன் சந்தை** | | | | | | |
| *கம்பனிக் கடன்கள்* | | | | | | |
| புரள்வு (ரூ. 000) | 102,639.30 | 136,765 | 72,288 | 2,690,664.40 | 75,717.1 | 2,229,221.3 |
| வர்த்தகங்களின் எண்ணிக்கை | 27 | 42 | 92 | 62 | 39 | 173 |
| வர்த்தகம் செய். தொ.க.எண்ணிக்கை (000) | 953.5 | 1,020 | 693 | 25,861 | 740.4 | 19,998.8 |
| சந்தை மூலதனவாக்கம் (மில்.) | N/A | N/A | N/A | 37,859 | (46,311.0) | |
| *அரசாங்கக் கடன்கள்* | | | | | | |
| புரள்வு (ரூ. 000) | 195,157.40 | 98,977 | 45,673 | 28,356.80 | 6,128.0 | |
| வர்த்தகங்களின் எண்ணிக்கை | 69 | 42 | 18 | 7 | 2 | |
| வர்த்தகம் செய். பிணை. எண்ணிக்கை (000) | 208,182.60 | 102,778 | 46,794 | 28,912 | 6,743.6 | |
| **நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள்** | | | | | | |
| தேறிய சொத்தின் பெறுமதி (ரூ.மில்.) | 6,780 | 9,952 | 22,228 | 24,059 | 31,062 | 54,304 |
| அலகுடமையாளர்கள் (எண்ணிக்கை) | 22,685 | 23,117 | 24,649 | 26,636 | 27,952 | 29,648 |
| வழங்கப்பட்ட அலகுகள் (எண். 000) | 638,112 | 564,500 | 1,159 | 1,506 | 2,251 | 4,134 |
| பங்குகளில் முதலீடு (ரூ.மில்.) | 2,589 | 6,036 | 11,349 | 9,555 | 8,944 | 9,453 |
| தி.உண்டியல்களில் முதலீடு (ரூ.மில்.) | 2,903 | 3,363 | 9,289 | 10,326 | 5,449 | 17,825 |
| ஏனைய முதலீட்டுக்கருவிகளில் முதலீடு ** (ரூ.மிலி.) | 1,293 | 1,106 | 1,223 | 4,186 | 16,596 | 27,000 |

மூலம்: கொ.ப.ப. நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளது முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்

** வணிகத் தாள்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள் மற்றும் வங்கி வைப்புகள்

# நிதியியல் அறிக்கைகள் - இ.பி.ப.ஆ.


கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 74

நிதி நிலைமைக் கூற்று 77

நிதிச் செயற்திறனின் கூற்று 78

ஒதுக்கங்களின் மாற்றங்களுக்கான கூற்று 79

காசுப் பாய்ச்சல் கூற்று 80

காசுப் பாய்ச்சல் கூற்று - தீர்வை நிதியம் 81

காசுப் பாய்ச்சல் கூற்று - நட்ட ஈட்டு நிதியம் 82

கணக்கீட்டுக் கொள்கைகள் 83

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 86




# நிதியியல்
# அறிக்கைகள்

## நிதியியல் அறிக்கைகள் - தீ.உ.நி.


கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 97

நிதி நிலைமைக் கூற்று - 100

நிதிச் செயற்திறன் கூற்று - 101

தேறிய சொத்துக்களின் மாற்றங்களுக்கான கூற்று 102

காசுப் பாய்ச்சல் கூற்று - 103

கணக்கீட்டுக் கொள்கைகள் - 104

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் - 105




# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. : எவ்பீ/கே/எஸ்ஈசீ/எவ்ஏ/2013
ඔබේ අංකය / உமது இல. / Your No. :
දිනය / திகதி / Date : 2014 மே 27

தலைவர்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்றுக்கள், ஒதுக்கத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 37(2) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

**கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

**அபிப்பிராயம்**

-------------------------

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**பாராளுமன்றத்திற்கான அறிக்கை**

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்திற்கான என்னுடைய அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஒப்பம்: எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

3

# நிதி நிலைமைக் கூற்று

## 2013 டிசம்பர் 31 இல்

| | குறிப்பு | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதி,உபகரணங்கள்t | 1 | 47,739,360 | 56,412,469 |
| தீர்வை நிதியம் | 2 | 48,664,796 | 37,905,567 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 4 | 934,534 | 628,884 |
| வருமதிகள் | 5 | 2,663,416 | 1,784,380 |
| தீர்வை நிதியம் | 2 | 2,144,578,340 | 2,059,189,357 |
| நட்ட ஈட்டு நிதியம் | 3 | 267,950,575 | 237,461,686 |
| வைப்புகள், முற்பணம், முற்கொடுப்பனவுகள் | 6 | 8,000,888 | 4,915,002 |
| காசும் காசுக்குச் சமனானவையும் | 7 | 24,811,873 | 28,105,784 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 2,545,343,782 | 2,426,403,129 |
| **நிதியங்களும் பொறுப்புகளும்** | | | |
| **ஈடுபடுத்தப்பட்ட நிதியங்களும் ஒதுக்கங்களும்** | | | |
| திரண்ட நிதியம் | 8 | 6,532,068 | 9,508,528 |
| தீர்வை நிதியம் | 9 | 2,193,243,136 | 2,097,094,924 |
| நட்ட ஈட்டு நிதியம் | 10 | 267,950,575 | 237,461,686 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| குத்தகைக் கடன் கொடுநர் | 11 | - | 619,317 |
| கொடை-தீர்வை நிதியத்திலிருந்து மூலதனச் செலவுகளுக்கான மாற்றல்கள் | 12 | 42,207,192 | 50,050,720 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடு | 13 | 21,606,766 | 20,012,197 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கடன் கொடுநர்களும் அட்டுறுக்களும் | 14 | 8,807,432 | 6,458,770 |
| பெற்ற முற்பணங்கள் | | 4,418,064 | 4,238,142 |
| குத்தகைக் கடன்கொடுநர் | 11 | 758,549 | 958,848 |
| **மொத்த நிதியங்களும் பொறுப்புக்களும்** | | 2,545,343,782 | 2,426,403,129 |

86 முதல் 96 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஓர் இணைந்த பாகமாகவுள்ளது. இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இந்த நிதிக்கூற்றின் தயாரிப்பிற்கும் சமர்ப்பித்தலுக்கும் பொறுப்பானவர்களாவர்.

இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்காகவும் அதன் சார்பிலும்

தம்மிக்க பெரேரா
பிரதி பணிப்பாளர் நாயகம் / பொறுப்பதிகாரி
இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

நாலக கொடஹேவ
தலைவர்
இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்கு

கொழும்பு.
12 மே 2014

# நிதி செயற்திறன் கூற்று

## 31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த வருடத்திற்கானது

| | குறிப்பு | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| தரகர் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | | 4,163,816 | 4,999,634 |
| நிர்வாகக் கட்டணங்கள் | | 3,225,006 | 1,487,168 |
| கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் - நி.சே.க.ப. | | 7,009,985 | 14,312,304 |
| வெளியீடுகளின் விற்பனை | | 144,350 | 18,750 |
| நானாவித வருமானம் | | 16,506 | 1,894,972 |
| சொத்துக்கள் விற்பனை மீதான இலாபம் / நட்டம் | | (11,032) | 321,865 |
| மானியங்களின் அங்கீகாரம் | 12 | 15,276,487 | 13,981,944 |
| | | 29,825,178 | 37,016,637 |
| **கழிக்க: செலவினம்** | | | |
| ஆளணிச் செலவுகள | 15 | (159,203,688) | (140,311,036) |
| நிர்வாக, தாபனச் செலவுகள் | 16 | (110,001,824) | (78,622,641) |
| மூலதனச் சந்தை அபிவிருத்திச் செலவுகள் | 17 | (66,228,055) | (24,478,437) |
| நிதிச் செலவினங்கள் | 18 | (85,112) | (102,328) |
| மொத்தச் செலவினம் | | (335,528,679) | (243,514,442) |
| வருமானத்திற்கும் மேலான மிகைச் செலவினம் | | (305,703,501) | 280,531,079 |
| தொழிற்பாட்டுச் செலவுகளை சந்திப்பதற்கு தீர்வை நிதியத்திலிருந்து செய்யப்பட்ட மாற்றல்கள் | | 318,547,041 | 218,522,637 |
| இவ்வாண்டிற்கான மிகை /(பற்றாக்குறை) | | 12,843,540 | 499,053,716 |

86 முதல் 96 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஓர் இணைந்த பாகமாகவுள்ளது.

# ஒதுக்கங்களின் மாற்றங்களுக்கான கூற்று

## 31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த வருடத்திற்கானது

| | குறிப்புகள் | ஒதுக்கங்கள் ரூபா | திரண்ட நிதியம் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|
| 2012 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி | | - | 12,556,660 | 12,556,660 |
| முன்னைய வருடச் செம்மையாக்கல்கள்- மூசகப இன் வருமான அங்கீகாரத்திற்கான மாற்றங்கள் | | - | (5,072,967) | (5,072,967) |
| திறைசேரி உண்டியலில் முதலீடு செய்வதற்காக தீர்வை நிதியத்திற்கு மாற்றல் | | - | (10,000,000) | (10,000,000) |
| | | - | (2,516,307) | (2,516,307) |
| இவ்வருடத்திற்கான வருமானத்திலும் மேலான மிகைச் செலவினம் | | - | (206,497,805) | (206,497,805) |
| தீர்வை நிதியத்திலிருந்து நிதி மாற்றல்கள் | | - | 218,522,637 | 218,522,637 |
| இக்காலப் பகுதிக்கான தேறிய மிகை/பற்றாக்குறை | | - | 12,024,832 | 12,024,832 |
| 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | | | 9,508,528 | 9,508,528 |
| 2013 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி | | - | 9,508,528 | 9,508,528 |
| திறைசேரி உண்டியலில் முதலீடு செய்வதற்காக தீர்வை நிதியத்திற்கு மாற்றல் | | - | (16,000,000) | (16,000,000) |
| | | - | (6,491,472) | (6,491,472) |
| இவ்வருடத்திற்கான வருமானத்திலும் மேலான மிகைச் செலவினம் | | - | (305,703,501) | (305,703,501) |
| தீர்வை நிதியத்திலிருந்து நிதி மாற்றல்கள் | | - | 318,548,041 | 318,547,041 |
| இக்காலப் பகுதிக்கான தேறிய மிகை/பற்றாக்குறை | | - | 12,843,540 | 12,843,540 |
| 2012 டிசம்பர் 31 இல் இருந்தவாறான மீதி | | - | 6,356,068 | 6,356,068 |

86 முதல் 96 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஓர் இணைந்த பாகமாகவுள்ளது.

# காசுப் பாய்ச்சல் கூற்று

## 31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த வருடத்திற்கானது

| | குறிப்புகள் | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| தீர்வை நிதியத்திலிருந்து மாற்றங்கள் செய்யப்பட்ட பின் தேறிய மிகை | | 12,843,540 | 12,024,832 |
| சீராக்கல்கள் | | | |
| பெறுமானத் தேய்வு | 1 | 16,026,137 | 15,333,194 |
| ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் விற்பனை மீதான இலாபம் / (நட்டம்) | | 11,032 | (321,865) |
| மானியங்களின் அங்கீகாரம் | 12 | (15,276,487) | (13,981,944) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 13 | 2,997,885 | 5,584,640 |
| முன்னைய ஆண்டுக்கான செம்மையாக்கல்கள் | 8 | | (5,072,967) |
| தொழிற்படு மூலதன மாற்றத்துக்கு முன்னரான தேறிய மிகை | | 16,602,457 | 13,565,890 |
| **தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள்** | | | |
| இருப்புக்களின் (அதிகரிப்பு) / குறைவு | | (305,650) | (98,428) |
| பெறத்தக்கவைகளின் (அதிகரிப்பு) / குறைவு | | (879,036) | (929,350) |
| வைப்புகள், முற்பணம், முற்பணக் கொடுப்பனவுகளின் (அதிகரிப்பு) / குறைவு | | (3,085,886) | (2,402,103) |
| முற்பணப் பெறுகைகளின் அதிகரிப்பு / (குறைவு) | | 179,922 | 1,099,753 |
| கடன் கொடுநர், அட்டுறுகளின் அதிகரிப்பு / (குறைவு) | | 2,348,662 | 551,320 |
| | | (1,741,988) | (1,778,808) |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட காசு | | 14,860,469 | 11,787,082 |
| இவ்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடை | | (1,403,316) | - |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல் | | 13,457,153 | 11,787,082 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதி, உபகரணங்களின் கொள்வனவு | 1 | (7,432,959) | (11,106,862) |
| திறைசேரி உண்டியல் முதலீட்டிற்காக தீ.நி. கான மாற்றல் | | (16,000,000) | (10,000,000) |
| ஆதனங்கள், பொறித்தொகுதி, உபகரணங்களின் விற்பனை வருமானம் | | 68,552 | 1,005,384 |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல் | | (23,364,407) | (20,101,478) |
| **நிதியளித்தற் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| தீர்வை நிதியத்திலிருந்து மூலதன மாற்றல்கள | 12 | 7,432,959 | 11,106,862 |
| நிதிக்குத்தகையில் அதிகரிப்பு (குறைவு) | | (819,616) | (2,377,952) |
| நிதியளித்தற் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு | | 6,613,343 | 8,728,910 |
| காசும் காசுக்குச் சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு (குறைவு) | | (3,293,911) | 414,513 |
| இக் காலப்பகுதியின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளும் (குறிப்பு - அ) | | 28,105,784 | 27,691,271 |
| இக் காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளும் (குறிப்பு - ஆ) | | 24,811,873 | 28,105,784 |
| **குறிப்பு (அ)** | | | |
| **தொடக்கக் காலப்பகுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளும்** | | | |
| வங்கியிலுள்ள காசு | | 28,065,784 | 27,651,271 |
| கையிலுள்ள காசு | | 40,000 | 40,000 |
| | | 28,105,784 | 27,691,271 |
| **குறிப்பு (ஆ)** | | | |
| **இக்காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளும்** | | | |
| வங்கியிலுள்ள காசு | 7 | 24,771,873 | 28,065,784 |
| கையிலுள்ள காசு | 7 | 40,000 | 40,000 |
| | | 24,811,873 | 28,105,784 |

86 முதல் 96 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஓர் இணைந்த பாகமாகவுள்ளது.

# தீர்வை நிதியம் காசுப் பாய்ச்சல் கூற்று

31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த வருடத்திற்கானது

| | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| தீர்வை நிதியத்தின் தேறிய அதிகரிப்பு / குறைவு | 96,148,212 | (142,784,474) |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தேறிய மிகை/பற்றாக்குறை | 96,148,212 | (142,784,474) |
| **தொழிற்படு மூலதனத்தின் மாற்றம்** | | |
| ஊழியர் கடன்களின் (அதிகரிப்பு) / குறைவு | 484,191 | (2,957,373) |
| தீர்வை வருமதிகளின் (அதிகரிப்பு) / குறைவு | (1,168,813) | |
| வருமதிகளின் (அதிகரிப்பு) / குறைவு - இ.பி.ப.ஆ. | (216,659) | |
| நிலையான வைப்புகள் மீது பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு) /குறைவு | (84,209,335) | 807,815 |
| திறைசேரி உண்டியல் மீது பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு) /குறைவு | 86,464,170 | (6,817,772) |
| அரச நிறுவனங்களின் மிகை நம்பிக்கை நிதியத்திலிருந்து | | |
| பெறத்தக்க மூலதன இலாபங்களின் (அதிகரிப்பு / குறைவு) | 107,627 | 2,803,527 |
| வாடகை வைப்பின் (அதிகரிப்பு) / குறைவு | (11,408,568) | (1,614,420) |
| செலுத்தவேண்டியவைகளின் (அதிகரிப்பு) / குறைவு | 11,771 | |
| | (9,935,616) | (7,778,223) |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல் | (86,212,596) | (150,562,697) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| அரச நிறுவனங்களின் தற்காலிக மிகை நிதியத்தில் முதலீடு | (25,096,023) | 295,229,862 |
